DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
homesbyraghu@gmail.com — Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX


ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Selva Karthigesu
Sales Representative
416-648-9757
CENTURY 21 Innovative Realty Inc.

MORTGAGE
மோர்ட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1329 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 24, 2021

# தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் கொன்சர்வேட்டிவ் கட்சிக்குள் தோன்றிய அதிகளவு எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டிய சவாலுக்குள் எரின் ஓ டூல்



நடந்து முடிந்த கனடிய பொதுத் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் கொன்சர்வேட்டிவ் கட்சிக்குள் தோன்றிய அதிகளவு எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டிய சவாலுக்குள் கட்சியின் தலைவர் எரின் ஓ டூல் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்ததிங்கட்கிழமை தேர்தல் தோல்விக்குப் பிறகு அவருக்கு எதிராக கத்தி போன்ற எதிர்ப்புக்கள் வருவதால் அவை எங்கிருந்து வருகின்றன என்பதைக் கண்டுபிடிக்க எரின் ஓ டூலின் அவர்கள் சார்ந்த குழு முயன்று வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது

*(தொடர்ச்சி 14ம். பக்கத்தில்)*

# கனடா உதயன் ஆதரவில் நடத்தப்பெறும் மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கான நாவன்மை நிகழ்ச்சி- 2021- அரங்கம்-4




கனடா உதயன் வார இதழ் படைக்கும் மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கான நாவன்மை நிகழ்ச்சி- 2021- அரங்கம்-4 எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 26ம் திகதி இணையவழி ஊடாக நடைபெறுகின்றது. உலகெங்கும் வாழும் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம். மேலதிக விபரங்களுக்கு- 416 732 1608

DAWN TRANSPORTS & SERVICES
FREE ESTIMATES
மூவிங் & டெலிவெறிஸ்
26 FEET — CARGO VAN
உங்கள் DELIVERY தேவைகளுக்கு
இலவச மதிப்பீடு Tel: 416-452-2251
We do packaging, wrapping, Moving to storage, Junk removal, Express Services Available

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue, Markham ON, L6B 1A6

வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL: (647) 338-6916 (416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line — Visit
(416) 489-2000 GtaCredit.Com
* North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905 794 4404

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

# NUCLEUS UNIVERSITY

## SCHOOL OF MEDICINE

4-Year MD Program for Undergrad
5-Year MD Program for High School Grads
Clinicals conducted at USA teaching hospitals
Pre-Medical Classes conducted in Brampton
Graduates can write US & Canadian Licencing Exams

## SCHOOL OF DENTISTRY

4-year DDS Program for Undergrads
5-Year DDS Program for High School Grads
Doctor of Dental Surgery Program conducted in Aruba
Pre-Dental Classes conducted in Brampton
Graduates can write US & Canadian Licencing Exams

- Canadian Owned University in one of the safest Caribbean country of Aruba
- Become a practicing Medical Doctor or Dentist in Canada or USA
- Within 5 years for High School graduates or 4 years for University undergraduates
- Pre-medicine courses can be completed in Brampton campus for high school graduates.
- Affordable tuition fees, scholarships available to outstanding students.
- Clinical training at Johns Hopkins affiliated hospitals in the USA

**For more information contact admissions office at: (416) 910-8750**
**தமிழில் உரையாட அழைக்கவும், Dr. Balachandar: (416) 545-7080**

**NUSOM.ORG**

# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

## உணவகத்தில் வேலை வாய்ப்புக்கள்

**Etobicoke, Mississauga** ஆகிய நகரங்களில் உள்ள கனடிய உணவகங்களில் பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உடடியாக உண்டு. **Cooks** (சம்பளம் $ 20.00), **Kitchen Helpers** (சம்பளம் $ 20.00), **Waiters** ஆகிய வேலைகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு தேவைப்படின் தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.

**தொடர்புகளுக்கு: (416) 825-7785 அல்லது (416) 827-4426**

## காரைக்குடி செட்டிநாடு உணவகத்தில் வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் கென்னடி - லோறன்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள காரைக்குடி செட்டிநாடு உணவகத்திற்கு தோசை மற்றும் பரோட்டா தயாரிக்க நல்ல சமையல் வல்லுனர்கள் உடனடியாகத் தேவை.
சிறிது அனுபவம் விரும்பத்தக்கது.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
அத்துடன் **Kitchen Helper, Dishwasher** தேவை.

**Call: (416) 701-0003**

## Renovation Work

Call us for all your renovation needs:

- Basement
- Painting
- Bathroom Reno
- Kitchen Reno
- Permits, and Construction

**416-706-8160**

## LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

## TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல் | All Pain & Aches, Arthritis<br>Asthma, Sinusitis, Rhinitis Allergies<br>Stress, Migraine & All Types of Headaches<br>Diabetes, Gastric Pain, Ulcer<br>Menstruation<br>Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும் **Mrs. K. Vasanthakumar** ஐ தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

## வேலை வாய்ப்பு

**Scarborough** நகரில் **Markham / Ellesmere** சந்திப்புக்கு அருகில் **Manufacturing Workers** மற்றும் **Forklift Driver** வேலைகளுக்கு ஆட்கள் தேவை. **Full-time, Morning Shifts.**

**Looking for Workers and Forklift Driver to add to our team.**
**We are looking for hard-working and dedicated people for a long-term position.**
தொடர்புகளுக்கு: **ESSAN**

**(647) 993-2872**

## வேலைக்கு ஆட்கள் தேவை

Toronto பகுதியில் **cleaning** வேலைக்கு **cleaner** உடன் தேவை.

**தொடர்புகளுக்கு: (647) 907-8911**

உதயன் கதிரோட்டம்

# தியாகி திலீபனுக்கு தீபம் ஏற்றி நினைவு கூர முனைந்த தமிழ் மக்களின் பிரதிநிதிக்கு தாக்குதலும் தண்டனையும்

உண்ணா நோன்பிருந்து தன்னுயிரை அர்ப்பணித்த தியாகி திலீபனுக்கு தீபம் ஏற்றி நினைவு கூர முனைந்த தமிழ் மக்களின் பிரதிநிதி மீது நடத்தப் பெற்ற தாக்குதலும் அதனைத் தொடர்ந்த தண்டனையும் தமிழ் மக்களை சிந்திகத் துாண்டியிருக்கும் என்ற நம்பிக்கையோடு இவ்வாரக் கதிரோட்டத்தைப் படைக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனை நினைவேந்தும் எண்ணத்தோடு அந்த இடத்திற்குச் சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், பொ-லிஸாரால் கைது செய்யப்பட்ட செய்தி நாடெங்கிலும் மட்டுமலல உலகெங்கும் பரவிசி சிதறியது.

கஜேந்திரன் கைது செய்யப்பட்டமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது என அதன் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளார்

நினைவேந்தலைத் தடை செய்ய முடியாது. அதே போன்று நினைவேந்தலுக்கு நீதிமன்றத்தினூடாகத் தடைகளும் விதிக்க முடியாது. எந்தவொரு அத்துமீறலும் இன்றி, மக்கள் கூட்டம் இன்றி, கொரோனா பாதுகாப்பு மீறல் இன்றி ஓர் மக்கள் பிரதிநிதி மேற்கொண்ட நினைவேந்தலை பொலிஸார் கையாண்ட விதம் மிகவும் பாரதூரமானது.

சுக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அவர்கள். ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்று தெரிந்திருந்தும் ஒரு சாதாரண மனிதனுக்கு வழங்க வேண்டிய குறைந்த பட்ச கௌரவத்தையேனும் வழங்காது அவரை பலவந்தமாக இழுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றி குற்றவாளியைக் கொண்டு செல்வது போன்று அநாகரி-கமான முறையில் பொலிஸார் கொண்டு சென்றனர். இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல தென்னிலங்கை தொழிற்சங்கங்கள் கூட கண்டித்துள்ளன என்ற செய்தியும் எமக்கு கிடைத்துள்ளன.

இந்த வேளையில். தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கைது செய்யப்பட்டமைக்கு எதிராக ஐ.நாவிலிருந்து பல எதிர்ப்பு குரல்கள் கிளம்பியுள்ளன என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளுன.

ஐ.நாவின் பொறிமுறையின் கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்திய தேசியத்தை பின்பற்றிய வன்முறை அல்லாத அஹிம்சை வழி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தியாகி திலீபனின் நினைவேந்தலை நினைவு கூருவது எந்த விதத்தில் தவறு என்று உலக தமிழர் இயக்கத்தின் மக்கள் தொடர்பாளர் பிரிவிற்கு பொறுப்பான ஒரு அன்பர் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும் கஜேந்திரனின் கைது விவகாரம் தொடர்பில் தொடர்ந்து வரும் நாட்களில் ஐ.நா மன்றில் அதிகாரிகள் மட்டத்தில் முறைப்பாடொன்று எழுத்து மூலமாகவும்,வாய்மொழி மூலமாகவும் பதிவு செய்யப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கைதுகளும் அச்சுறுத்தல்களும் எம் மக்களுக்கு பதியவை அல்ல. ஆனால் அவை தற்போது புதிய வடிவங்களில் வந்தவண்ணம் உள்ளன. இன்னும் ஒரு பக்கத்தில் தமிழ் மக்களின் வலிகளும் துன்பங்களும், அவர்கள் மீதான அடக்கு முறைகளும் நிரந்தரமானவையாகவே நிலை கொண்டு விட்டன. இவ்வாறு இருக்கும் போது சாதாரண மக்களின் நிலை இன்னும் மோசமானதாகவே எதிர்வரும் நாட்களில் காணப்படலாம் என்பதும் நிச்சயமாக நாம் எதிர்கொள்ள வேண்டியசவால்களாகவே எம் மக்களிடத்தில் திணிக்கப்படும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# அரசாங்கத்தின் மாற்று முகம் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் கைது மூலம் வெளிப்பட்டுள்ளது - க.விஜிந்தன்




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் பொ-லிஸாரால் அநாகரி-கமான முறையில் கைது செய்யப்பட்டமைக்கு முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன் தனது கண்டனத்தினை வெளியிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் மண்ணில் தமிழர்களின் வரலாற்றில் என்றும் நினைவு கூரப்பட வேண்டிய, மனதில் வைத்து பூசிக்கப்பட வேண்டிய தியாகதீபம் திலீபனின் நினைவு நாளினை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் நேற்று பொலிஸாரால் மிகவும் கொடூரமான முறையில் அநாகரிகமான முறை-யில் நினைவேந்தல் இடம்பெறுகின்ற இடத்தில் அங்கு ஏற்றப்பட்ட தீபத்தினை காலால் மிதித்து தாக்கப்பட்டு மிகவும் கேவலமான முறையில் இழுத்துச் செல்லப்பட்டமையானது அநாகரிகமான செயற்பாடு.

இந்த அரசாங்கத்தின் மாற்று முகம், எங்கள் தமிழ் இனத்தினை அழிப்பதற்கான மாற்று முகம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டும். சர்வதேசம் உன்னிப்பாக இதனை கவனிக்க வேண்டும். இந்த அரசாங்கத்தில் எமக்கு நம்பிக்கை இல்லை.

ஐ.நா பேரவை நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இந்த சம்பவத்தினை மிகவும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். இறந்தவர்களை கூட நாங்கள் நினைவில் கொள்ள முடியாத நிலை இருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினரின் கைதினை மிகவும் கண்டிக்கின்றோம். அவரின் சிறப்பு உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுடன் இந்த நடவடிக்கையினை வன்மையாக கண்டித்து நிற்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

# கனடிய நீதித்துறையில் உள்ள குறைபாடுகளால் கொடிய குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை என அரசியல் தலைவர்கள் பல விசனம் தெரிவிப்பு

## ரொறன்ரோ மாநகர பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெப்ரி நோர்த்ரப் கடமையின் போது கொல்லப்பட்ட வழக்கில் மோசமான குற்றவாளிக்கு பிணை வழங்கப்பட்டமைக்கு கண்டனம்



கனடிய நீதித் துறையில் உள்ள குறைபாடுகளால் கொடிய குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை என ரொறன்ரோவின் அரசியல் தலைவர்களாக விளங்கும் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் மற்றும் ரொறன்ரோ நகர பிதா ஜோன் ரோரி ஆகியோர் உட்பட பல விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கடமையில் இருந்த போது கொல்லப்பட்ட ரொறன்ரோ மாநகர பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெப்ரி நோர்த்ரப் கொலை வழக்கில் மோசமான குற்றவாளிக்கு பிணை வழங்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்த போதே இவ்வாறு அவர்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.

மேற்படி கொலைச் சம்பவத்தில் கடமையிலிருந்த ரொறன்ரோ காவல்துறையைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெப்ரி நோர்த்ரப் கொலை வழக்கில் மோசமான குற்றவாளிக்கு பிணை வழங்கப்பட்டமைக்கு ஏன் நீதிமன்றம் பிணை வழங்கியது என்ற விடயம் தங்களுக்கு புரியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். சம்பவ தினத்தன்று கொல்லப்ப்ட்ட மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெப்ரி நோர்த்ரப் நகர மண்டபத்திற்கு கீழே உள்ள நிலத்தடி வாகன நிறுத்துமிடத்தில் கடமையின் நிமித்தம் சென்றபோது அங்கு வாகனத்தில் வேகமாக வந்த உமர் ஜமீர், என்னும் 31 வயதான கொலையாளி நீதிமன்றத்தால் முதல் நிலை கொலை குற்றச்சாட்டில் விசாரணைக்கு காத்திருக்கும்போது அவர் பிணையில் விடுவிக்கப்பட்டமை அவர் தப்பித்துச் செல்ல வாய்ப்பை ஏற்படுத்துவது போன்று தெரிகிறது என்றும் அரச தரப்பு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

மேற்படி குற்றம் நிரூபிக்கப்பட்டால் கொலையயாளியான அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படும்.

இவ்வாறான நிலையில் ஒரு போலீஸ் அதிகாரியின் மரணத்தில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை விடுவிப்பதற்கான நியாயமற்ற முடிவை நீதிபதி ஏன் எடுத்தார் என்பதை விவரிப்பதில் நீதி மன்றம் தவறிவிட்டுத என்றும் நியாயவாதிகள் தெரிவித்துள்ளனர்.



கடந்த புதன்கிழமை, வழக்கறிஞர் நாடர் ஹசன் தனது காரணங்களின் ஒரு பகுதியை தெரிவித்து குற்றஞ்சாட்டப்பட்டவரை தண்டிக்கும் படி நீதிமன்றத்தைக் கேட்கும் வழக்கத்திற்கு மாறான நடவடிக்கையை எடுப்பதாகக் கூறினார்,

"ஒரு தீவிர குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபருக்க் பிணை வழங்கப்படும்போது, பொதுமக்கள் தவிர்க்க முடியாமல் இதன் காரணத்தைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வமாக உள்ளனர்" என்று நார்த்ரூப் மற்றும் பிற அதிகாரிகள் டொராண்டோ சிட்டி ஹால் அருகே குத்தாட்டம் குறித்து விசாரணை நடத்த வந்தனர் என்றும் கடந்த ஜூலை 2 ம் திகதி நள்ளிரவுக்குப் பிறகு கொலையாளி ஜமீர் ஓட்டியதாகக் கூறப்படும் வாகனம் மோதியதில் அவர் கொல்லப்பட்டார் என்றும் கொன்ஸ்டபிள் நார்த்ரூப்பின் மரணத்திற்குப் பிறகு, இந்தக் கொலையானது திட்டமிட்டு வேண்டுமென்றே செய்த செயல்" என்று பொலிசார் குறிப்பிட்டனர்.

55 வயதான கொன்ஸ்டபிள் ஜெப்ரி நார்த்ரூப் சாதாரண உடையில் இருந்தார் என்றாலும் ஆனால் இந்த கழுத்தில் அணிந்திருந்த பெயர் குறி மூலம் அடையாளம் காண முடியும் என்று போலீசார் தெரிவித்துள்ளனர். சாதாரண உடையில் இருந்த மற்றுமொரு உத்தியோகத்தர் உயிருக்கு ஆபத்தான காயங்களுக்கு சிகிச்சை பெற்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும் இதேவேளை. கடமையாற்றும் பொ-லிஸ் அதிகாரியைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் காவலில் இருந்து விடுவிக்கப்படுவது மிக மிக அரிதான ஒரு தீர்ப்பு என்றும் குறிப்பிடப்படுகின்றது.

கனடா மொன்றியால் மாநகரில்
ஒரே நாளில் ஒரே மேடையில்

Powered by
FRUITS HABY
5925 Victoria
Monreal, QC
H3W 2R9
(514) 342-4229
(514) 865-0519

www.uthayannews.ca
உதயன்
நண்பன் WORLDWIDE

உதயன் வெள்ளி விழாவும்
நண்பன் விருது விழாவும்

கலை நிகழ்ச்சிகள், இனிதான இசைச்சாரல், விருதுகள் வழங்கல் மற்றும் இராப்போசன விருந்து.

13-11-2021 சனிக்கிழமை
மாலை 6:00 மணி தொடக்கம்

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக...
Tasty தமிழா
437 539 7521

Sunnybrook Condominium Village Auditorium
105 Rue Angora,
Dollard Des Ormeaus,
Quebec, H9B 1W6

Covid-19
கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப
அழைக்கப்படுவோரின்
எண்ணிக்கை
மட்டுப்படுத்தப்படும்

அனுமதிச் சீட்டுக்களுக்கும் விபரங்களுக்கும்:
(514) 684-3604, (514) 924-3436, (514) 465-1053, (416) 732-1608

chatr
AUTHORIZED DEALER

NATION-WIDE TALK, TEXT & DATA PLAN

$25/mo.

Scarborough Town Centre | 300 Borough Drive | Toronto, ON | 647-847-3634

Offer subject to change without notice. Get up to 500MB of data on the Talk, Text and Data Plan. Once you reach your 3G speed data allotment, your data speed will be reduced until your next anniversary date. Taxes extra. ™ Trademarks used under license ©2021

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# காணாமல் போனோருக்கு மரண சான்றிதழ், நெடுங்கால கைதிகளுக்கு பொது மன்னிப்பு

## ஐ.நா. செயலரிடம் உறுதியளித்தேன் என்கிறார் இலங்கை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ



காணாமல் போனோருக்கு மரண சான்றிதழ், நெடுங்கால கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி வைக்க உள்ளதாக ஐ.நா. செயலரிடம் உறுதியளித்துள்ளதாக இலங்கை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளகப் பொறிமுறை ஒன்றின் ஊடாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைக்கு வருமாறு, புலம்பெயர் தமிழர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அழைப்பையும் விடுக்கின்றேன்.

இனங்களுக்கிடையில் ஒற்றுமையை பலப்படுத்திக்கொண்டு முன்னோக்கி நகர்வதற்கான முழுமையான ஒத்துழைப்பை, மிகவும் சாதகமான முறையில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு வழங்கும் என்று - அதன் பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரெஸ் (Antonio Guterres) அவர்கள் என்னிடம் தெரிவித்தார்.

நியூ யோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையகத்தில், நேற்றைய தினம் இடம்பெற்ற ஐ.நா பொதுச் செயலாளர் உடனான விசேட சந்திப்பின் போதே அவர் இதனை என்னிடம் தெரிவித்தார்.

ஐ.நா தலைமையகத்துக்கு நான் சென்ற போது என்னை அன்புடன் வரவேற்ற குட்டரெஸ் அவர்கள், 1978ஆம் ஆண்டில், சர்வதேச பாராளுமன்றச் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கைக்குத் தான் விஜயம் செய்திருந்ததையும், கண்டி, அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களுக்குச் சுற்றுலா சென்றதையும், அதன்போதான தனது அழகான நினைவுகளையும் இவர் ஞாபகப்படுத்தினார்.



ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையாளராக, இலங்கை தொடர்பில் தான் பணியாற்றியமை, மற்றும் 2006ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ அவர்களைச் சந்தித்தமை குறித்தும், குட்டரெஸ் அவர்கள் நினைவுபடுத்தினார்.

சுமார் 30 ஆண்டுகள் நிலவிய யுத்தம் காரணமாக, மிகவும் சிக்கலான நிலைமைக்குள் விழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும், இந்து சமுத்திர வலயத்தில், மாபெரும் சமூக மற்றும் பொருளாதாரப் பணிகளை நிறைவேற்றும் இலங்கையிடமிருந்து - தொடர்ந்தும் அப்பணியை எதிர்பார்ப்பதாக, பொதுச் செயலாளர் என்னிடம் எடுத்துரைத்தார்.

ஐ.நா பொதுச் செயலாளருடன் கலந்துரையாடக் கிடைத்தமையிட்டு நான் மகிழ்ச்சியடைவதனை அவரிடம் தெரிவித்ததுடன், உலகம் இன்று முகங்கொடுத்துள்ள மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்கு மத்தியில் ஐ.நா முன்னெடுத்து வரும் நிர்வாகச் செயற்பாடுகள், மற்றும் இரண்டாவது தடவையாகவும் ஐ.நா பொதுச் செயலாளர் பதவிக்கு அவர் தெரிவாகியுள்ளமை என்பவற்றுக்காக அவருக்கு எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக்கொண்டேன்.

சிறிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள இலங்கை போன்ற நாடொன்று, கொவிட் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் முகங்கொடுத்துள்ள சவால்கள் தொடர்பில், ஐ.நா பொதுச் செயலாளருக்கு நான் எடுத்துரைத்தேன்.

கொவிட் தொற்றுப் பரவலுக்கு மத்தியில், இலங்கையின் கல்வி மற்றும் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல்கள் தொடர்பிலும் தீர்க்கமான முறையில் நான் எடுத்துரைத்ததுடன், தொற்றுப்பரவலை வெற்றிகரமாக எதிர்கொள்ள, உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கும் எனது பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்தேன்.

இதுவரையில், இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டோருக்கு கோவிட் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதனை நான் சுட்டிக்காட்டியதுடன், நவம்பர் மாத இறுதிக்குள், 15 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதையும் தரவுகளுடன் எடுத்துரைத்தேன்.

இதன்போது, தடுப்பூசி ஏற்றலில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்துக்கு, பொதுச் செயலாளர் அவர்கள், தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகத் தெரிவான நான், பொதுமக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில், கொவிட் தொற்றுப் பரவலானது பெரும் தடையாக இருக்கின்றதென்பதனை நான் தெரிவித்ததுடன், இருப்பினும், 30 வருட காலமாக நிலவிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததன் பின்னர் ஏற்பட்ட இடைநிலைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நாம் எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாகத் தெளிவுபடுத்தினேன்.

பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கல், காணிகளை மீளக் கையளித்தல் மற்றும் 2009ஆம் ஆண்டில், மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட பாரிய அபிவிருத்திகள் மற்றும் வடக்கு மாகாண சபைக்கான உறுப்பினர்களை, ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுப்பதற்காக ஏற்படுத்திக்கொடுத்த வாய்ப்பு என்பவை தொடர்பிலும் நான் எடுத்துரைத்தேன்.

காணாமற்போனோர் தொடர்பில், அரசாங்கம் என்ற ரீதியில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விரைவில் முன்னெடுப்போம் எனவும், மரணச் சான்றிதழ்களை வழங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவோம் எனவும் பொதுச் செயலாளரிடம் நான் தெரிவித்தேன்.

பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த இளைஞர்களில் பலரை, நான் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் விடுவித்துள்ளதனை நான் எடுத்துரைத்ததுடன், அவ்வாறு விடுவிக்க முடியாத ஏனையோர் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு வருவதனையும், நீண்ட காலமாகத் தடுப்பிலுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பிலான சட்டச் செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் - நீண்ட காலம் தடுப்பில் இருந்ததைக் கருத்திற்கொண்டு, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் அவர்களை விடுவிப்பதற்கு நான் தயங்க மாட்டேன் என்பதனையும் பொதுச் செயலாளரிடம் நான் தெரிவித்தேன்.

இலங்கைக்குள் மிகவும் பலமான முறையில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதே என்னுடைய இலக்கு என்றும், அதன்படி, போராட்டக்காரர்கள் மீது முன்னரைப் போன்று தடியடி, நீர்த்தாரைத் தாக்குதல் போன்றவற்றை நடத்த, என்னுடைய ஆட்சியின் கீழ் ஒருபோதும் அனுமதியில்லை என்றும், போராட்டக்காரர்களுக்கென்றே என்னுடைய அலுவலகத்துக்கு முன்னால் தனி இடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் நான் விளக்கினேன்.

நாட்டுக்குள் அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக, சிவில் அமைப்புகளுடன் இணைந்து நான் செயற்படும் விதம் தொடர்பிலும் நான் தெளிவுபடுத்தினேன்.

இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகள், நாட்டுக்குள்ளேயே உள்ளகப் பொறிமுறையினூடாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பதனையும், அதற்காக, புலம்பெயர் தமிழர்களைப் பேச்சுவார்த்தைக்கு நான் அழைப்பதனையும் ஐ. நா. பொதுச் செயலாளரிடம் நான் தெரிவித்தேன்.

ஐக்கிய நாடுகள் சபையுடன், எப்போதும் மிக நெருக்கமாகப் பணியாற்ற நாம் தயார் என்பதை மீண்டும் ஒருமுறை நான் எடுத்துரைத்ததுடன், நாட்டுக்குள் மீண்டும் பிரிவினைவாதம் ஏற்படப்போவதில்லை என்பதை என்னால் உறுதிப்படத் தெரிவிக்க முடியும் என்ற போதிலும், மதவாதத் தீவிரவாதம் தொடர்பில், இலங்கை போன்று ஏனைய நாடுகளும் அவதானமாக இருக்க வேண்டுமென்பதையும் எடுத்துரைத்தேன்.



ஐ.நா சபையின் உயர்ந்த பட்ச ஒத்துழைப்பை இலங்கைக்கு தான் பெற்றுத்தருவார் என்பதனை ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் என்னிடம் இதன்போது உறுதியளித்தார். என இலங்கை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர் (20-09-2021)**

# இலங்கையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தான் எம். பியின் இணைப்பாளர் கொரோனாவால் மரணம்!



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தானின் இணைப்பாளர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, பட்டானிச்சூர் பகுதியைச் சேர்ந்த ஸலாஹுத்தீன் காஜி (சாபு) என்பவரே மரணமடைந்த வராவார்.

இவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், இன்று அதிகாலை சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

இவர், பட்டக்காடு மஸ்ஜிதுல் இலாஹிய்யா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவரும், பட்டானிச்சூர் மன்பஉல் உலூம் அரபுக் கல்லூரியின் உப தலைவரும், வவுனியா பள்ளிவாசல் குழுவின் பொருளாளரும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தானின் இணைப்பாளரும் ஆவார்.

குறித்த நபரின் சடலத்தை அடக்கம் செய்வதற்கான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி ஓட்டமாவடிக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

**(21-09-2021)**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வவுனியாவில் 20 நாட்களில் 106 பேர் மரணம், 2222 பேருக்கு கொரோனா தொற்று



வவுனியா மாவட்டத்தில் இம்மாதம் 20 ஆம் திகதி வரை 2222 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 106 பேர் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனா தொற்று வீதம் நாளாந்தம் அதிகரித்து செல்கிறது. குறிப்பாக செப்டம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து 20 ஆம் திகதி வரை 2222 பேர் கொவிட் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன், 106 பேர் கொரோனா தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

நாட்டில் ஏற்படும் மரண வீதத்தில் வவுனியாவில் மரணிப் போரின் தொகை பாரியளவில் காணப்படுகின்றது.

வவுனியாவில் மக்களின் அசமந்தமான செயற்பாட்டால் மரண தொகை கட்டுக்கடங்காமல் செல்கின்றது. எனினும் மக்கள் இதன் பாரதூரமான தன்மையை உணரவில்லை. இது பாரிய ஆபத்தான நிலைப்பாடாக உள்ளது.

ஆகவே வவுனியா மாவட்டத்தின் நிலை தொடர்பில் மக்கள் சிந்தித்து சுகாதார நடைமுறைகளை இறுகப் பின்பற்றி செயற்பட வேண்டும் என சுகாதார பிரிவி-னர் மேலும் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் 3328 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 50 பேர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் போராட்டம்

வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகள் சிலர் ஆரம்பித்த போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இதுவரை சுமார் 10 கைதிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தமது தண்டனையை குறைக்குமாறு கோரி சிறைச்சாலை கூரை மீதேறி கைதிகள் நேற்று முதல் இவ்வாறு போராட்டத்தில் ஈடு படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் கூறியுள்ளது.

எவ்வாறாயினும் கைதிகளின் கோரிக்கைக்கு சாதகமான தீர்வு வழங்க தமது திணைக்களத்திற்கு இயலாதென அத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# கணவனை பிரிந்து வாழ்ந்து வந்த முல்லைத்தீவு இளம் குடும்பப் பெண் சடலமாக மீட்பு



முல்லைத்தீவு - மல்லாவி பிரதேசத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்கு உட்பட்ட கொல்லவிளாங்குளம் பகுதியில் இளம் குடும்பப் பெண் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த பெண்ணின் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கணவனை பிரிந்த நிலையில் இரு பிள்ளைகளுடன் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றி வரும் 32 வயதான பிரதீபன் புஸ்பராணி எனும் இளம் குடும்ப பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவரது சடலம் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்த நிலையில் பி-ரேத பரிசோதனை மற்றும் பி.சி.ஆர் முடிவுகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட வுள்ளதாக மல்லாவி பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.



# மன்னார் மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளர் பீ.ஏ.அந்தோனி மார்க் கொரோனா தொற்றால் காலமானார்

மன்னார் மாவட்டத்தின் மூத்த ஊடகவி-யலாளரும், தமிழ்த் தேசியப் பற்றாளருமான பீ.ஏ. அந்தோனி மார்க் தனது 80ஆவது வயதில் செவ்வாய்க்கிழமை (21) இரவு முல்லைத்தீவு வைத்தியசாலையில் காலமானார்.

திடீர் சுகயீனம் காரணமாக முல்லைத்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றைய தினம் இரவு உயிரிழந்தார். இவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மூத்த ஊடகவியலாளர் பீ.ஏ. அந்தோனி மார்க் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பணி-களை ஆற்றியுள்ளார்.

குரலற்ற மக்களின் குரலாகவும் குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடிக்கவும்,அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்த தோடு,பல்வேறு போராட்டங்களையும் தலைமை தாங்கி முன்னெடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# இலங்கையில் கல்முனைப் பிரதேசத்தில் குப்பைகளை பொது இடங்களில் கொட்டியவர்கள் மீது சட்ட நடவடிக்கை



இலங்கையில் கல்முனைப் பிரதேசத்தில் குப்பைகளை பொது இடங்களில் கொட்டியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் உள்ள உள்ளாட்சி அமைப்புக்கள் செயற்பாடுகளில் இறங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் பிரதான வீதிகள், மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் தொடர்ந்தும் குப்பைகள் கொட்டப்பட்டு வருவதாக கிடைத்த தகவலை அடுத்து அந்த குப்பைகளில் இருந்து பெறப்பட்ட முகவரிகளை அடிப்படையாக கொண்டு அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க உள்ளோம் என கல்முனை மாநகர சபை பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்சத் காரியப்பர் தெரிவித்தார்.

இவ்வாறாக பொது இடங்களில் குப்பைகளை அநாகரிகமான முறையில் கொட்டுவதென்பது ஒரு சமூக விரோதச் செயல் என்பதை இந்த சம்பவங்களில் ஈடுபடுகின்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் அர்சத் காரியப்பர் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையினால் தொடர்ந்தும் வலியுறுத்திய அறிவித்தல்களுக்கு அமைய, பொது இடங்களில் குப்பைகள் கொட்டுவது மற்றும் பொதுமக்கள் போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென ஏற்கனவே விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக குறித்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.குப்பைகளினால் மக்கள் அசௌகரியம் எனும் சமூக ஊடகங்களில் பேசு-பொருளாக மாறியிருந்த இவ்விவகாரத்திற்கு தீர்வு காணும் நோக்கில் கல்முனை மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி ஏ.எம். ரக்கீபின் ஆலோசனையின் பேரில் கள விஜயம் செய்த டாக்டர் அர்சத் காரியப்பர் தலைமையிலான சுகாதார குழுவி-னர் அந்த குப்பைகளை பிரித்து பார்த்தபோது அதிலிருந்த முகவரி அச்சிடப்பட்ட ஆவணங்களை கைப்பற்றினர்.குப்பைகள் கொட்டப்பட்ட 23 இடங்களில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் கல்முனையில் இருந்து 20 பேரின் முகவரியும், சாய்ந்தமருதில் இருந்து 23 பேரும், மருதமுனையில் இருந்து 18 பேரும், நற்பிட்டிமுனையில் இருந்து 17 பேருமாக அதிலிருந்த முகவரியின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளானர்.





அந்த 78 பேருக்கும் எதிராக பொதுமக்களுக்கு இடைஞ்சல் செய்தமைக்காக நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்த போவதாக அங்கு கருத்து தெரிவித்த போது பிரதம சுகாதார வைத்திய அதி-காரி தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபை சுகாதார பிரிவு உத்தியோகத்தர்கள் பலர் இணைந்து இந்நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

கனடிய செய்திகள்
Canadian News

# "இந்த தேர்தல் வெற்றியானது எனக்குரியது மட்டுமல்ல. அதற்காக உழைத்த எம் இளையோர் சமூகத்திற்கும் சொந்தமானதாகும்"




## கனடா பொதுத் தேர்தல் வெற்றிவிழாவில் ஸ்காபுறோ பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி உணர்ச்சி பொங்க அறிவிப்பு

**- ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்**

"கனடாவில் நடைபெற்று முடிந்த இந்த பொதுத் தேர்தலில் எனக்கு கிடைத்த வெற்றியானது எனக்குரியது மட்டுமல்ல. அதற்காக உழைத்த எம் இளையோர் சமூகத்திற்கும் சொந்தமானதாகும். அவர்கள் எதிர்காலத்தில் கனடாவிற்குத் தேவையான அரசியல் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் ஆர்வத்துடன் உழைத்து வருகின்றார்கள். அவர்களில் பலர் சிறந்த அறிவாற்றல் மற்றும் செயற்பாட்டுத் திறன் ஆகியவற்றோடு எமது கட்சிக்காகவும் எமது சமூகத்திற்காகவும் உழைத்து வருவதை நான் நேரடியாக கண்டு பெருமிதம் கொண்டேன்".

இவ்வாறு நேற்று நடைபெற்று முடிந்த கனடா பொதுத் தேர்தலில் ஆளும் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஹரி ஆனந்தசங்கரி இரவு நடைபெற்ற வெற்றிவிழாவில் உணர்ச்சி பொங்க தெரிவித்தார்.

கடந்த தேர்தலைப் போன்றே அதிக பெரும்பான்மை வாக்குகளோடு வெற்றியீட்டிய ஹரி ஆனந்தசங்கரி தொடர்ந்து பேசுகையில் "எனது வெற்றிக்காக உழைத்த அனைத்து அன்பர்களுக்கும் எனது நன்றியை தெரிவிக்கும் இந்த வேளையில் எமது பிரதமர் அவர்கள் தெரிவித்தது போன்று கொரோனா தொற்றுக்கு எதிராகவும் கால நிலை மாற்றத்திற்காகவும் நாம் தொடர்ச்சியாக போராடுவோம்" என்று தெரிவித்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கல்முனையில் சரமாரியான வாள்வெட்டு தாக்குதல்: இளைஞர் அஸ்ரப் வைத்தியசாலையில் அனுமதி



கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை மதரஸா வீதியில் இடம்பெற்ற சரமாரியான வாள்வெட்டில் காயமடைந்த கல்முனை இளைஞர் அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, புதன்கிழமை (22) காலை பயணத்தடை அமுலில் உள்ள காலப் பகுதியில் தன்னுடைய வீட்டுக்கு முன்னால் வேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்றவர்களை நிறுத்தி வேகமாக வாகனத்தை ஓட்டவேண்டாம் என்று கூறியவர்களுடன் வாய்தர்க்கத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் பின்னர் களைந்து சென்று கூறிய இரு வாள்களுடன் வந்து சரமாரியாக தாக்கியதில் காயமடைந்த 19 வயதான முஹம்மத் ஸபான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக காயமடைந்த ஸபானின் தந்தை ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போதைப்பொருள் பாவனை அதிகரித்து காணப்படும் கல்முனை பிராந்தியத்தில் இப்படியான சம்பவங்கள் அதிகரித்து வருவதாவது ஆபத்தை உண்டாக்கும்.

வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த எனது தம்பி சத்தம் கேட்டு வெளியே வந்தபோது மிக நீளமான வாள்களால் தாக்கப்பட்டார். இது தொடர்பில் கல்முனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளோம்.

எனது தம்பியை தாக்கியவர்களை எங்களுக்கு நன்றாக தெரியும். எங்களின் பிரதேசத்தில் யாரிடம் விசாரித்தாலும் அவர்களின் கொடுமைகளை விளக்குவார்கள் என தாக்கப்பட்ட ஸபானின் சகோதரி ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

வீட்டு வாயில் கதவு, கதவு போன்றவற்றில் வெட்டுத்தடயங்கள் உள்ளதையும், இரத்த தடயங்கள் உள்ளதையும் அவதானிக்க முடிவதுடன் காணொளியில் மிக கோபத்துடன் குறித்த இரு இளைஞர்களும் தாக்குதல் நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பிலான மேலதிக விசாரணையை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(23-09-2021)

# இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் செல்வராஜாவை தாக்கி கைதுசெய்த சிங்கள இனவெறி அரசு

## இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் செல்வராஜாவை கொடூரமாகத் தாக்கி கைதுசெய்த சிங்கள இனவெறி அரசின் கோர வன்முறைச்செயல் அரசப்பயங்கரவாதத்தின் உச்சம்! - சீமான் கண்டனம்

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, தியாகத்தீபம் அண்ணன் திலீபன் அவர்களின் நினைவு நாளையொட்டி அவரது நினைவிடத்தில், ஈகைச்சுடர் ஏற்ற முயன்ற தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினைச் சேர்ந்த இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் கஜேந்திரன் செல்வராஜா அவர்களை சிங்களக்காவல்துறையினர் கொடூரமாகத் தாக்கி, கைதுசெய்திருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. ஒரு அரசியல் தலைவரது சனநாயகப்பூர்வச்செயல்பாட்டையே அனுமதியாது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு வேடிக்கைப்பார்க்கும் சிங்கள இனவெறி அரசின் கோரச்செயல்கள் யாவும் வன்மையான கண்டனத்திற்குரியது.

உண்ணா நோன்பிருந்து ஊனை உருக்கி, உயிரை ஒளியாக்கி இனவிடுதலைக்கு வெளிச்சம் காட்டிய உன்னதப்போராளி, அறவழிப் போராட்டத்தின் அழிக்கமுடியாத வரலாற்றுப்பெருங்குறியீடாக உலகத்தமிழர் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும் ஈகைப்பேரொளி அண்ணன் திலீபனின் நினைவைப் போற்றும் விதமாக, தனது குடும்பத்தினருடன் சுடர் வணக்கம் செய்ததற்காக சகோதரர் கஜேந்திரன் செல்வராஜா மீது அரச வன்முறையை ஏவிவிட்டுக் கைதுசெய்து அவமதித்திருப்பது உலகெங்கும் வாழும் தமிழர்களை உள்ளம் கொதிக்கச் செய்திருக்கிறது.



இறந்துபோன முன்னோரையும், மூத்தோரையும் போற்றித் தொழுதல் காலங்காலமாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் தமிழர்களது பண்பாட்டு மரபு. அத்தகைய மெய்யியல் கோட்பாடுகளையும், அறவழிச்செயல்பாடுகளையுமே சிங்கள இனவெறி அரசு தடைவிதித்து முடக்குமென்றால், இதனைப் போல அரசப்பயங்கரவாதம் வேறுண்டா? தாய் மண்ணின் விடுதலைக்காகத் தங்களது இன்னுயிரை ஈகமாக ஈந்த முன்னோர்களுக்கு அமைதியான முறையில் நினைவு வணக்கம் செலுத்துவதைக்கூட அனுமதிக்காத சிங்கள இனவெறி அரசின் செயல்பாடு கொடுங்கோன்மையின் உச்சமாகும்.

இரண்டு இலட்சம் தமிழர்கள் மொத்தமாகக் கொன்றொழிக்கப்பட்ட இந்நூற்றாண்டின் பாரிய இனப்படுகொலை நிகழ்ந்து 12 ஆண்டுகள் கடந்த பிறகும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தமிழர் என்கிற காரணத்தால் இனவெறித் தாக்குதல்களை வெளிப்படையாக எதிர்கொள்ள வேண்டிய இழிநிலை அந்நிலத்தில் நிலவுகிறதென்றால், அம்மண்ணில் வாழும் எளிய தமிழர்களின் நிலை என்னவென்பதை உலக நாடுகள் இனியேனும் சிந்திக்க வேண்டும்.



ஆகவே, இனிமேலாவது, "ஒற்றை இலங்கைக்குள் ஒருமித்துத் தீர்வு" என்கிற வறட்டு வாதத்தைக் கைவிட்டு, தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்குப் பன்னாட்டுப் போர்க்குற்ற விசாரணை மேற்கொள்ளவும், தனித்தமிழீழ நாட்டிற்கான பொதுவாக்கெடுப்பு நடத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பன்னாட்டுச்சமூகத்திடம் கோருகிறேன். மேலும், சொந்த நாட்டு மக்கள் பிரதிநிதி மீது கொடிய அடக்குமுறைகளை ஏவி கைது செய்துள்ள இலங்கை அரசின் கொடுங்கோல் போக்கிற்குத் தனது கடுமையான கண்டனத்தை இந்தியா உள்ளிட்ட அனைத்துலக நாடுகள் பதிவு செய்ய வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "போரில் காணாமல் ஆக்கப்பட்டோர் கொல்லப்பட்டார்கள் என இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டாரா?"



ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் ஆன்டோனியோ கூட்டரேஷிற்கும், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை, இலங்கை தமிழர் அரசியல் களத்தில் தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.

இலங்கையின் உள்ளகப் பிரச்னைகள் நாட்டுக்குள்ளேயே உள்ளக பொறிமுறையினூடாக தீர்க்கப்பட வேண்டும், தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் வழக்கு விசாரணைகளின் பின்னரே விடுவிக்கப்படுவர், காணாமல் போனோருக்கு அவர்களது மரண சான்றிதழை வழங்குதல் போன்ற ஜனாதிபதியின் கருத்து தற்போது கடும் விமர்சனங்களை தோற்றுவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் கூட்டத்தில் பங்குப்பற்றுவதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி, ஆன்டோனியோ கூட்டரேஷை கடந்த 19ம் தேதி சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

இந்த நிலையில், ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட கருத்துகள் குறித்து, தமிழர்கள் தமது விமர்சனங்களை வெளியிட்டு வருகின்றனர்.

போர் முடிவடைந்த 12 வருடங்கள் கடந்துள்ள நிலையில், காணாமல் போனோர் தொடர்பில் எவ்வித சாட்சியங்களும் இல்லாமையினாலேயே, அரசாங்கம் மரண சான்றிதழை வழங்க எண்ணியதாக அரசு தரப்பு கூறுகிறது. தமிழர்கள் மட்டுமளளது சிங்களவர்களும் இவ்வாறு காணாமல் போயுள்ளதாக அரசு தரப்பு கூறுகிறது. காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மரண சான்றிதழை வழங்குவதாக ஜனாதிபதி வெளியிட்ட கருத்தின் ஊடாக, காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டுள்ளார்கள் என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவிக்கின்றார்.

இலங்கையில் 1990களில் இருந்து, 2014 வரை வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயிருப்பதாக சொல்லப்படுகிறது. காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதனை, இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக கூற வேண்டும் எனவும் அவர் கோருகின்றார். கோரப்படும் அவ்வாறு இலங்கை அரசாங்கம் இதனை திட்டவட்டமாக கூறும் பட்சத்தில், பல வருடங்களாக போராட்டங்களில் ஈடுபட்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது போராட்டங்களை கைவிடுவதற்கான சாத்தியம் உள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சுமார் மூன்றரை வருடங்களுக்கு மேலாக தொடர் போராட்டங்களை அவர்களது உறவினர்கள் முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறு போராட்டங்களை முன்னெடுத்த பெற்றோரில் பலர், உயிரிழந்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை அழைத்து, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஏன்ன நேர்ந்தது என்பது தொடர்பில் பேசுவதற்கு ஜனாதிபதி இதுவரை முன்வரவில்லை என சுரேஷ் பிரேமசந்திரன் குறிப்பிடுகின்றார். இறுதி யுத்தத்தில் கண்கண்ட சாட்சியாக ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு மரண சான்றிதழ் வழங்கப்படுவதென்றால், கைது செய்யப்பட்ட அனைவரும் கொலை செய்யப்பட்டார்களா? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது. எஸ்.சிறிதரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன், நாடாளுமன்றத்தில் இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு மரண சான்றிதழ் வழங்குவதாக நாட்டின் அதி உத்தம ஜனாதிபதி கூறுவது, பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும் விடையா என அவர் கேள்வி எழுப்புகின்றார். ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை கூற வேண்டும் என அவர் அரசாங்கத்தை கோருகின்றார். அத்துடன், அனைத்து கொலைகளையும் அரசாங்கமே செய்து விட்டு, அது தொடர்பில் அரசாங்கமே விசாரணை நடத்துவது என்றால், அதில் என்ன நியாயம் உள்ளது என அவர் கேள்வி எழுப்புகின்றார்.

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் என்பவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என அவர் தெரிவிக்கின்றார். 2008ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரையான காலம் வரை, முள்ளிவாய்க்காலில் கலைக்கப்பட்ட சுமார் 4 லட்சத்திற்கும் அதிகமானோர் கண்கண்ட சாட்சியமாக ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு கண்டகண்ட சாட்சியமாக ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டு, கைது செய்யப்பட்ட அனைவரும் கொலை செய்யப்பட்டுவிட்டார்களா? அதற்காகவா மரண சான்றிதழ் வழங்கப்படுகின்றது? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பின் கோரிக்கையை ஐநாவில் எந்தவொரு தரப்பும் கண்டுக்கொள்ளவில்லை என ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகமும், வட மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான அனந்தி சசிதரன் தெரிவிக்கின்றார். யுத்தத்தை நடத்தி, இன அழிப்பை மேற்கொண்ட அரசாங்கத்திடமே, பொறுப்புக்கூறலை கையளித்திருப்பது என்பது, பாதிக்கப்பட்ட தமக்கு பாரிய மன அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குற்றம் சாட்டுகிறார்.

மனித உரிமை விடயத்தில் நீதி கிடைக்காத நிலையிலேயே, தாம் ஐக்கிய நாடுகள் சபையை நாடியதாகவும் அவர் கூறுகின்றார். எனினும், ஐக்கிய நாடுகள் சபை தமக்கான நீதியை பெற்றுத்தரவில்லை என ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தெரிவிக்கின்றார்.

ராணுவத்திடம் சரணடைந்த பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு என்ன நடந்தது என உறவினர்கள் தேடிக் கொண்டிருக்கும் போது, ஐநா பொதுச் செயலாளரிடம் ஜனாதிபதி இவ்வாறு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

எஸ்.கஜேந்திரன் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மரண சான்றிதழ் வழங்குவதாக ஜனாதிபதி, ஐநா செயலாளரிடம் கூறிய கருத்தை, தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் கூறுகின்றார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளராக கடமையாற்றிய போதே, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு என்ன நேர்ந்தது என உறவினர்கள் தேடிக் கொண்டிருக்கும் போது, ஜனாதிபதி இவ்வாறு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் கூறுகின்றார். அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாக கடந்த செப்டம்பர் மாதம் ஜெனீவாவில் இந்த அரசாங்கம் உறுதியளித்திருந்ததாகவும், அந்த உறுதிமொழி இதுவரை நிறைவேற்றப்படவில்லை எனவும் அவர் தெரிவிக்கின்றார். இந்த நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

போர் முடிவடைந்த 12 வருடங்கள் கடந்துள்ள நிலையில், காணாமல் போனோர் தொடர்பில் எவ்வித சாட்சியங்களும் இல்லாமையினாலேயே, அரசாங்கம் மரண சான்றிதழை வழங்க எண்ணியதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிக்கின்றார். பிபிசி தமிழ் வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். யுத்தத்தின் போது பலருக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்து இன்று வரை கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் அவர் கூறினார்.

தமிழர்கள் மாத்திரமன்றி, சிங்களவர்களும் இவ்வாறு காணாமல் போனவர்களில் அடங்குவதாக அவர் தெரிவித்தார். நீண்ட காலமாக இதற்கு தீர்வு இல்லாமையினால், உறவினர்களின் உரிமைகள் இல்லாது போவதாகவே அரசாங்கம் கருதுகின்றது எனவும் அவர் கூறுகின்றார். இதன்படி, காணாமல் போனோருக்கான சாட்சியங்கள் இல்லாதவர்களுக்கு, மரண சான்றிதழை வழங்குவதே சரியானது என காணாமல் போனோர் அலுவலகமும் பரிந்துரை செய்துள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறான காரணங்களினாலேயே, அரசாங்கம் இவ்வாறான தீர்மானத்தை எட்டியுள்ளதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிக்கின்றார்.

# புலம்பெயர் யூதர்களுடன் பேச ஹிட்லர் அழைத்தது போன்றே, தமிழர்களுடன் பேசுவதற்கான இலங்கை ஜனாதிபதியின் அழைப்பு உள்ளது



## புலம்பெயர் தமிழர்களை நோக்கி இலங்கை ஜனாதிபதி கோத்தாயா விடுத்திருந்த அழைப்பு தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது கருத்தினை தெரிவித்துள்ளது.

யூத இனப்படுகொலையினைப் புரிந்த ஹிட்லர் ஆட்சியில் இருக்க முடிந்திருந்தால், புலம்பெயர் யூதர்களுடன் பேச ஹிட்லர் அழைப்பது போன்றே, புலம்பெயர் தமிழர்களுடன் பேசுவதற்காக இலங்கை ஜனாதிபதி கோத்தாவின் அழைப்பு உள்ளது. இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இனப்படுகொலையினை புரிந்த அரசுடன் முக்கிய விடயமான தேசிய இனப்பிரச்சனை தொடர்பாக உரையாடல் நடத்துவது கடினமான ஒன்றாகும்.

எந்தவொரு அரசியல் தீர்வுக்கும் பொறுப்புக்கூறல் என்பது முக்கியமானதொரு முன்னவசிமாகும். இலங்கைத்தீவில் அமைதியை கொண்டுவருவதில் கோத்தாவுக்கு உண்மையான ஆர்வம் இருந்தால், முதற்படியாக, ஐ.நா மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையர் அல் {ஹசைன் அவர்கள், 2015ல் பரிந்துரைத்திருந்த "ரோம் உடன்படிக்கையில்" கைச்சாத்திட்டுக் கொள்ள வேண்டும். மேலும் கைச்சித்திட்டு பின்னோக்கி காலத்தையும் உள்வாங்கியதாக வேண்டும். இறுதிப்போரில் நடந்த இனப்படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்களை புரிந்த குற்றவாளிகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றில் விசாரித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக, சிறிலங்காவின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போர் கைதிகள், அரசியற் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். "பொது மன்னிப்பு" என்ற "விசர்" கதைகளை குப்பையில் போடுங்கள். யாரை யார் மன்னிப்பது?

தமிழர் பகுதிகளில் தொல்பொருள் ஆய்வுகள், அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் வனப்பாதுகாப்பு என்ற போர்வையில் மேற்கொள்ளப்படுகின்ற அபகரிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவமயமாக்கல் நீக்கம் (விலக்கி) செய்யப்பட வேண்டும். மேலும், காணாமல்போனோவர்களுக்கான அலுவலகத்தை ஒரு நடுநிலையான, நம்பகமான நிறுவனமாக மாற்றியமைக்கும் வகையில், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அவர்கள் நியமிக்கும் நிபுணர்களை உறுப்பினர்களாக நியமிக்கவும், பாதிக்கப்பட்டவர் உறவுகள் பங்கெடுக்கின்ற வகையிலான ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டும். தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அந்நிய முதலீடுகளை தீர்மானிக்கின்ற அதிகாரம் தமிழர்களுக்கு வழங்க வேண்டும்.

இறுதியாக, இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் திரு. டேவிட் கேமரூன் அவர்கள், ஸ்கொட்லாந்து விவகாரத்தில் பொது வாக்கெடுப்புக்கான உறுதியான கால அட்டவணையை அமைத்து போல், தமிழர்கள் தங்கள் அரசியல் தலைவிதியை தாமே முடிவு செய்கின்ற வகையில் பொதுவாக்கெடுப்புக்கான நடவடிக்கையினை தமிழர் அரசியல் தலைமைகளுடன் சேர்ந்து முன்னெடுக்க வேண்டும். இப்பொதுவாக்கெடுப்பில் சுதந்திரமும் இறையாண்மையும் கொண்ட தமிழீழம் உள்ளடங்க பல்வேறு அரசியல் தீர்வுகள் உள்ளடங்கலாக இருக்க வேண்டும்.



தேவையான இந்த செயல்வழிப்பாதையை சிறிலங்கா அதிபர் நிறைவேற்றிய பிறகு, பேச்சுக்களை நடத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். இதுவே இலங்கை தீவின் நிரந்தரமான அமைதிக்கும், பாதுகாப்புக்கும் மற்றும் செழிப்புக்குமான வழித்தடமாக அமையும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கருத்துரைத்துள்ளது.

# தமிழினத்தைக் காக்க தன் உயிரைத் துறந்த தியாகி திலீபனை தீபச் சுடராக எம் இதயத்தில் ஏற்போமாக



கால் நூற்றாண்டைக் கட்டி அணைப்பதற்கு முன்பே கதறி அழும் தமிழினத்தைக் காக்க தன் உயிரைத் துறந்த தியாகி திலீபனை தீபச் சுடராக எம் இதயத்தில் ஏற்போமாக!!!

மணிமுடி தாங்கிய மன்னர் சீரோடு சிறப்போடு ஆண்ட மண் நல்லூர். நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே? என்று கூறுமளவுக்கு நற்றமிழை வளர்த்த நாவலர் பிறந்த மண்ணும் நல்லூரே. பித்தன்' என்று பிறர் பேசும் பெருமானை நல்லூர்த் தேரடியில் கண்டேன். என்றும் என்னை எனக்கறிவித்த என் குருநாதன் என்றும் நல்லூர்த் தேரடியில் வாழ்ந்த "விசர்ச் செல்லப்பனை கொழும்புத் துறை யோக சுவாமிகள் வாழ்த்துகின்றார். அப்படி அரசியலிலும் அருந்தமிழிலிலும் ஆன்மீகத்திலும் உச்சப் புகழ் அடைந்த நல்லூர் முருகன் வீதியில்தான் தியாகி திலீபன் சாகும்வரை உண்ணா நோன்பை 15.9.1987 இல் தொடங்கி 26.9.1987 இல் 12 நாட்கள் முடிவுறும் நிலையில் 265 மணித்தியாலங்கள் உள்ளடக்கிய போராட்டத்தை காலை 10:48 மணிக்கு ஈழத் தமிழகம் மட்டும்அல்ல தமிழ் கூறும் நல்லுலகமும் ஐயோ! என்று அலறும் நிலையில் தியாகி திலீபனின் இன்னுயிர் எமை விட்டுப் பிரிந்தது.

27.11.1963 இல் கடைக்குட்டியாக யாழ்ப்பாணத்தில் ஊரெழுவில் தோன்றினார். இவர் பிறந்த பத்தாவது மாதத்திலேயே தாயை இழந்து தந்தையின் அரவணைப்பில் வளர்ந்த இவர் மருத்துவக் கல்லூரி மாணவனாக விளங்க பின்பு மருத்துவப் படிப்பைத் துறந்து விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து யாழ் மாவட்டத்தின் அரசியலதுறைத் தலைவராக உயர்நிலை அடைந்தார். நான் முன்பு குறிப்பிட்டதற்கமைய 27.11.1963 இல் தோன்றிய இவர் 15.9.1987 இல் காலை 9:55க்கு நல்லூர் வடக்கு வீதியில்தான் தனது சாகும் வரை உண்ணா நோன்பைத் தொடங்கி 12 நாட்கள் முடிவுறும் நிலையில் தன் உயிரை விடுகிறார். இவர் உயிர்விடும் பொழுது இவருக்கு அகவை 24 ஆகும் கால் நூற்றாண்டு முடிவதற்கு முன்பே காலத்தால் சாகாது ஞாலத்தில் நிலைத்து நிற்கும் புகழை இவர் ஈட்டியுள்ளார்.

அவர் மறைவதற்கு முன்பேயே 650 போராளிகள் களத்தில் தன் உயிரை மாய்த்தனர். அவ் உண்ணா நோன்பை மேற் கொள்வதற்கு முன்பு கரவெட்டியில் உலகத்தை அதிர்ச்சியில் ஆழ்த்துகின்ற முறையில் மில்லரின் உயிர் போகின்றது. மில்லர் தன் கடைசிப் பயணத்தை மேற்கொள்வதற்கு முன்பு திலீபனோடுதான் இருந்தார். திலீபனின் கூற்றின்படி "நான் எனது தாய்நாட்டிற்காக உயிர் துறப்பது என்று எண்ணுகின்ற போது மகிழ்ச்சியடைகின்றேன் என்று மில்லர் கூறியதாக கூறும் இவர் மக்கள் விடுதலை அடையும் காட்சியை நான் காணமுடியவில்லை என்பது தனக்குக் கவலை என்று மில்லர் கூறியதாக இவர் குறிப்பிட்டுள்ளார். திலீபன் தன் உண்ணா நோன்பைத் தொடங்குவதற்கு முன்பு தலைவர் பிரபாகரனுடைய இசைவைப் பெற்றே இம் முடிவை எடுத்தார்.

"திலீபன் நீ முன்னால் போ நான் பின்னால் வருகிறேன் என்று தலைவர் தனக்குக் கூறியதாகக் குறிப்பிடும் செய்தி எம் நெஞ்சை உலுக்குவதாகும்.

## உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த வரலாறுகள்.

உலக விடுதலை வரலாற்றில் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த வரலாறுகள் வரலாற்றில் பதியப்பட்ட நிகழ்சிகள் ஆகும். சென்னைக்கு தமிழ்நாடு என்ற பெர் சூட்ட வேண்டும் என்று உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த வரலாற்றினைச் சங்கரலிங்கனார் வரலாறு எடுத்துக் காட்டுகிறது. அவர் மறைவை அடுத்து சென்னை இராச்சியத்துக்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட்டது. ஆந்திர நாடு உருவாக வேண்டும் என்று உண்ணா நோன்பிருந்து பொடிஇராமுலு அவர்கள் உயிர்நீத்த வரலாறும் அவர் உயிர் நீத்ததன் விளைவாக ஆந்திர மாநிலம் மலர்ந்ததையும் வராலாறு பதிவு செய்துள்ளது.

அயர்லாந்திலும் உண்ணா நோன்பிருந்து பொபி என்ற மாவீரன் உயிர்நீத்த வரலாறும் எம்மை உருக்கும் வரலாறு ஆகும். மேலே குறித்த இவர்களின் உயிர்நீத்த வரலாறுகள் எம் உள்ளத்தை உருக்குகின்றது. ஆனால் இவர்கள் உண்ணா நோன்பிருந்த போது நீர் அருந்தியதுண்டு.

## அண்ணல் காந்தியும் தியாகி திலீபனும்

அண்ணல்காந்தியும் சாகும்வரை உண்ணா நோன்பை நோற்றதுண்டு. அந்த வரலாற்று நிகழ்ச்சியை மறுக்கவும் இல்லை. மறக்கவும் இல்லை. ஆனால் காந்தியடிகளின் நோன்புப் போராட்டம்அவரின் 40-50 வயதைத் தாண்டிய போராட்டம் ஆகும். அவர் உயிர் விடும் உண்ணா நோன்பை மேற் கொண்ட போதும் கூட தண்ணீருடன் உப்பைக் கலந்தே மேற்கொண்டார். ஆகவே அவர் உயிர் போகவில்லை. காலப் போக்கில் மக்களின் வேண்டுதலின் பேரில் அவருது உண்ணா நோன்பைக் கைவிட்டார். ஆனால் திலீபனோ உப்புக் கலந்த நீரையோ அல்லது உப்பில்லா நீரையோ அருந்த மறுத்து 15 நாட்கள் கடுந்தவம் இருந்து உலகத்தை வியப்பில் ஆழ்த்தி காந்தியைத் தந்த இந்தியத் துணைக் கண்டத்தையே வெட்கித் தலை குனிய வைத்து தமிழ் கூறும் நல் உலகம் ஐயோ என்று அலற உடல் தமிழ் மண்ணிற்கும் உயிர் தமிழிற்கும் தமிழீழ மண்ணிற்கும் என்று கூறி செப் 26 1987 இல் தன்னுயிரைத் துறந்தார்.

## இலங்கை இந்திய ஒப்பந்தம்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் எதுவும் உருப்படியாக ஈழத்தமிழ் மக்களுக்கு எதுவும் வழங்கவில்லை. ஆனால் இலங்கையின் வடகிழக்கு மாகாணத்தை ஈழம் வாழ் தமிழ் மக்களின் அடிப்படையான தாயகம் என்பதை மட்டும் தமது முன்னுரையில் ஒத்துக் கொண்டது. ஆனால் நடைமுறையில் தமிழ் மக்களின் உயிர்ப் பிரச்சினை எதையும் தீர்த்துக் கொள்ள முன்வரவில்லை. இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவாகிய நிலையில் அடுத்தடுத்து பல சிக்கல்கள் ஈழத் தமிழ் மக்களை எதிர் நோக்கிய நிலையில் எப்படி ஈழத் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற உந்துதலின் அடிப்படையிலேயே திலீபனின் உண்ணா நிலை நோன்பு அமைந்திருந்தது. அவர் விடுத்த கோரிக்கைகள் பின்வருபவை ஆகும்.

1) பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.
2) புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப் பட வேண்டும்.
3) வடகிழக்கு மாகாணங்களில் காவல் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
4) இந்திய அமைதிப் படையின் மேற்பார்வையில் ஊர்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப் பட்ட ஆயுதங்கள் திருப்பிப் பெறப்பட்டு தமிழ்க் கிராமங்கள் பள்ளிக் கூடங்கள் ஆகியவற்றில் நிலை கொண்டுள்ள இராணுவ காவல் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.
5) தமிழ் ஈழ இடைக்கால நிர்வாகம் விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இவர் விடுத்த கோரிக்கைகள் ஏதோ நிறைவேற்ற முடியாத பெரும் கோரிக்கைகள் அல்ல. தன் கோரிக்கையில் தமிழ் ஈழத்தைப் பிரகடனம் செய் என்று கேட்கவில்லை. அன்றைய அரசியல் சூழ்நிலையை நினைவில் கொண்டு விட்டுக் கொடுத்த நிலையில் இக் கோரிக்கைகளை அவர் விடுத்தார். ஆனால் வெறி கொண்ட சிங்கள அரசோ அல்லது சிறிலங்காவுடன் ஒப்பந்தம் செய்த இந்திய அரசோநிறை வேற்ற மறுத்ததுதான் திலீபன் சாவுக்கு முழுக் காரணமாக அமைந்தது.என்பதை நாடுகள் நன்கறியும்.

அன்று இந்தியாவின் படைத்தளபதியாக விளங்கிய தீட்சித்திடம் திலீபனை காப்பாற்ற வேண்டும் எனத் தலைவர் பிரபாகரன் விடுத்த வேண்டுகோள் முற்றாக நிராகரிக்கப்பட்து. "இதுஎன் பொறுப்பல்ல" என்று ஆணவத்தோடு கூறியதன் விளைவுதான் எம் ஆருயிர் அனைய திலீபனை நாம் இழக்க நேரிட்டது. திலீபன் அவர்கள் இறப்பதற்கு முதல்நாள் தம் உறவுகளுடன் உரையாடிய நம் உள்ளம் உருக்கும் இறுதி உரை இதோ!

"என் அன்பிற்கும் மதிப்புக்கும் உரிய மக்கள் அனைவருக்கும் எனது வணக்கம். நின்று கொண்டு பேச முடியாத நிலை இருப்பதால் இருந்து கொண்டு பேசுகிறேன். நாளை நான் சுயநினைவோடு இருப்பேனோ தெரியாது. அதனால்தான் நான் இன்று உங்களுடன் பேச விரும்பினேன். நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறோம். நாம் மனரீயாக" ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என்பதை உணர்கிறேன். மகிழ்ச்சியுடன் பூரண திருப்தியுடனும் உங்களிடம் இருந்து இறுதி விடை பெறுகின்றேன். விடுதலைப்புலிகள் தமது உயிரினும் மேலாக சிறுவர்களைச் சகோதரிகளளை தாய்மார்களை தந்தையரை நினைக்கிறார்கள். உண்மையான உறுதியான இலட்சியம் எமது இலட்சியம். அந்த இலட்சியத்தை எமது தலைவருடன் சேர்ந்து நீங்கள் அடையுங்கள். எனது இறுதி விருப்பம் இதுதான். மக்கள் புரட்சி வெடிக்கும் அதனை வானத்தில் இருந்து எனது நண்பர்களுடன் பார்ப்பேன் என்று திலீபன் ஆற்றிய இறுதி உரை வரலாற்றில் இடம்பெறும் வீர உரையாகும்.

தியாகி திலீபன் மறைந்து 34 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால் அவரை எம்மால் என்றும் மறக்க முடியாத அளவுக்கு அவரின் தியாகம் அமைந்துள்ளது. செத்தும் வாழ்பவர் சிலர். வாழும் பொழுதே செத்தவர்கள் பலர். வாழும் போதே செத்தவர்கள் யார் என்பதைப் பற்றி நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. செத்தும் வாழும் சிலரில் தியாகி திலீபனுக்கு தனி இடம் உண்டு. ஆகவேதான் தியாகி திலீபன் மறைந்த பொழுது எம் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் எம்மை எல்லாம் அழ வைக்கின்ற முறையில்" திலீபன் அழைப்பது சாவையா? இந்தச் சின்ன வயதில் இது தேவையா உலகம் இதை எண்ணிப் பார்க்குமா? இங்கு ஒரு தமிழ் ஈழம் பூக்குமா? என்று 1987 இல் கதறி அழுது எழுதிய கவிதை இது. 34 ஆண்டுகள் உருண்டோடிய நிலையிலும் எமக்கு விடிவோ விடுதலையோ கிடைக்கவில்லை. மாறுபட்டு வேறுபட்டு கூறுபட்டுக் கிடக்கின்ற தமிழ் இனம் தனது வேறுபாடுகளை ஆழப் புதைத்து திலீபனின் பெயரில் நாம் தமிழீழத்தை அடைவோம் என உறுதி கொள்வோமாயின் உலகில் எந்த சக்தியும் எம்மைத் தடுக்க முடியாது. ஐநா மன்றத்தில் சுண்டைங்காய் நாடுகள்உட்பட 192 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. நாம் உறுதி பூணுவோமாயின் எம் புலிக்கொடி-எம் தாயின் மணிக்கொடி ஐநா மன்றத்தில் 193வது நாடாக பட்டொளி வீசிப் பறப்பது உறுதி.



**- மா .க ஈவேந்தன்.** (Canada)

# இலங்கையில் தடுப்பூசிக் கதைகள்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



ஐரோப்பாவில் வசிக்கும் ஒருவர் கிளிநொச்சியிலுள்ள உறவினருக்கு ஒரு காணொளியை அனுப்பியிருக்கிறார். காணொளியில் தான் தடுப்பூசி பெற்றுக் கொண்டபின் தனக்கு காந்த சக்தி ஏற்பட்டதை நிரூபிக்கும் விதத்தில் ஊசி போட்ட இடத்தில் ஒரு சவர அலகை வைத்து அது ஒட்டிக் கொண்டிருப்பதை படம் பிடித்து அனுப்பியிருக்கிறார். அதைப்பார்த்த கிளிநொச்சியிலுள்ள அவருடைய உறவினர் காணொளியை தனக்கு தெரிந்த ஒருவருக்கு காட்டியிருக்கிறார். அதைப்பார்த்த மற்றவர் தான் ஊசி ஏற்றிக் கொண்ட பின் தனது கையில் ஒரு சிறிய கத்தியை வைத்து பார்த்தாராம். அது ஒட்டிக் கொண்டு விட்டதாம். அதைப் படம் எடுத்து தனக்கு ஐரோப்பாவிலிருந்து வந்த காணொளியை காட்டியவருக்கு அனுப்பியிருக்கிறார்.

ஊசி போட்டால் உடலில் காந்த சக்தி ஏற்படும் என்பது அல்லது உடல் ஒரு உயிருள்ள காந்தமாக மாறிவிடும் என்ற கருத்து முதலில் வட இந்தியாவில்தான் தோன்றியது. அங்கே ஊசி போட்டபின் ஒருவருடைய உடலில் அசாதாரணமாக காந்தசக்தி பெருகி அருகில் உள்ள உலோகங்கள் ஒட்டிக் கொள்வதை காட்டும் ஒரு காணொளி முதலில் வெளியாகியது. அது இப்போதும் நம்பப்படும் கதையாக உள்ளது.

இதுபோல தடுப்பூசி தொடர்பாக பல கதைகள் உண்டு. மற்றொரு கதையில் எனது நண்பர் ஒருவர் சொன்னார் தடுப்பூசி எடுத்த பின் தன்னுடைய மாமனாரின் குருதிக் குளுக்கோசின் அளவு ஒப்பீட்டளவில் குறைந்துவிட்டதாக. இன்ஷ்யூரன்ஸ் முகாமையாளர் ஒருவர் என்னிடம் கேட்டார் சினோபாம் போட்டால் ஆஸ்துமா கட்டுப்படும் என்று கூறுகிறார்களே உண்மையா? என்று இது இரண்டாவது கதை.

மூன்றாவது கதை நாட்டின் தலைநகரத்தில் நடந்தது. கொழும்பு மாவட்டத்தில் பைஸர் தடுப்பூசி இல்லாத போது ஏனைய தடுப்பூசியை பெற மனதில்லாமல் 20 தொடக்கம் 30 வயது வரையானவர்கள் பலரும் மீளத் திரும்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு மாநகரசபையின் பிரதான மருத்துவர் ருவன் விஜயமுனி இதனை தெரிவித்துள்ளார். இவ்வாறு தடுப்பூசி பெறாமல் திரும்புவோரின் எண்ணிக்கை 30 வீதமாக உள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பு ஊசி ஏற்றும் திட்டத்தை அரசாங்கம் அறிவித்தது. அதில் ஒரு அரசியல் பொருளாதார நோக்கம் உண்டு. உழைப்புச் சக்தி அதிகமுடைய அதேசமயம் நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகம் உள்ளவர்களை தடுப்பூசி போட்டு மேலும் பாதுகாப்பதன்மூலம் நாட்டின் உழைப்பாளிகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் நோக்கம்.

ஆனால் நாட்டில் தற்போது 20-30 வயதுக்கு இடைப்பட்ட இளையோரிடையே கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளும் ஆர்வம் குறைவடைந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். தடுப்பூசி ஏற்றிக்கொண்டால் பாலியல் சக்தி குறையும் சந்ததி விருத்தி பாதிப்புறும் என சமூக ஊடங்களில் வெளியான தகவல்களால் இளைஞர், யுவதிகள் மத்தியில் தடுப்பூசி பெறும் ஆர்வம் குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். ஆனால் இது உலகில் எந்த ஒரு ஆராய்ச்சியின் மூலமும் உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே இளைஞர், யுவதிகள் அச்சமின்றி தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இளைஞர்கள் தடுப்பூசி செலுத்திக்கொள்வதற்கு தயங்குவது நாட்டை ஆபத்துக்குள்ளாக்குகின்றது என அரசமருந்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார். இதன் காரணமாக சமூகத்தில் வைரஸ் தொற்று அதிகரிக்கும் ஆபத்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். தடுப்பூசி நிலையங்களிற்கு வரும் இளைஞர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது என அவர் தெரிவித்துள்ளார். இளைஞர்கள் மோசமான பாதிப்புகளை எதிர்கொள்ளாத நிலை காணப்படலாம். ஆனால் அவர்கள் சமூகத்தில் வைரஸ் சுமைகளை அதிகரிப்பார்கள் என தெரிவித்துள்ள அவர் சமூகத்தில் வைரஸ் சுமைகள் காணப்பட்டால் அதனால் புதிய திரிபுகள் உருவாகலாம் என தெரிவித்துள்ளார். அவ்வாறான சூழ்நிலையில் திரிப்படைந்த வைரஸ் சமூகத்திற்குள்ளிருந்து உருவாகக்கூடும். தடுப்பூசிகளால் அதனை கட்டுப்படுத்தமுடியாத நிலை காணப்படலாம், இதன்காரணமாகவே வைரஸ் சுமைகளை குறைப்பதற்கு தடுப்பூசியை செலுத்தவேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரை செய்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாலாவது கதை. உள்ளூர் மருத்துவம், இயற்கை உணவு போன்றவற்றில் நாட்டம் உடைய ஒரு நண்பர் சொன்னார் தான் தடுப்பூசி போட்டுக்கொள்ள மாட்டேன் என்று. ஏனென்றால் அது ஒரு சீனச்சதி என்று சொன்னார். அப்படி என்றால் உலகில் அதிகம் பேர்,அதாவது இதுவரை 200 கோடிக்கு மேற்பட்டவர்கள் சீன தடுப்பூசியை பெற்றிருக்கிறார்கள் என்றும் சுட்டிக் காட்டினேன். அவர் சொன்னார் இருக்கலாம் ஆனால் சீனா உலகின் ஒவ்வொரு நாட்டுக்கும் ஏற்றாற்போல பொருட்களை உற்பத்தி செய்கிறது. அது குழந்தை பிள்ளைகளுக்காக உற்பத்தி செய்யும் விளையாட்டு பொருட்கள் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு தரத்தில் காணப்படுகின்றன. மேற்கு நாடுகளுக்காக உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்டிக் பொருட்களில் உயர்தரம் பேணப்படும். ஆனால் ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பப்படும் உற்பத்திகளில் அதிகம் ரசாயனம் இருக்கும். அது குழந்தைகளுக்கு தீங்கானதாகவும் இருக்கும். எனவே சீனா எதைச் செய்தாலும் அதில் ஒரு வணிக நோக்கம் இருக்கும். எங்களுக்கு தரப்பட்டு ஊசி அப்படி ஒன்றாக இருக்கலாம் என்று சொன்னார்.

அரசு ஊழியரான தன்னுடைய மனைவி உத்தியோக நடைமுறைகளின் படி ஊசி போட வேண்டியிருந்தது என்றும் அவ்வாறு ஊசி போட்டுக் கொண்ட பின் அவருடைய உடலில் தசைகளில் மென்மைத் தன்மையும் எலும்புகளில் பலவீனமும் தோன்றி இருப்பதாக அவர் சொன்னார். இதை ஒரு ஊகமாக வைத்துக் கொண்டிருக்காமல் ஏன் உரிய மருத்துவர்களிடம் சென்று பரிசோதிக்க கூடாது என்று கேட்டேன். கொரோனா வைரஸ் மருத்துவர்களை மட்டுமல்ல மனித குலத்தின் அறிவியல் சாதனைகள் பலவற்றையும் நிர்வாணமாக்கி விட்டது என்றும் அவர் சொன்னார். இது நாலாவது கதை.

மேற்கண்டவை யாவும் சீனத்துத் தடுப்பூசி பற்றிய கதைகள். சீனாவை குறித்தும் அதன் உற்பத்திகளை குறித்தும் அப்படிப் பல சந்தேகங்கள் உலகில் உண்டு. இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு முன்னரான ஒரு காலப்பகுதியில் யூதர்களை குறித்தும் உலகில் ஒரு பகுதியினர் அவ்வாறு சந்தேகித்தார்கள். குறிப்பாக ஐரோப்பாவில் இயற்கை அனர்த்தங்கள் பஞ்சம் என்று ஏதாவது வந்தால் அது யூதர்களின் பில்லி சூனிய வேலையாகத்தான் இருக்கும் என்று நம்பிய ஒரு காலம் உண்டு. இவர்கள் பில்லி சூனியக்காரர்கள் மந்திர தந்திரங்களில் தேர்ந்தவர்கள் என்ற ஒரு நம்பிக்கை நிலவியது. யூத இனப்படுகொலையை ஊக்குவித்த காரணிகளில் அதுவும் ஒன்று. யூதர்களைப் போலவே சீனர்களைப் பற்றியும் குறிப்பாக வைரசுகுப்பின் பல்வேறு விதமான மர்மக் கதைகள் உண்டு. இக்கதைகளில் பல சூழ்ச்சிக் கோட்பாடுகளில் இருந்து உற்பத்தியாகின்றன. சீனர்கள் எதை செய்தாலும் உள்நோக்கத்தோடுதான் செய்வார்கள் என்று நம்பும் ஒரு நிலைமையை கொரானா வைரஸ் கொண்டு வந்துவிட்டது.

ஆனால் உலகில் அதிக தொகையினர் அதாவது 200 கோடிக்கும் அதிகமானவர்கள் சீன ஊசியைத்தான் போட்டிருக்கிறார்கள். இலங்கைதீவில் நானும் உட்பட லட்சக்கணக்கானவர்கள் சீனத்து ஊசியைதான் பெற்றுக்கொண்டோம். சீனாவின் ஊசிக்கு பின்னால் சூதான நோக்கங்கள் ஏதாவது இருக்குமா இல்லையா என்பதை சோதிக்கும் பரிசோதனைக் கூடமாக மாற்றப்பட்ட கோடிக்கணக்கான உடல்களில் என்னுடையதும் ஒன்று.

இவ்வாறு சீனத் தயாரிப்பான ஊசிகளை குறித்து ஐரோப்பாவிலும் அச்சம் இருப்பதனால்தான் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் தமது நாட்டுக்குள் வருபவர்கள் சீன தடுப்பூசிகளை போட்டிருந்தால் குறிப்பிட்ட காலம் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கிய பின்னரே நாட்டுக்குள் பிரவேசிக்கலாம் என்று அறிவித்திருக்கின்றன. அவ்வாறு குறிப்பிட்டகாலம் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகும் பொழுது அதற்கு வேண்டிய செலவையும் குறிப்பிட்ட பயணிதான் பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறு நட்சத்திர விடுதிகளில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளானால் அதற்குரிய செலவு சில சமயம் விமான டிக்கெட்டை விட அதிகமாக இருக்கும் என்ற அச்சம் உண்டு. இதனால் அடிக்கடி வெளிநாடுகளுக்கு பயணம் செய்பவர்கள் குறிப்பாக அமெரிக்க இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் சீனத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதற்கு தயங்குகிறார்கள். அதனால்தான் வடக்கு-கிழக்கில் மன்னார் மாவட்டத்தில் பைசர் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டபோது யாழ்ப்பாணத்தில் இருந்தும் புத்தளம் சிலாபம் போன்ற பகுதிகளில் இருந்தும் அதிகமானவர்கள் பொய்யான ஆவணங்களைக் காட்டி மன்னாருக்கு சென்று பைசர் தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டார்கள். இவ்வாறான முறைகேடுகளை முன்வைத்து அரசாங்கம் பைசர் தடுப்பூசியை நிர்வகிக்கும் பொறுப்பை முழுக்க முழுக்க படைத்தரப்பிடம் ஒப்படைத்தது.

ஆனால் மேற்கத்திய தயாரிப்புகளான பைசர் அல்லது மொடோனா தடுப்பூசிகள் மீதான மோகம் என்பது ஒருவித வெள்ளைக்கார மோகமாகவும் அல்லது சீன தயாரிப்புகள் மீதான சந்தேகமாகவும் காணப்படுகிறது. இலங்கைக்கு அதிகளவு தடுப்பூசிகளை வழங்கிய நாடு சீனா. ஆனால் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அரசாங்கம் பைசர் தடுப்பூசிகளை வழங்கியது தொடர்பில் நாட்டில் சர்ச்சைகள் ஏற்பட்டன. அம்பாந்தோட்டையில் ஒரு துறைமுகம் இருப்பதனால் அங்கு பைசர் தடுப்பூசிகள் வழங்கப்பட்டதாக அரசாங்கம் கூறியது. அப்பொழுது ஒரு முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர் கேட்டார் கொழும்பில் இருப்பது துறைமுகம் இல்லையா என்று. ராஜபக்சக்கள் தமது சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டைக்கு ஏன் பைசர் ஊசிகளை கொடுத்தார்கள்? அவர்களுடைய இதயத்தில் வீற்றிருக்கும் சீனா தயாரித்த சீன தடுப்பூசிகளை ஏன் கொடுக்கவில்லை? அதைவிட முக்கியமான கேள்வி நாட்டை ஆளும் குடும்பம் எந்த ஊசியை ஏற்றிக் கொண்டது? யாருக்காவது தெரியுமா?

அதேசமயம், குறைந்த விலையில் கொள்வனவுச் செய்யக்கூடிய சீனத் தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசிக்கு ஏன் அதிக விலை கொடுக்கப்படுகிறது? என அரச மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது. இலங்கையிலும் உலகெங்கிலும் மிகவும் விரும்பப்படும் பைஷர், மொடர்னா தடுப்பூசிகளை இறக்குமதி செய்வதற்கு பதிலாக சீனத்தடுப்பூசிகளை அதிக விலைக்கு கொள்வனவு செய்வது ஆச்சரியமாக இருக்கிறது என மேற்படி சங்கம் தெரிவித்துள்ளது. பொது நிதி பயன்படுத்தப்படுவதால், இதுதொடர்பில் அதிகாரிகள் பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் என அச்சங்கத்தின் தலைவரான ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். உலகின் ஏனைய இடங்களில் சினோபார்ம் தடுப்பூசியானது ஒரு டோஸுக்கு 10 முதல் 14 டொலருக்கு கொள்வனவு செய்யப்படுகிறது. அதே நேரத்தில் இலங்கை தடுப்பூசியை 15 டொலருக்கு கொள்வனவு செய்கிறது எனவும் அவர் தெரிவித்தார். இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 22 மில்லியன் தடுப்பூசிகளில் 17 மில்லியன் தடுப்பூசிகள் சீனாவிலிருந்து வந்தவையாகும். அதாவது நாட்டில் தடுப்பூசிக்குள் கொமிஷன் இருக்கிறது என்று பொருள்.

மக்களுக்கான வக்சின் கூட்டமைப்பு என்ற உலகளாவிய அமைப்பு கடந்த மே மாதம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் Covid-19 வைரஸானது புதிய ஒன்பது கோடீஸ்வரர்களை உருவாக்கியிருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளது. இந்த ஒன்பது கோடீஸ்வரர்களும் நிகர லாபமாக 19.3 பில்லியன் டொலர்களை பெறுகிறார்கள் என்றும் குறைந்தளவு வருமானம் பெறும் நாடுகளிலுள்ள முழு மக்களுக்கும் 1.3 தடவைகள் வக்சினேற்ற இந்தக் காசு போதும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்திருந்தது.

ஒக்ஸ்பாமின் சுகாதார கொள்கை நிர்வாக முகாமையாளரான அனா மரியோட் "இந்த கொடூரமான நோயைக் கட்டுப்படுத்துவதற்கான எமது கூட்டுக் தோல்வியை நாங்கள் சாட்சியம் செய்கிறோம். தங்கள் மிகவிரைவாக புதிய கோடீஸ்வரர்களை உருவாக்கி இருக்கிறோம் ஆனால் கோடிக்கணக்கான மக்களுக்கு ஊசி போடுவதில் முழு அளவுக்கு தோல்வி அடைந்திருக்கிறோம்" என்று கடந்த மே மாதம் குறிப்பிட்டிருந்தார்.

இன்டர்நெற்றுக்குக்கு அடுத்தபடியாக மனிதகுலம் முழுவதையும் - எல்லாக் கண்டங்களையும் எல்லா மதங்களையும் எல்லா இனங்களையும் பண்பாடுகளையும் - மாஸ்க்கின் மூலம் ஒருங்கிணைத்தது Covid-19 தான். அந்த வைரஸ் உள்ளளவும் மாஸ்க் இருக்கும்தடுப்பூசியும் இருக்கும். தடுப்பூசி உள்ளளவும் தடுப்பூசி அரசியலும் தடுப்பூசி வணிகமும் தடுப்பூசி முதலாளிகளும் தடுப்பூசிக் கள்ளர்களும் தடுப்பூசிக் கதைகளும் இருக்கவே செய்யும்.

உலக செய்திகள்
World News

# "போர்கள் சூழ்ந்த காலகட்டத்தைக் கடந்து தற்போது நாம் இராஜதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர புதிய சகாப்தத்தை திறப்பதற்காக அதன் கதவுகளுக்கு அருகில் நிற்கின்றோம்"

## நியூயோர்க் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் தனது கன்னிப் பேச்சில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவிப்பு



"கடந்த காலத்தில் இடம்பெற்ற போர்கள் சூழ்ந்த காலகட்டத்தைக் கடந்து தற்போது நாம் இராஜதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர புதிய சகாப்தத்தை திறப்பதற்காக அதன் கதவுகளுக்கு அருகில் நிற்கின்றோம. இதன் மூலம் நாம் உலக நாடுகள் அனைத்தோடும் உறவுகளை சீர் செய்யவுள்ளோம். கடந்த காலத்தில் அமெரிக்க அதிபராக இருந்த டொனால்ட் ட்ரம்ப் அவர்களின் சகாப்தம் முடிவடைந்து விட்டுத. இனிமேல் நாம் அனைத்து நாடுகளோடும் சினேகபூர்வமான உறவுகளைப் பேணுவோம்".

இவ்வாறு நியூயோர்க் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் தனது கன்னிப் பேச்சில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நியூயார்க்கில் நடந்த ஐ.நா. பொதுச் சபையில் தனது முதல் உரையை வழங்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடென் ஒரு முக்கிய செய்தியைத் தெரிவித்துக் கொண்டார். "இடைவிடாத போரின் இந்த காலகட்டத்தை நாங்கள் மூடுகையில், இடைவிடாத இராஜதந்திரத்தின் ஒரு புதிய சகாப்தத்தை நாங்கள் திறக்கிறோம்." என்றார் அவர்.

ஆயிரக்கணக்கான இராஜதந்திரிகள் கலந்து கொண்ட மேற்படி அமர்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு உரையாற்றினார்.

ஆப்கானிஸ்தானில் நடந்த போரின் குழப்பமான முடிவு மற்றும் சர்வதேச உதவியை அதிகரிப்பதற்கான அர்ப்பணிப்பு பற்றி அவர் நேரடியாக பேசினா-ர். ஆனால் இரண்டு தசாப்தங்களில் அவர் தனது நாட்டில் போரில் தீவிரமாக இல்லாத நிலையில் அத்தகைய உரையை நிகழ்த்திய முதல் ஜனாதிபதி என்பதை சுட்டிக்காட்டி, அவர் ஒரு பரந்த செய்தியை அனுப்ப முயன்றார். "எங்களுக்கு. இராணுவ சக்தி என்பது அவசியமில்லை. அது நமது கடைசி முயற்சியாக இருக்க வேண்டும், எங்களின் முதல் இராஜதந்திர முயற்சியாக நாம் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். அத்துடன் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் சிந்தனையோடு நாம் இருக்க வேண்டும்", என்று அவர் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தனக்கு முன்னாள் ஜனாதிபதியாக இருந்த டொனால்ட் டிரம்ப் ஆர்ப்பாட்டமாக அதே மேடைக்கு வந்து, தனது வர்த்தகப் போர்களைத் தொடரப் போவதாகவும், அவரது நம்பகமான "அமெரிக்கா முதலில் என்று கோசத்திற்க்கு ஆதரவாக அமெரிக்க இராணுவத் திறனை வளர்த்துக் கொள்வதாகவும் பெருமை பேசினார் என்று கூறிய பைடன் அவர்கள்" அமெரிக்கா உங்கள் நண்பர், மக்களே, உங்கள் கொடுமைப்படுத்துபவர் அல்ல. "முதலில் இருந்த ட்ரம்ப் காலத்து அமெரிக்காவை" மறந்து விடுங்கள். இன்று செவ்வாய்க்கிழமை மீண்டும் கூறப்பட்ட புதிய செய்தியாக "அமெரிக்கா திரும்பிவிட்டது". ஏன்றார் அவர்.

ஜனாதிபதி பைடன் தொடர்ந்து உரையாற்றுகையில். தூன் ஐக்கிய நாடுகளின் ஒத்துழைப்பை விரும்புவதாகவும் அவர் நேட்டோவில் கூட்டாளிகளுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாகவும் "அமெரிக்கா உலகைச் செயல்படத் தூண்டும்போது, நாங்கள் எங்கள் சக்தியின் உதாரணத்துடன் மட்டுமல்லாமல், கடவுள் விரும்பினால், எங்கள் உதாரணத்தின் சக்தியையும் வழிநடத்துவோம்," என்றும் அவர் கூறினார், ஒவ்வொரு வாய்ப்பிலும் மீண்டும் மீண்டும் செய்வதில் அவர் சமாதானத்தையே வலியுறுத்தினார்.






# "We need Justice, not Death Certificates"

## Families of Missing Persons Reject Gota's Proposal

- Siva Parameswaran Senior International Journalist London




"We reject the talks between the President and the UN Secretary General (UNSG)" was the strong rebuttal from the family members who are victims of forced disappearance in Sri Lanka, as the island nation's president met with the UN Chief in New York.

In an apparent measure of humiliation and utter disregard to thousands of families who are searching their near and dear who disappeared after they were handed over to, surrendered or abducted by the Sri Lankan armed forces, the President Gotabaya Rajapaksha has reiterated an internal mechanism to address this more than a decade problem.

While the Victims, the Tamil Diaspora, United Nations Human Rights Council and the International community continue to press for an UN supervised international mechanism into allegations of war crimes including enforced disappearances, the Government of Sri Lanka (GOSL) has been adamant on an internal mechanism.

**Death Certificates**

An official communiqué from the GOSL says "The President informed the Secretary-General that the government would take immediate action with regard to missing persons and expedite the efforts such as issuance of death certificates".




President Rajapaksa is in New York to address the 76th session of the UN General Assembly.

The families of the victims who are missing for over 12 years have strongly rejected the proposal of the President Rajapaksa to the UN Secretary General Antonio Guterres.

Speaking to journalists in the war-torn north, Maria Suresh Easwary President of the families of forced disappeared persons of Mullaitivu district fumed at the stand of the GOSL and its President.

"Now he is speaking as if we were seeking the death certificates. We have been constantly appealing to the UN by sending our reports not seeking death certificates but seeking justice. The UN has to decide whether all our fight was seeking the death certificate? We want justice from you, we want to know what exactly happened".

Also, while the diaspora Tamil community are continously voicing for an international mechanism seeking justice for the alleged atrocities commited during the brutal civil war with the LTTE, President Gotabaya Rajapaksa has now invited the Tamil diaspora to join in a dialogue to resolve issues through an internal mechanism.

The GOSL has been accused of hoodwinking the Tamil war victims who seek justice for their missing ones by opening an Office of Missing Persons (OMP) and proposing to issue death certificates.

While the OMP has failed even to identify and find a single person who has gone missing after being handed over or surrenderd to the Sri Lankan Army or abducted by the armed forces.

**Talks rejected**

"We reject the talks between the President and the UN Sec. Genl. We don't want the OMP or the death certificates to be forcefully thrusted on us".

Maria Suresh Eswary also vowed their fight will continue till they get justice.

"Never ever even in your dreams think that we will receive the death certificates. We will continue to fight till we get justice".




Tamil law makers have already rejected the stand of the GOSL that compensation has been paid to victims, youths who were arrested over terrorist activities were released, and lands transferred back to the owners- calling it all far from truth.

According to them thousands of acres of fertile land are still being held by the military and hundreds of Tamil youths are languishing in prisons without even being charged and brought to trial and compensation has ever been paid.

Coming under intense international pressure the President in yet another act of placating the international community and the families of the war affected has told the UNSG that he would address their issues-his official statement says.

"The President informed the Secretary-General that legal action would be expedited with regard to rest of the personnel who could not be released, and that he would not hesitate to grant a presidential pardon to the Tamil youths who have been in custody for a long time, taking into account their long-term detention and after the legal process was completed".

GOSL and its President has again rejected the call for a robust international mechanism to address allegations of war crimes and has reiterated that "the internal issues of Sri Lanka should be resolved through an internal mechanism of the country and said the Tamil Diaspora would be invited for discussions in this regard".



But people like Maria Suresh Eswary are clearly not convinced with the President's stand.

"The President was also very active in 2009, so he knows what happened to them and where have been kept hidden".

Sri Lanka is facing huge external debt and growing dissatisfaction due to spiralling prices and food crisis. Critics of the government say under such a situation the GOSL is making an effort of showing the world that it is relaxing its Sinhala hardliner policy.



# Carefirst Family Health Team

Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca





# தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் கொன்சர்வேட்டிவ் கட்சிக்குள் தோன்றிய அதிகளவு எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டிய சவாலுக்குள் எரின் ஓ டூல்



நடந்து முடிந்த கனடிய பொதுத் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் கொன்சர்வேட்டிவ் கட்சிக்குள் தோன்றிய அதிகளவு எதிர்ப்புக்களை சமாளிக்க வேண்டிய சவாலுக்குள் கட்சியின் தலைவர் எரின் ஓ டூல் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த திங்கட்கிழமை தேர்தல் தோல்விக்குப் பிறகு அவருக்கு எதிராக கத்தி போன்ற எதிர்ப்புக்கள் வருவதால் அவை எங்கிருந்து வருகின்றன என்பதைக் கண்டுபிடிக்க எரின் ஓ டூலின் அவர்கள் சார்ந்த குழு முயன்று வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது

அந்த எதிர்ப்புக்கள் எல்லா இடங்களிலிருந்தும் வருகிறன என்றும் கூறப்படுகின்றது

இதேவேளை, அடிமட்ட அமைப்பாளர்கள். மற்றும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மற்றும்,பழமைவாதக் குழுவின் நீண்டகால உறுப்பினர்கள். மற்றும் ஓ"டூல் பிரச்சாரத்தின் வெளிப்புறத்தில் உள்ள பழமைவாதிகள், ஐந்து ஆண்டுகளில் மூன்றாவது தடவையாக புதிய த-லைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று போராடத் தொடங்கியுள்ளனர் என்று அறியப்படுகின்றது.

கடந்த திங்களன்று நடைபெற்ற தேர்தலை அடுத்து 15 க்கும் மேற்பட்ட செய்தியாளர்கள் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் முக்கிய உறுப்பீனர்களோடு தொடர்பு கொண்டு பேசினார்கள் இது கன்சர்வேட்டிவ் கட்சியானது ஒரு உத்தியோகபூர்வமான பிரதான எதிர்க்கட்சியாக தங்கள் பங்கை மீண்டும் செய்ய ஒட்டாவாவுக்கு செல்ல வாய்ப்புக்கிட்டியுள்ளுத. கிட்டத்தட்ட ஒருமித்த கருத்து என்னவென்றால், ஓ"டூல் கட்சித் தலைமையில் கட்சியை தொடர்ந்து கொண்டு செல்வதில் அவருக்கு முன்னால் ஒரு கடின-மான சவால்கள் இருக்கும் என்றும் தொடர்ச்சியாக கட்சிக்குள் உள் முரண்பாடுகள் தோன்றியும் மறைந்தும் நிகழப்போகின்றன என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது

கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்த முனையும் பலர் தங்களை இனம் காட்டாமல் செய்தியாளர்களுக்கு தற்போதைய தலைவர் எரின் ஓ"டூல் மற்றும் அவரது குழு பற்றிய கருத்துக்களைக் கூறினார்கள். இந்த விடயத்தில் தற்போதைய தலைவர் எரின் ஓ"டூல் மற்றும் அவரது குழு எதிர்கொள்ளும் கோபம் உண்மையானது,

"எரின் சிறப்பாக செயல்படவில்லை என்று கன்சர்வேடிவ் கட்சியின் முன்னாள் தலைவர் ஆண்ட்ரூ சியர்," அவர்களும் "அவர் குறைவான இடங்களையும், குறைந்த சதவீத மக்கள் வாக்குகளையும் வென்றார்." என்று வேறு சிலரும் கூறினார்கள்.

இவ்வாறாக ஏமாற்றம் அளிக்கும் இந்த 2021 தேர்தலுக்குப் பின்னர். முன்னைய தலைவர் அன்ரூ சியரைப் போலவே, எரின் ஓ"டூலும் தொடர்ந்து கன்சர்வேடிவ் கட்சியின் உறுப்பினர்களையும் சிரேஸ்ட உறுப்பினர்களையும் வழிநடத்துவாரா என்ற கேள்வியே தற்போது முக்கிய ஒன்றாக கட்சிக்குள் தொடர்கின்றது என்பதே உண்மை.







# ரொறன்ரோ மாநகரில் முதலாவது உணவகத்தை ஆரம்பித்து வெற்றி நடை போடும் SAFFRON SPICE KITCHEN உரிமையாளர்கள் உங்கள் அனைவரையும் தமது மிசிசாகா நகர் கிளை திறப்பு விழாவிற்கு அன்போடு அழைக்கின்றனர்



YOU ARE INVITED TO THE

## Grand Opening

OF

## saffron spice kitchen

Authentic Sri Lankan & South Indian Cuisine



SATURDAY
25 SEPTEMBER 2021



4646 Heritage Hills Blvd, Unit 15
Mississauga, ON
L5R 1Y3



1PM-10PM

FOR MORE INFORMATION CONTACT US AT
416.457.8609
saffronspicek@gmail.com











இயேசு உங்களை நேசிக்கிறார்

# இயேசு நாதர் திரும்ப வருகிறார்!

### இன்று அவர் இரட்சகர்; நாளை அவர் நீதியரசர்!

> "சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக அல்லேலூயா."
> சங்கீதம் 150:6

## இயேசு நாதர் திரும்ப வருகிறார்!

சரித்திரத்தைக் 'கிறிஸ்துவுக்கு முன்' (கி.மு.) என்றும், 'கிறிஸ்துவுக்குப் பின்' (கி.பி) என்றும் பிரித்த கிறிஸ்து இயேசுவின் பெயரால் உங்களை வாழ்த்துகிறோம்!

சரித்திரத்தின் நடுநாயகராய்த் திகழும் இயேசு நாதர் ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு முன்னர் இப்பூவுலகில் பிறந்து 33 1/2 ஆண்டுகள் பாவமற்றவராய் வாழ்ந்தார். 'கடவுள் மனிதனாகப் பிறக்கவேண்டும்' என்ற தொன்றுதொட்ட ஏக்கம் இயேசுவில் நிறைவேறியது. அவர் தன்னை 'இறைமகன்' என்று அழைத்தார்.

ஆசியா கண்டத்திலுள்ள பாலஸ்தீன நாட்டில் பிறந்து வளர்ந்த இயேசுவானவர் இறைவனின் அன்பைச் சொல்லாலும் செயலாலும் மக்களுக்கு அறிவித்தார். அவரிடம் வந்த படுபாவிகளைக் கூட மன்னித்தார்; எளியோருக்கு இரங்கினார்; தள்ளப்பட்டோரை அணைத்துக் கொண்டார்; நோயாளிகளைச் சுகப்படுத்தினார். இவ்விதம் அவர் செய்தது யாவும் மக்களது நன்மைக்காகவே.

இயேசு நாதரின் எளிய போதனைகள் மக்களைக் கவர்ந்தன. திரள் கூட்டம் அவருக்குப் பின் சென்றது. இதனால் அன்றைய மார்க்கத் தலைவர்கள் அவர் மீது பொறாமை கொண்டனர். பொய்யான குற்றச் சாட்டுகளை அவர் மீது சுமத்தினர். முடிவில் ரோமப் பேரரசின் ஆளுநர்களை வசப்படுத்தி இயேசு நாதரைச் சிலுவையில் அறைந்தனர். மக்களுக்கு அருளுரையாற்றி வந்த வேளைகளில் தனது கொடூர மரணத்தைக் குறித்து இயேசு நாதர் ஏற்கனவே முன்னறிவித்திருந்தார். உலகிலுள்ள மக்களின் பாவங்களுக்கான பலியாகவே அவர் இறக்கப் போவதாக விளக்கியிருந்தார் மட்டுமல்ல, இறந்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்துவிடுவதாகவும் தமது சீடருக்கு வாக்குப்பண்ணியிருந்தார். அவ்வாறே உயிர் பெற்று 40 நாட்கள் தனது சீடரோடு இருந்து பின்னர் விண்ணகம் சென்றார்.

விண்ணகத்திற்கு இயேசு நாதர் செல்லுமுன் அடிக்கடி சொன்ன முக்கியமான வார்த்தைகள், 'நான் திரும்பவும் வருவேன்' என்பதே. பைபிள் என்றழைக்கப்படும் திருவிவிலியத்தில் இயேசு நாதரின் முதலாம் வருகையைக் குறித்தும், இரண்டாம் வருகையைக் குறித்தும் நூற்றுக்கணக்கான முன்னறிவிப்புகள் (தீர்க்கதரிசனங்கள்) இறைவாக்குகளாய்க் கொடுக்கப்பட்டுள்ளன. அவரது முதலாம் வருகையைக் குறித்த முன்னறிவிப்புகள் யாவும் துல்லியமாய் நிறைவேறின் அப்படியே அவரது இரண்டாம் வருகையைக் குறித்த முன்னறிவிப்புகளும், பைபிளில் எழுதப்பட்டிருக்கிறபடியே, நிறைவேறும்.

இயேசுநாதர் முதலாவது வரும்போது '**இரட்சகராய்**' வந்தார். இரண்டாம் முறை வரும்போது '**நீதியரசராய்**' வருவார். இன்று அவரை நம்பி, அவரைத் தங்களது வாழ்க்கையில் இரட்சகராய் ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு இறுதித் தண்டனைத் தீர்ப்பு கிடையாது.

நண்பரே, இவ்வுலகில் பாவமே செய்யாதவர் எவருமில்லை. பாவமே செய்யாது நமக்காகப் பலியான இயேசு நாதர் ஒருவரே நமது பாவங்களை மன்னிக்க முடியும். "இயேசு நாதரே எனது பாவங்களை மன்னியும்" என்று நாம் அவரிடம் நம்பிக்கையோடு வேண்டும் போது அவர் நமது இதயத்தில் பாவ மன்னிப்பின் நிச்சயத்தைத் தருவார். எவரும் எதுவும் தரமுடியாத நிம்மதியும் மனசாந்தியும் நமது உள்ளத்தை நிரப்பும். குற்றவுணர்வு பறந்து போகும். இப்படித் தான் நாம் கடவுளின் பிள்ளைகளாக முடியும் இறைவன் நமது இதயத்தில் குடிகொள்வார்.

நீங்கள் கிறிஸ்தவரோ கிறிஸ்தவரல்லாதவரோ, எந்த மதத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும், இயேசு நாதர் உங்களை அன்பாய் அழைக்கிறார். உங்கள் பாவங்கள், பயங்கள், மனக் கவலைகள், வியாதிகள் யாவற்றையும் அவரிடம் மனம் திறந்து சொல்லுங்கள். அவர் உங்கள் கண்ணீரைத் துடைப்பார். உங்களையும் உங்கள் வேலையையும் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பார். இயேசு நாதரைத் தங்களது ஒரே இரட்சகராக, இதயதெய்வமாக, ஏற்றுக் கொண்டார்களது மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

உங்களுக்குத் தெரிந்த கிறிஸ்தவ நண்பர்களுடன் தொடர்பு கொண்டு பைபிள் வாங்கிப் படியுங்கள். மனதில் இன்னும் உங்களுக்குத் தெளிவு உண்டாகும்.

இயேசு நாதர் திடீரென்று, நாம் எதிர்பாராத நேரத்தில், திரும்ப இவ்வுலகிற்கு வருவார். அவரையே தங்களது பாவம் தீர்க்கும் இரட்சகராகவும், இதய தெய்வமாகவும் வழிபட்டு வாழ்பவர்களை அவர் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வார்; மற்றவர்களுக்கு நரகம்தான் என்கிறது திருவிவிலியம் "அவரது சினம் விரைவில் பற்றியெரியும்; அவரிடம் ஒட்டிக் கொள்வோரோ அருள் பெற்றோர்" என்றும் அது கூறுகிறது.

உங்கள் ஆன்மா நித்திய நித்தியமாய் முடிவில்லாது இறைவனோடு ஆனந்தமாய் வாழவேண்டும் என்ற விருப்பத்துடன் தான் இப்பிரசுரம் உங்களுக்குக் கொடுக்கப்பட்டது. இதைப் பொறுமையாய் வாசித்தற்கு நன்றி! உங்களுக்கு இறையாசி பெருகட்டும்!

# இயேசு உங்களை நேசிக்கிறார்

"பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகதெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரங்கியுங்கள்."
மாற்கு 16:15

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்."
மாற்கு 16:16

கவியரசர் கண்ணதாசன் 1982இல் எழுதிய 'இயேசு காவியம்' எனும் 400 பக்க நூலின் இறுதி அத்தியாயத்திலிருந்து இரு கவிகள்

தத்துவ ஞானம் புத்துயிர் பெற்றது
யூத நிலத்தினிலே!
சத்திய வேதம் நின்று நிலைத்தது
தாரணி மீதினிலே!
எத்தனை உண்மை வந்து பிறந்தது
இயேசு பிறந்ததிலே!
இத்தனை நாளும் மானிடன் வாழ்வது
இயேசுவின் வார்த்தையிலே!
மண்ணிடை இயேசு மறுபடி வருவார்
என்பது சத்தியமே!
புண்கள் இருக்கும் வரையில் மருந்து
இதுதான் தத்துவமே!
எண்ணும் எழுத்தும் எல்லாம் அவரே;
இயேசுவை நம்புவமே!

## கனடா நாட்டிற்காய் வேண்டல்

விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவராகிய கடவுளே, ஒரே மனிதனிலிருந்து உலகித்திலுள்ள அத்தனை இனத்தாரையும் மொழியினரையும் தோன்றச் செய்தவரே, அளவிடமுடியாத உமது ஞானத்திற்காய் உம்மைப் போற்றிப் புகழுகின்றோம். கனடா நாட்டில் எங்களைப் பிறக்கச் செய்க உமது நோக்கத்திற்காய் நாங்கள் உம்மைத் துதிக்கிறோம்.

படைப்பின் தேவனே,
எங்கள் நாட்டின் பல்வேறு மொழிகளுக்காக, கலாச்சாரங்களுக்காக, மக்களினங்களுக்காக உம்மைத் துதிக்கிறோம். நாட்டின் மண்வளம், நீர்வளம் மற்றும் தாதுவளத்திற்காய் உமக்கு நன்றி சொல்லுகிறோம். எங்கள் நாட்டு சுதந்திரம் கொடுத்ததற்காய் உம்மைப் போற்றுகிறோம். இதற்காய் உழைத்த, உயிர்கொடுத்த அத்தனை பேருக்காகவும், ஆண்டவரே, உம்மைத் துதிக்கிறோம்.

சேனைகளின் கர்த்தரே,
எங்களை ஆளும் தலைவர்களுக்காய் உம்மை வேண்டுகிறோம். அவர்கள் ஒவ்வொருவரும் தன்னலமின்றித் தியாகவுணர்வுடனும், பாரபட்சமின்றி அர்ப்பணிப்புடனும், ஊழலின்றி உண்மையுடனும் செயல்பட அவர்களை உமது கரத்திற்குள் வைத்துக் கொள்ளும். நாட்டின் சமாதானத்தைக் குலைக்கும் தீய சக்திகள் ஒழிந்துபோவதாக. மக்கள் யாவரும் நாட்டின் சட்டதிட்டங்களுக்குக் கீழ்படிந்து, ஒருவரையொருவர் மதித்து நடக்க உதவி செய்யும். செல்வந்தர்கள் தங்கள் பணப்பைகளை ஏழை எளியவருக்குத் தாராளமாய்த் கொடுக்கும் மனப்பான்மை எங்கள் நாட்டில் உருவாகிப் பெருகட்டும்.


வானுலகைப் படைத்த பரனே,
எங்கள் நாட்டில் பஞ்சம் தாண்டவமாடாதபடி ஏற்ற காலத்தில் நல்ல மழையை அனுப்பித் தாரும். தரித்தரர், தள்ளப்பட்டோர், திக்கற்றோர், அனாதைகள் இன்னும் இதுபோன்று சிறுமைப்பட்டவர்களுக்குத் தொண்டாற்றும் நபர்களையும் நிறுவனங்களையும் சிறப்பாய் ஆசீர்வதியும். வசதி படைத்த நாடுகளிலிருந்து எங்கள் நாட்டிற்று அனுப்பப்படும் உதவிகள் அதிகாரிகளால் திருடப்படாதிருக்கும்படிச் செய்யும். அடிப்படை வசதிகள் கூட இல்லாது அவதியுறும் கனடா மக்களுக்கு இரங்கும் தேவா.

கனடா திருச்சபை இயேசுவின் நற்செய்திப் பேராணையை இந்தத் தலைமுறையிலேயே நிறைவேற்றி முடிக்கும்படி நாங்கள் யாவரும் உறக்கம் தெளிய, உற்சாகம் கொள்ள எங்களைத் தட்டியெழுப்பும். ஆமென், ஆமென்!

"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்."
யோவான் 17:17



"மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோசப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோசமாக மாறும்."
யோவான் 16:20



(இப்பிரசுரத்தைத் தயவுசெய்து இன்னொரு முறை வாசியுங்கள். உங்கள் நண்பர்களுக்கும் கொடுங்கள். நன்றி!)

ஜெப உதவிக்கு அழையுங்கள்:- 416-499-4248 Service Available: ENGLISH & தமிழ்


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக் கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும் உணவுப் பதார்த்தங்களும்.....
மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைண்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைண்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# சனாதிபதி கோட்டாபய இராபச்ச அவர்களது பேச்சு அடிநாக்கில் நஞ்சு நுனி நாக்கில் தேன்!

- கனடா நக்கீரன்

**"Will you walk into my parlour?" said the Spider to the Fly.**
**"'Tis the prettiest little parlour that ever you did spy.**

இந்த வரிகள் ஒரு ஆங்கிலக் கவிஞன் எழுதிய பாடலில் வருகிறது.

"நீங்கள் என் வரவேற்பு அறைக்கு வருவீர்களா?" எனச் சிலந்தி ஒரு ஈயைப் பார்த்துக் கேட்டது.
"அது நீங்கள் என்றுமே பார்த்திராத அழகான சிறிய வரவேற்பறை."




கதையின் தார்மீகம் என்னவென்றால், முகத்துதி செய்து நட்புடன் செயல்படும் அனைவரும் உண்மையில் அப்படியில்லை. தீயவர்கள் முகத்துதியை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்கள். இது அவர்களுக்கு எதிரான ஒரு எச்சரிக்கை. ஈயைத் தனது பசிக்கு உணவாக்குவதுதான் சிலந்தியின் தந்திரம். சிலந்திவலையில் சிக்குப்படும் ஈ மீளமுடியாது. அது ஒரு வழிப் பாதை.

76 ஆவது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க் சென்ற இலங்கையின் சனாதிபதி கோட்டாபய இராசபக்ச ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்ரஸை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். அதன்போது சனாதிபதி கோட்டாபய பல உறுதிமொழிகளை அவருக்கு வழங்கியிருந்தார். முக்கியமாக -

1) காணாமல்போன நபர்கள் தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை வெகுவிரைவில் முன்னெடுப்போம்.

2) போரில் இறந்தவர்களது இறப்புச் சான்றிதழ்களை வழங்குதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

3) தீவிரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்த பின் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதை கவனத்தில் கொண்டு அவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கத் தயங்க மாட்டேன்.

4) இலங்கையில் மீண்டுமொருமுறை பிரிவினைவாதம் உருவாக மாட்டாது என்று உறுதியளிக்க முடியும். மத அடிப்படைவாதம் தொடர்பில் அரசாங்கம் என்ற ரீதியில் இலங்கையைப் போன்றே ஏனைய அனைத்து நாடுகளும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

5) உள்ளக பொறிமுறை ஊடாக, நீண்ட காலமாக நிலவி வருகின்ற இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிகளை மேற்கொள்ளப் புலம்பெயர் தமிழ் சமூகத்தினருக்கு பகிரங்க அழைப்பு.

ஆனால் இலங்கையில் காணப்படும் யதார்த்தம் என்ன? சனாதிபதி இராசபக்ச நுனி நாக்கில் தேனும் அடிநாக்கில் நஞ்சையும் வைத்துக் கொண்டு பேசுகிறார். எப்படி ஈ யைப்பார்த்து சிலந்தி தந்திரமாக தனது வரவேற்பறைக்கு அழைத்ததைப் போல சனாதிபதி இராசபக்சாவும் புலம்பெயர் தமிழ் சமூகத்தினருக்கு அழைப்பு விடுக்கிறார்!

புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநித்துவப் படுத்தும் பல அமைப்புக்களை இதே சனாதிபதி இராசபக்ச கடந்த பெப்ரவரி 25, 2021 அன்று ஒரு சிறப்பு வர்த்தமானி மூலம் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துள்ளார்! இந்தப் பட்டியலில் 14 தமிழ் அமைப்புக்களும் 400 க்கும் அதிகமான தனிமனிதர்களும் இடம் பெற்றுள்ளார்கள்.

இந்தப் பயங்கரவாதப் பட்டியலை தொடக்கத்தில் அறிமுகப்படுத்தியவர் முன்னாள் சனாதிபதி மகிந்த இராசபக்சா அவர்கள்தான். கடந்த 2014 மார்ச்மாதம் 16 தமிழ் அமைப்புக்களும் 427 தனிமனிதர்களும் அரசாணை மூலம் பயங்கரவாதப்பட்டியலில் சேர்க்கப்பட்டார்கள்.

பின்னர் நல்லாட்சி அரசில் வெளியுறவு அமைச்சர் காலம் சென்ற மங்கள சமரவீர அவர்கள் அந்தப் பயங்கரவாதப் பட்டியலில் இருந்த 8 தமிழ் அமைப்புக்களையும் 267 தனிமனிதர்களையும் நீக்கினார். அதன் மூலம் 8 தமிழ் அமைப்புக்களும் 157 தனிநபர்களும் மட்டும் அந்தப் பயங்கரவாதப் பட்டியலில் எஞ்சியிருந்தார்கள்.

மேலே கூறியது போல இப்போது மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது. 16 அமைப்புக்களும் 400 க்கும் அதிகமான தனிமனிதர்களும் இடம் பெற்றுள்ளார்கள். பின்னர் எந்த முகத்தோடு சனாதிபதி இராசபக்ச தமிழ் அமைப்புக்களுக்கு அழைப்பு விடுகிறார்?

காணாமல் போனோர் தொடர்பாக தங்கள் பிள்ளைகளைப் பறிகொடுத்த தாய்தந்தையர்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக மழையிலும் வெய்யிலிலும் போராடி வருகிறார்கள்.

காணாமல் போனவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் கொடுக்கப்படுவதாக சொல்கிறார். அது மட்டும் போதுமா? அது சிக்கலுக்குத் தீர்வாகுமா?

போர்க்களத்தில் அல்ல போர் முடிந்த பின்னர் பல போராளிகளை அவர்களது பெற்றோர்கள் இராணுவத்திடம் கையளித்தார்கள். உயிரோடு கையளிக்கப்பட்ட அந்தப் போராளிகள் எங்கே?

76 வது **UNGA** யில் உரையாற்றிய ஜனாதிபதி ராஜபக்ஷ, இன, மதம், பாலினம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், அனைத்து இலங்கையர்களுக்கும் வளமான, நிலையான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவது தனது அரசின் உறுதியான நோக்கம் என்று கூறினார். "இருப்பினும், மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் உள்நாட்டு நிறுவனங்களின் மூலம் மட்டுமே நீடித்த முடிவுகளை அடைய முடியும் என்பதை வரலாறு காட்டுகிறது.

போர் முடிந்த மே 18 இரண்டு குழுக்களாக விடுதலைப்புலிகள் இராணுவத்திடம் சரணடைந்தனர். முதல் குழு 18 மே 2009 இரவு புலிகளின் அரசியல் துறைத் தலைவர் பி.நடேசன் தலைமையில் அமைதிச் செயலகத்தின் சீவரத்தினம் புலித்தேவன் மற்றும் அவரது உதவியாளர் கேணல் இராமேஎ மற்றும் நடேசனின் மனைவி வினீதா ஆகியோர் வெள்ளைக்கொடிகளை ஏந்தி சரணடைந்தனர். அவர்களோடு 60 போராளிகளும் அவர்களது உறவினர்களும் சரண் அடைந்தனர். இவர்கள் சரணடைவது பற்றி சனாதிபதி மகிந்த இராசபக்ச மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய இராசபக்சா போன்றோருக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டிருந்தது,

வெள்ளைக் கொடிகளை இராணுவத்தினர் தூரத்திலேயே பார்க்குமாறு உயரப் பிடித்துக் கொண்டு செல்லுமாறு சனாதிபதி மகிந்த இராசபக்ச ஆலோசனை கூறியிருந்தார். இருந்தும் அவர்கள் எல்லோரும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். "எஞ்சியிருந்த வி.புலிகளையும் கொன்று குவித்து விட்டோம்" என இராணுவம் தனது இணைய தளத்தில் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தது.

ஆனால் கொல்லப்பட்டவர்களை இராணுவத்தினர் எடுத்த புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் ஊடகங்களில் வெளிவந்தன, அந்தப் படங்கள் நடேசன், புலித்தேவன் மற்றும் இரமேஷ் ஆகியோர் சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் சுட்டுப் கொல்லப்பட்டதைக் காட்டின. கேணல் இராமேஷ் அவர்களை இராணுவ அதிகாரிகள் மிரட்டி உருட்டி விசாரிப்பதை வேறொரு வீடியோ காட்டியது.

18 மே 2009 மாலை, இரண்டாவது தொகுதி விடுதலைப் புலிகள் மற்றும் பொதுமக்கள் நிர்வாகத் தலைவர்கள் வட்டுவாகல் பாலத்திற்கு அருகில் உள்ள இலங்கை இராணுவத்தின் 58 வது பிரிவில் சரணடைந்தனர். இவர்களில் 40 க்கும் மேலான வி.புலித் தளபதிகள் மற்றும் செயற்பாட்டாளர்களை விசாரணைக்கு என இராணுவத்தினரால் இபோச ஊர்திகளில் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அப்படி அவர்கள் அழைத்துச் செல்வதை அவர்களது துணைவியர், உறவினர்கள் கண்ணால் கண்டிருக்கிறார்கள்.

அவர்களது பெயர்ப்பட்டியலில் 41 வி.புகளது இடம்பெற்றுள்ளன. முக்கியமாக கீழ்க் கண்டவர்களது பெயர்கள் இருக்கிறது.

(1) கே.வி. பாலகுமார் மற்றும் அவரது மகன் சூரியதீபன்
(2) வி. இளங்குமரன் (குழந்தை சுப்பிரமணியன்) தமிழீழக் கல்வித் துறையின் தலைவர். அவரது மனைவி வெற்றிச்செல்வி மற்றும் மகள் அறிவுமதி.
(3) யோகரத்தினம் யோகி வன்னியில் உள்ள "மோதல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு" பொறுப்பானவர்
(4) கவிஞர் புதுவை ரத்னதுரை, புலிகளின் கலை மற்றும் கலாச்சாரத் துறையின் ஒருங்கிணைப்பாளர்
(5) மு. பாப்பா, ஒருங்கிணைப்பாளர் விடுதலைப் புலிகள் விளையாட்டுத் துறை
(6) ராஜா (செம்பியன்) உதவி ஒருங்கிணைப்பாளர் விடுதலைப் புலிகள் விளையாட்டுத் துறை மற்றும் அவரது 3 குழந்தைகள்
(7) இளந்திரையன், விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர்
(8) வீரதேவன், ஒருங்கிணைப்பாளர் விடுதலைப் புலிகள் வங்கி
(9) எஸ்.தங்கன், அரசியல் பிரிவு துணைத் தலைவர்
(10) அருணா, தமிழீழ கல்வித்துறை
(11) எஸ். நரேன், உதவி வுசுழு இன் நிர்வாக தலைவர்
(12) குட்டி, புலிகளின் போக்குவரத்துத் துறையின் தலைவர்
(12) பிரியான், நிர்வாக சேவைத் துறை தலைவர் மற்றும் அவரது குடும்பத்தினர்
(13) வி. பூவண்ணன், புலிகளின் நிர்வாக சேவை பிரிவின் தலைவர்
(14) தங்கையா, நிர்வாக சேவை துறை
(15) மலரவன், நிர்வாக சேவை துறை
(16) பகீரதன், நிர்வாக சேவைத் துறை
(17) ரெஹா, புலிகளின் மருத்துவ பிரிவின் தலைவர்
(18) செல்வராஜா, தளபதி மணல் அரு தலைமையகம்
(19) பாஸ்கரன், தளபதி மணல் அரு தலைமையகம்
(20) மேஜர் லாரன்ஸ்
(21) மேஜர் குமரன்
(22) பிரபா, மட்டக்களப்பு மாவட்ட தளபதி
(24) ரூபன், வழங்கல் ஒருங்கிணைப்பாளர்
(25) நகை வணிகத்தின் ஒருங்கிணைப்பாளர் பாபு
(26) இளம்பரிதி, அரசியல் பிரிவின் நிர்வாகத் தலைவர்
(27) எலிலன், திருகோணமலை அரசியல் பிரிவின் தலைவர்
(28) விஜிதரன், நிர்வாகச் செயலாளர், அரசியல் பிரிவு
(29) மேஜர் வீமன்
(30) சக்தி, ஒருங்கிணைப்பாளர் வனவியல் பிரிவு மற்றும் அவரது குடும்பத்தினர்
(31) ஈ.ரவி, வீடுகளின் பொறுப்பு
(32) சஞ்சை, முள்ளியவளை பிரதேச அரசியல் பிரிவு ஒருங்கிணைப்பாளர்
(33) பர ரதா, ஒருங்கிணைப்பாளர் நீதித்துறை
(34) குமாரவேல், ஒருங்கிணைப்பாளர் விமானப்படை பாதுகாப்பு
(35) சித்திராங்கன் மாலதி, தளபதி மணல் ஆறு மாவட்டம்
(36) சுகி, தளபதி
(37) அருணன், பெரிய கடல் புலிகள்
(38) மனோஜ் - மருத்துவ துறை
(39) லேரரன்ஸ், நிதித்துறை
(40) லோரன்ஸ் திலகர், ஒருங்கிணைப்பாளர் **TRO** திட்டத் துறை
(41) கரிகாலன், முன்னாள் தளபதி, கிழக்கு மாகாணம்

மொத்தம் 110 பெயர்கள் அடங்கிய முழுப்பட்டியலை இணையதள முகவரி **http://whiteflags.org/** இல் பார்க்கவும்.
இவர்களில் யாரும் உயிரோடு திரும்பி வரவில்லை. எல்லோரும் கடுமையான சித்திரவதைக்குப் பின்னர் கொல்லப்பட்டார்கள். சிலர் சிமெந்து குழைக்கிற இயந்திரத்துக்குள் வைக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள் எனவும் அறியப்படுகிறது. 58 ஆவது பிரிவின் கட்டளைத் தளபதியாக சவேந்திரா சில்வா இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐநாமஉ பேரவையின் ஆணையர் மிசேல் பச்லெட் போர்க்குற்றம் தொடர்பாக தங்களிடம் 120,000 ஆவணங்கள் இருப்பதாக அண்மையில் நடந்த ஐநாமஉ பேரவை அமர்வில் அறிவித்திருந்தார்.

இந்தப் பின்னணியில் சனாதிபதி இனச் சிக்கலுக்கு தீர்வு காணப் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களை அழைப்பது மிகவும் வேடிக்கையானது. அதுவும் உள்நாட்டுப் பொறிமுறை மூலமே காணாமல் போனவர்கள் பற்றி விசாரணை நடைபெறும் என்பது அந்தத் தந்திரம் நிறைந்த சிலந்தியையும் ஈயையும் நினைவூட்டுகிறது.

போர் தொடர்பான உண்மைகள் தெரிய வேண்டும். படுகொலைகளுக்குப் பொறுப்பான இராணுவ தளபதிகள் இனம் காணப்பட வேண்டும். தண்டிக்கப்பட வேண்டும். சனாதிபதி கோட்டாபய ஆட்சியில் அது நடக்கும் என தமிழர் தரப்பு நம்பத் தயாராயில்லை. கடந்த கால வரலாறு அதைத்தான் சொல்கிறது.

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 17 - 05 - 1933



மறைவு: 02 - 09 - 2021

தோற்றம்: 17 - 05 - 1943



மறைவு: 07 - 09 - 2021

## கலாநிதி கார்த்திகேசு சித்திரவடிவேலு

இளைப்பாறிய பேராசிரியர் யாழ்ப்பாண பல்கலைக்கழக விலங்கியல்துறை

அச்சுவேலி-இலங்கை

## திருமதி சித்திரவடிவேலு தவமலர்

அச்சுவேலி-இலங்கை

யாழ்ப்பாணம் அச்சுவேலி தம்பாலை சந்நிதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கலாநிதி கார்த்திகேசு சித்திரவடிவேலு அவர்கள் கடந்த 03-09-2021 அன்று வெள்ளிக்கிழமையும் அன்னாரின் துணைவியார் திருமதி சித்திரவடிவேலு தவமலர் அவர்கள் கடந்த 07-09-2021 செவ்வாய்கிழமையன்றும் இறைவனடி சேர்ந்தார்கள் என்ற தகவலை கேள்வியுற்ற உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் உலகெங்கும் வாழும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகம் சார்ந்த அனைவருக்கும் எங்கள் துயரத்தில் தொடக்கம் பங்கெடுத்து வருகின்றார்கள்.

கலாநிதி கார்த்திகேசு சித்திரவடிவேலு அவர் உயிர் துறந்த நான்காம் நாளே அன்னாரின் அன்புத் துணைவியாரும் உயிர் துறந்த பிரிவானது எமது உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் சூழ்ந்த வட்டாரத்தில் மிகுந்த சோகத்தையும் அதிர்ச்சியையும் தோற்றுவித்தது என்பதை அனைவருமே நன்கு உணர்ந்து அவர்கள் இருவருக்கும் தங்கள் அஞ்சலிகளை செலுத்தினார்கள்..

அமரராகிவிட்ட கலாநிதி கார்த்திகேசு சித்திரவடிவேலு அவர்களின் மறைவு தொடர்பாக யாழ்ப்பாண பல்கலைக் கழக சமூகம் வெளியிட்ட அனுதாபக் குறிப்பு ஒன்றில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது

விலங்கியல் துறையின் ஓய்வுபெற்ற இணைப் பேராசிரியர்

விலங்கியல் மற்றும் தாவரவியல் துறையின் முன்னாள் தலைவர்

எங்கள் அன்பான ஆசிரியர் பேராசிரியர் கே. சித்திரவடிவேலு அவர்கள், விலங்கியல் துறையின் ஓய்வுபெற்ற இணைப் பேராசிரியரும், மீன்வள மேம்பாட்டு மையத்தின் முன்னாள் இயக்குனரும் ஆவார், யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகமானது 03.09.2021 அன்று இடம்பெற்ற அவரது மறைவுக்கு இதயப்பூர்வமான துக்கத்தை வெளிப்படுத்த வார்த்தைகள் போதாது என்றே கருதுகின்றது. அன்னார் அவர் ஒரு அழகான ஆன்மா, அன்பும் நம்பிக்கையும் நிறைந்தவர்.

இந்த அற்புதமான தம்பதிகள். பக்தி நெறி தவறாமல் வாழ்ந்து ஓரே வாரத்தில் எம்மை விட்டு நீங்கிச் சென்றமை எம்மை ஆழத் துயலில் மூழ்கடித்துள்ளது. அன்பும் பண்பும் கொண்ட தம்பதியினர் ஆன்மீக வழியிலும் நெறி தவறாமல் வாழ்ந்தவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த இணையரின் மறைவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் ஆறுதல் கூறியவர்கள் உதவிகள் புரிந்தவர்கள், நேரடியாக எமது இல்லம் தேடி வந்து அருகில் இருந்து துயரைப் பகிர்ந்தவர்கள் உட்பட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

**இங்ஙனம்: கார்த்திகேசு யோகராஜா (சகோதரரும், மைத்துனரும்) -- தொலைபேசி இலக்கம்: (416) 451-5774**


# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).




5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# பெண்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள்



- அனைத்து வேலைகளையும் ஒரே நாளில் செய்து முடிக்க வேண்டும் என்று கஷ்டப்பட வேண்டாம் பொறுமையாக வேலைகளை செய்யவும்.
- இளைப்பாறுவதற்கு போதிய நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள், இதனால் உங்கள் உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கும்.
- சிறந்த உறக்கத்தை கடை பிடியுங்கள். எப்பொழுதும் புத்துணர்ச்சியாக உணருவீர்கள்.
- யோகா, மூச்சு பயிற்சி என்பவற்றை மேற்கொள்ளவும் இது சிறந்த உடல் நலனை பேண உதவும்.
- கண்ணாடி முன் நின்று உங்களை நீங்களே பார்த்து ஒரு அழகான புன்னகை புரியுங்கள் இது உங்களை எப்பொழுதும் மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவும்.
- கடைக்கு சென்று உங்களுக்கென பிடித்த சிறு சிறு பொருட்களை வாங்கி வாருங்கள் இது உங்களிடமுள்ள ஒரு குழந்தை தனமான ஆசைகளை நிறைவேற்றும், மன மகிழ்ச்சியையும் தரும்.
- உடல் நிலை குறைப்பாடாக இருந்தால் அது தானாகவே சரியாகி விடும் என வீட்டிலேயே இருக்காமல் சிறந்த மருத்துவரின் உதவியை நாடுங்கள்.
- தினமும் உங்கள் அழகை பராமரிப்பதற்கென ஒரு நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுங்கள் இது உங்களை நீங்களே விரும்புவதற்கு காரணமாக இருக்கும்.
- சமூகத்தில் நடைபெறும் விடயங்களை செய்தி நிகழ்ச்சி, பத்திரிகை போன்றவற்றின் மூலம் அறிந்துக் கொள்ளுங்கள், எம்மை பொது அறிவுடன் வைத்திருக்க உதவுவதாக அமையும்.
- வீட்டு விடயம் மட்டுமல்லாமல் வேறு விடயங்களில் உங்களுக்கென தனி திறமைகள் இருந்தால் அதை வளர்த்துக்கொள்ள முயற்சி செய்யுங்கள் உங்களின் தன்னம்பிக்கையை இது அதிகரிக்கும்.

ஒரு பெண்ணாக எப்பொழுதும் குடும்பத்தை பற்றி நீங்கள் சிந்திப்பது எவ்வளவு சிறந்ததோ அதே அளவு உங்களுக்கென சிறுது நேரம் ஒதுக்கி உங்கள் நலனை கவனத்தில் கொள்வதும் சிறந்தது.

**- இரா. சஹானா**


வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE PRESENTS...
சமூக உளவளம் பேணும் தொடர் - 23
VASANTHAM TAMIL WELLNESS CENTRE

## வாழ்வைத் தொடர்வதும் முடிப்பதும் எமது கைகளில்!

**Continuing and Ending Our Life is in Our Hands!**

Monday, Septemeber 20th, 2021
7:00 - 9:00 PM
Zoom ID: 918 584 6813
No Password



**Cancer: A Journey to Win - A life Story**
**புற்றுநோய்:- ஒரு வெற்றிப் பயணம்**
Vijitha Mylvaganan



**Days of our last Journey; in the Diaspora**
**புலம்பெயர் பயணத்தின் அந்திப் பொழுதுகள்**
Dr. Joseph Chandrakanthan - Regular professor
Faculty of Theology, University of Toronto

Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!

(647) 374-4685
VASANTHAM.CA
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
HOSTED BY DR. PARVATHY KANTHASAMY
CONTACT: (416) 847-4172





# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

**0%வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

**தமிழில் தொடர்புகளுக்கு:**
**வசந்தி சிவராஜா - 416-616-3077**




No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

**எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்**

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto


**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York




# சென்னை இளைஞன் ஹாலிவுட் படத்தில் கதாநாயகனாக அறிமுகம்





சென்னை இளைஞன் *எபின் ஆன்டனி* ஆங்கில படத்தில் கதாநாயகனாக அறிமுகாகியுள்ளார். சமீபத்தில் அமெரிக்காவில் ஆமேசன் பிரைம் ஒ டி டி தளத்தில் வெளியான டேனில் ரான்சம் கதை எழுதி இயக்கிய “*ஸ்போக்கன்*” (Spoken) என்ற ஹாரர் படத்தில் தான் இவர் நடிகராக அறிமுகமாகியுள்ளார். இதில் கதா நாயகியயை துரத்தி காதலிக்கும் இசை கலைஞனாக நடித்துள்ளார்.

சென்னையில் வளர்ந்த இவருக்கு சினிமா நடிப்பில் ஆர்வம் அதிகமாக இருந்த காரணத்தினால் கல்லூரியில் படிக்கும் போதே நூறுக்கும் மேற்பட்ட தமிழ், ஆங்கில படங்களுக்கும் கார்ட்டூன் படங்களுக்கும் குரல் கொடுத்து வந்தார். அதுவே இவருக்கு சினிமாவில் பிரவேசிக்க முதல் படியாக அமைத்தது. அமெரிக்காவில் மேல் படிப்புக்கு சென்றவர், தன் நடிப்பு திறனை அதிகரிக்க, லாஸ் ஏஞ்சல்சிலுள்ள நியூயார்க் ∴பிலிம் அகாடமியில் நடிப்பு கற்று கொண்டார். தற்சமயம் லியானார்டோ டிகாப்ரியோ போன்ற ஆஸ்கார், எமி விருது பெற்ற பிரபலங்களின் ஆக்டிங் கோச் லாரி மோஸ், டிம் பிலிப்ஸ் ஆகியோரிடமும் நடிப்பு கற்று வருகிறார். எபின் நடித்த இரண்டாவது ஆங்கில படம், டாம் லெவினின் “பார்ட்டி” என்ற நாவலை தழுவி கெவின் ஸ்டீவன்சன் இயக்கிய “*பட்டர் ∴ப்ளைஸ்*” இந்த வருடம் வெளிவர உள்ளது. ஹாலிவுட் படங்களின் நடிக்க வாய்ப்புகள் கிடைத்து வரும் வேளையில் தனக்கு தமிழ் மற்றும் தென்னிந்திய மொழி படங்களில் நடித்து பிரபலமாக வேண்டும் என்பது தான் ஆசையும் லட்சியமும் என்கிறார் எபின் ஆன்டனி.

# ரொறன்ரோ தமிழ்த் திரைப்பட விழாவில் இரண்டு விருதுகளை "ஷார்ட் கட்" தட்டிக்கொண்டது




சர்வதேச புகழ்பெற்ற டொராண்டோ தமிழ் திரைப்பட விழாவில் சிறப்பு நடுவர் பிரிவில் சமூக பிரச்சினைகளை பிரதிபலிக்கும் சிறந்த திரைப்படத்திற்கான விருதை மணி தாமோதரன் இயக்கியுள்ள “ஷார்ட் கட்” பெற்றுள்ளது.

மேலும், இந்த படத்தின் நாயகனான ஸ்ரீதர், டொராண்டோ தமிழ் திரைப்பட விழாவில் சிறப்பு நடுவர் பிரிவில் சிறந்த நடிகருக்கான (அறிமுகம்) விருதை பெற்றுள்ளார்.

விருது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள ஸ்ரீதர், “எனது முதல் படத்திலேயே இந்த கவுரவமிக்க விருது கிடைத்திருப்பது எனக்கு ஊக்கத்தையும் உத்வேகத்தையும் அளிக்கிறது. இந்த விருதுக்கு என்னை தேர்ந்தெடுத்த டொராண்டோ தமிழ் திரைப்பட விழாவின் நடுவர் குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றி”, என்று கூறினார்.

படத்தின் இயக்குநர் மணி தாமோதரன் கூறுகையில், “பணத்திற்காக வாக்குகளை விற்பது என்பது பணம் வாங்கிக் கொண்டு கழிப்பிடத்தை வாடகைக்கு விடுவதை போன்றதே. இதன் காரணமாகவே அரசியலும், நாடும் நாற்றமடைகிறது. இது தான் ஷார்ட் கட்டின் மையக்கரு. இதை ஜனரஞ்சகமான முறையில், மக்களுக்கு புரியும் வண்ணம், அதே சமயம் அவர்கள் ரசிக்கும் விதத்தில் கூறியிருக்கிறோம்”, என்றார்.

“கையில் சுத்தமாக பணமே இல்லாத நான்கு பேர் திடீர் “ஞானோதயம்” பெற்று அடுத்தவர்களை ஏமாற்றி ஒரே நாளில் எவ்வாறு கோடீஸ்வரர்கள் ஆகிறார்கள் என்பதை லாஜிக்குடன் சொல்லி இருக்கிறோம். தமிழ் சினிமாவில் முதல் முறையாக “ரெட் ஜெமினி” காமிராவை பயன்படுத்தி படம்பிடித்துள்ளோம்”, என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மணி & மணி கிரியேஷன் தயாரித்துள்ள ஷார்ட் கட், அரசியல் சார்ந்த சமூக திரைப்படமாகும். படத்தை எழுதி இயக்கியுள்ள மணி தாமோதரன் பாடல்களையும் எழுதியுள்ளார்.

கே எம்ரயான் இசையமைத்துள்ளார். படத்தின் ஒளிப்பதிவை விஜய் கிருஷ்ணா மற்றும் மகேஷ் ஸ்ரீதர் கையாண்டுள்ளனர். படத்தொகுப்புக்கு விது ஜீவா பொறுப்பேற்றுள்ளார். எம் சிவராமன் தயாரிப்பில் உருவாகியுள்ள “ஷார்ட் கட்” மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வெற்றிப்படமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 18 வயது இளைஞர் இயக்கிய "காற்றினிலே" திரைப்படத்திற்கு இயக்குநர் பாக்கியராஜ் பாராட்டு




பதினெட்டு வயதேயான ஈஸ்வர் கோபால கிருஷ்ணன் இயக்கிய “காற்றினிலே” என்ற 50 நிமிட-திரைப்படம் இயக்குநர் கே பாக்கியராஜ் மற்றும் தயாரிப்பாளர் ரவிந்தர் சந்திரசேகரன் உள்ளிட்ட பல பிரபலங்களின் பாராட்டுகளை பெற்றுள்ளது.

இந்த படம் சமீபத்தில் சத்யம் திரையரங்கில் திரையிடப்பட்டது. படத்தைப் பார்த்த பிறகு தனது கருத்துகளைப் பகிர்ந்த பாக்கியராஜ், “ரசிகர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு முதல் காட்சி மிகவும் முக்கியமானது, அதை இந்த இளம் குழு அற்புதமாக செய்துள்ளது. இயக்குநர் ஈஸ்வர் கோபால கிருஷ்ணனின் தன்னம்பிக்கை பாராட்டப்பட வேண்டும். இந்த படத்தில் பங்காற்றிய அனைத்து தொழில்நுட்ப கலைஞர்களின் நண்பர்களையும் பாராட்டுகிறேன். தங்கள் மகனின் ஆர்வத்தை அடையாளம் காட்டியதற்கும், அவர் விரும்பிய பாதையில் தொடர ஊக்குவிப்பதற்கும் ஈஸ்வரின் பெற்றோருக்கு நான் நன்றி கூற விரும்புகிறேன்”, என்றார்.

இவ்வளவு இளம் வயதிலேயே சிறப்பான ஒரு படத்தை ஈஸ்வர் உருவாக்கியுள்ளார் என்று தயாரிப்பாளர் ரவீந்தர் சந்திரசேகரன் கூறினார்.

“இந்த இளம் குழுவினரின் திரைப்படத்தின் தரம் உண்மையில் பாராட்டத்தக்கது. முழு அணியின் கடின உழைப்பும் இந்தப் படத்தில் தெளிவாகத் தெரிகிறது”, என்று அவர் மேலும் கூறினார்.

இந்த படத்தின் கதை மற்றும் திரைக்கதையை எழுதி இயக்கிய ஈஸ்வர் திரைப்படத்தைப் பற்றி பேசுகையில், இது ஒரே இரவில் இரண்டு பேருக்கு இடையே நடக்கும் காதல் கதை என்று கூறினார்.

“நான் ஆண்டு பத்தாம் வகுப்பு படிக்கும் போது, ராம் இயக்கிய “கற்றது தமிழ்” திரைப்படத்தைப் பார்த்தேன். அதில் ஒரு பாடலில் வரும் “கதை பேசிக்கொண்டு வா காற்றோடு போவோம்” என்ற ஒரு குறிப்பிட்ட வரி இந்த படத்திற்கு உத்வேகம் அளிக்கிறது”, என்றார்.

“காற்றினிலே படத்தில் நெருக்கமான காட்சிகள், போதை பொருட்கள் மற்றும் மதுபானங்கள் இல்லை. இவை எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட ஒரு படத்தை நான் எடுக்க விரும்பினேன். படம் பார்த்தவர்கள் பாரட்டியுள்ளார்கள். ஒரு பிரபலமான ஓடி தளத்தில் படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளோம்”, என்று அவர் மேலும் கூறினார்.

“ஆறாம் வகுப்பிலிருந்து நான் எனது நண்பர்களுடன் சேர்ந்து குறும்படங்களை உருவாக்க தொடங்கினேன். பின்னர் ஒரு முழு நீள திரைப்படத்தை இயக்க விரும்பினேன், இதன் விளைவாக இப்போது “காற்றினிலே” உருவாகியுள்ளது. என் பெரியப்பா ஒளிப்பதிவாளர் எம் வி பன்னீர்செல்வம் எனக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறார். இயக்குநர் கவுதம் வாசுதேவ் மேனனை எனது முன்மாதிரியாக கருதுகிறேன். இந்தப் படத்தில் அவரால் ஈர்க்கப்பட்டு, அவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட சில காட்சிகளும் உள்ளன”.

கல்லூரியில் முதலாமாண்டு படித்து வரும் ஈஸ்வர், படிப்பை முடித்த பிறகு திரைப்படங்களை எடுக்க முயற்சி செய்யவுள்ளதாக கூறினார்.

அருண் கிருஷ்ணா மற்றும் தக்'னா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் காற்றினிலே திரைப்படத்தில் நடித்துள்ளனர். இந்த படத்தை ஈஸ்வரின் தாயார் விஜி பாலசந்தர் தயாரித்துள்ளார். யோகான் மனு இசையமைத்துள்ளார். ஒளிப்பதிவு மற்றும் எடிட்டிங் பணிகளை சுதர்ஷன் ஆர் செய்துள்ளார்.

# "இராமே ஆண்டாலும் இராவணே ஆண்டாலும்" படத்தில் இடம்பெற்ற "லல்லாரியோ.." பாடலின் வீடியோ, அமேசன் பிரைமில் வெளியீடு

நடிகர் சூர்யாவின் 2டி என்டர்டெய்ன்மென்ட் நிறுவனம் தயாரிப்பில் இயக்குனர் அரிசில் மூர்த்தி இயக்கத்தில் உருவாகியிருக்கும் திரைப்படம் “இராமே ஆண்டாலும் இராவணே ஆண்டாலும்”. இந்தப்படத்திற்காக இசையமைப்பாளர் கிரிஷ் இசையில் பாடலாசிரியர் வே. மதன்குமார் எழுதிய “லல்லாரியோ லல்லாரியோ...” எனத் தொடங்கும் பாடலை பின்னணி பாடகர் வேல்முருகன் பாடியிருக்கிறார். இந்த பாடலின் வீடியோவை அமேசான் பிரைம் வீடியோ இன்று வெளியிட்டிருக்கிறது. இந்த பாடலில் படத்தில் இடம்பெற்ற இரண்டு முன்னணி கதாபாத்திரங்களுக்கு இடையேயான சகோதரத்துவ உறவு அழகாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இதற்கான காணொளிகளில் இடம் பெற்றிருக்கும் காட்சிகள் ரசிகர்களை கவரும் வகையில் அமைந்திருக்கிறது.

2டி என்டர்டெய்ன்மென்ட் நிறுவனம் சார்பில் நடிகர் சூர்யா தயாரித்திருக்கும் “இராமே ஆண்டாலும் இராவணே ஆண்டாலும்” என்ற திரைப்படம் செப்டம்பர் 24ஆம் தேதியன்று அமேசான் பிரைம் வீடியோவில் வெளியாகிறது.

அமேசான் பிரைம் வீடியோவில் வெளியான இந்தப் பாடல், டிஜிட்டல் தள பார்வையாளர்களிடம் ஏகோபித்த ஆதரவை பெற்று வருகிறது.



# கடந்தவையும் கடப்பவையும் (3)

- உமா மோகன் -

வெளியில் இழந்தவை எவை? - அன்று
வழியில் நடந்தவை தான் அவை
குயில்கள் கூவும் மாமரச் சோலைகள்
வெய்யிலுக்கு ஆறும் ஆலமரச் சாலைகள்

நாற்றிற்கு நீர் ஊற்றும் தாத்தாவின் சிரிப்பு - ஆடியில்
காற்றுக்கு அசைந்தாடும் காத்தாடிகளின் அணிவகுப்பு
கந்தவனத்தானின் காண்டாமணி அழைப்பு- அங்கு
நந்தவனத்திற்கு அருகிருக்கும் வன்னிமரத்தானின் தரிசிப்பு

ஆலமர நிழல் கொடுக்கும் திண்ணையுள்ள மண்டபத்தின் காட்சி - அதற்கு
மாலை நேரம் ஓய்வெடுக்கும் அண்ணாமாரின் கலகலப்பே சாட்சி

கொஞ்சம் தள்ளிப்போனால் ஆலடி

வெண்ணுரை தள்ளும் கடல் - அதில்
விண்ணென்று ஓடும் விசைப் படகு
மெல்லவே போகும் கட்டுமரம் - காற்றுடன்
செல்லமாய் விளையாடும் பாய்க்கப்பல் - தூரத்தே
துல்லியமாய்த் தெரியும் பெரும் கப்பல்

அள்ளிய மீனுடன் மீனவர்கள் - ஆலடிச்சந்தையில்
ஆண்களும் பெண்களும் கூடவே நின்று
பாங்குடன் பேரம் பேசும் பேரிரைச்சல்
தள்ளியே நின்று பார்த்தாலும் - காட்சி

கண்ணுக்கு விருந்தாக இருந்ததுண்டு
அண்டைக்குப் பார்த்த ஆலடியை - அதே போல்
எண்டைக்கும் பார்க்க முடியாது

அன்று வண்டியில்,

ஏறி ஆறடி வைப்பதற்குள்-கண்
தேடிடும் ஆலடி வந்துவிடும்
ஆலடி அழகை இரசிப்பதற்குள்
பாரடி என்னையும் என்பது போல்

சீசன் சீசன் என நச்சரிப்பார் நடத்துனர்
ஈசனே! இவரோடு பெரும் தொல்லை என எண்ணி
பொறுங்கோ வாறன் எண்டு முதுகிலுள்ள பெரும்
பொதியைத் திறப்பதற்குள் திட்டித் தீத்திடுவார்

நெருக்கமான நேரம் அது, கை
எடுத்துத் திறக்கேலாது - திறப்பதற்கு
உதவிக்கு ஆள்த்தேடி நெரிந்தபடி முன்செல்ல
ஒருவிதமாய் முறாய்த்தபடி பின் செல்வார் - பின்

தேடிப்போய்க் கொடுப்பது தேவை அற்றது என எண்ணி
தேடிடும் கண்களின் தேடலைத் தொடருவேன்

திக்கம்

சத்தமின்றி சலனமின்றி மெத்தச் சனக் கூட்டமின்றி
அச்சம் தந்த அப் பாலத்தோடு இணைந்ததொரு
இடுகாடும் உண்டு -அங்கு
துஞ்சியோர் தீயினிலே வேகுவதை
அஞ்சி அஞ்சிப் பார்த்த நாட்கள் பலவுமுண்டு

பாலை நிலம் அன்றெனினும் - சங்கத்துப்
பாலையின் பீதியை அது எனக்குத் தந்ததுண்டு
ஒருபக்கம் கடற்கரை அதை அண்டிச் சுடுகாடு
மறுபக்கம் புட்டரை ஆங்காங்கு தென்னை மரம்

பற்றை பறுகுகளால் மெத்தை விரித்தாற் போல்
சின்னதாய் சிறுகாடும் அங்குண்டு
மெல்ல அதைத்தாண்டிப்போக வருவதுதான்

சக்கோட்டை- இக்

கோட்டையும் மிக அழகே அந் நாளில்
வெட்டை வெளியான மணல்த் தரை - ஆங்கே
சுற்றிவர மதிற்சுவர் அதற்குள் - புனித
நற் தேவாலயம் - அங்கு

பச்சைப் பாலகனின் புன்சிரிப்பில்
இச்சை ஊட்டும் அழகுச்சிலை
இந்துவாக இருந்தாலும் அம்முகத்தைப் பார்த்ததுமே
முந்திவிடும் கரங்கள் அதைக் கும்பிடவே...

(தொடரும்)

# கனடாவில் லெப்டினன் கேணல் திலீபன் நினைவு நிகழ்வு

இந்த நிகழ்வில் கலந்துகொள்பவர்களை ஆளிற்கு 1-2 அழியாத உணவுப் பொருட்களையும் கொண்டு வருமாறு வேண்டுகிறோம். இப்பொருட்கள் பரந்துபட்ட சமூகத்திற்கு வழங்கப்படும்.

இந்நிகழ்வு ஓர் திறந்தவெளியில் நடைபெறுவதால் அனைவரையும் முகக்கவசங்களையும், காலநிலைக்கு தகுந்த உடைகளையும் அணிந்துவருமாறு வேண்டுகிறோம். சமூக இடைவெளிகளைப் பின்பற்றும் இந்நிகழ்வில் இருக்கைகள் எதுவும் இல்லை என்பதையும் குறிப்பிடவிரும்புகிறோம். சமூகக் கோட்பாடுகளுக்கிணங்க, இந்நிகழ்வில் ஒரு நேரத்தில் 30க்குற்பட்ட மக்களுக்கான இடமே ஒதுக்கப்பட்டுள்ளது.

Structures of Tamil Eelam: A Handbook || தமிழீழத்தின் கட்டமைப்புகள்: ஒரு கையேடு

எங்கள் அழகான தாயகத்தில் இயக்கத்தால் எழுப்பப்பட்ட நிறுவனங்களைப் பற்றிய ஒரு பார்வை. வருங்கால சந்ததியினருக்கு ஒரு முக்கியமான புத்தகம்.
கனடாவில் ஆங்கில மொழி புத்தகம் வாங்கலாம்.

விற்பனை விலை: $33.90 CAD
Contact: canada@phoenixtng.com || (647) 375-4474

முக கவசம் மற்றும் சமூக இடைவெளி கட்டாயம்.



*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 29)*


## கல்கியின்
## பொன்னியின் செல்வன்

# வந்தியத்தேவனின் இலங்கைப் பயணம்

அப்பொழுது குந்தவையும், நந்தினியும் வேதனை கொண்டனர். பின்னர் இருவரும் கந்தமாறனின் நண்பன் யார் என்று பார்க்க சென்றார்கள். அப்பொழுது கந்தமாறனும் அரண்மனை மேல் மாடத்திற்கு சென்றான். குந்தவை மிகுந்த கவலையை உள்ளிருத்தி, அந்தக் கவலைப் பெருக்கை வெளித் தெரியாதபடி நின்றாள். குதிரைகளுக்கு நடுவில் நடந்து வருபவன் வந்தியத்தேவன் அல்ல! என் நண்பன் இவர்களிடம் அகப்படமாட்டான். என்றதும் குந்தவை முகம் மலர்ந்தது. அப்பொழுது நந்தினி 'அவனைக் கொன்று விட்டார்களே!' என்று கூற, இதைக் கேட்ட குந்தவை துடி துடித்துப் போனாள். இதைக் கண்ட நந்தினி, ஆகா! இதுவல்லவா எனக்குக் கிடைத்த நல்ல ஆயுதம். உன்னைப் பழிவாங்காமல் விடமாட்டேன்! என்று எண்ணிக் கொண்டாள். குந்தவை, 'நான் என் தந்தையை குணப்படுத்த மூலிகை கொண்டுவர அனுப்பிய வைத்தியர் மகனை இவர்கள் ஏன் ஒற்றன் என்று பிடித்து வந்தார்கள்? என் தந்தையிடம் சென்று இதைக் கேட்டு வருகி-றேன்' என்று புறப்பட்டாள். அப்போது நந்தினி குறுக்கிட்டு, 'தேவி உங்கள் தந்தை நோயினால் வாடியிருக்கிறார் அவரை தொந்தரவு செய்யாதீர்கள். என் மைத்துனர் தஞ்சைக் கோட்டை தளபதி சின்னப்பழுவேட்டரையர் காலாந்தக கண்டர் இவரிடம் கேட்டுவிடலாமே! உங்கள் விருப்பத்திற்கு மாறாக அவர் நடப்பாரா?' என்றாள். உடனே இளைய பிராட்டி குந்தவை சின்னப் பழுவேட்டரையரின் மாளிகைக்கு வருவதாக செய்தி அனுப்பினாள். பின்னர் அங்கு சென்றாள். அவளை அந்தப்புர மாதர்கள் அன்புடன் வரவேற்றனர். சின்னப் பழுவேட்டரையரும் அவளை வரவேற்றார். 'பழுவேட்டரையர்கள் சோழ ராஜ்ஜியத்திற்கு பெரும் சேவை புரிந்தவர்கள் இப்பொழுது அவர்களால் சக்கரவர்த்தி ஆயுள் முடியும் வரை பொறுக்க முடியாமல் சாம்ராஜ்ஜியத்தின் அதிகாரங்களை கைப்பற்ற அவசரப் படுகிறார்கள்' என்றாள் குந்தவை. சின்னப் பழுவேட்டரையர் பதற்றமுற்று, 'இது என்ன கொடிய வார்த்தை' என்றார். கோடிக்கரைக்கு மூலிகை கொண்டு வர என வைத்தியர் மகனை அனுப்பினேன். அவனை ஒற்றன் என கட்டியிழுத்து வந்துள்ளார்கள். இதற்கு கட்டளையிட்டது நீங்கள் தானே? எனக் கேட்டாள் குந்தவை. 'ஆம் நானே அவர்களை அனுப்பினேன்! வைத்தியர் மகன் பினகபாணியும் தான் ஒற்றன் என ஒப்புக் கொண்டான்'. என்றார் சின்னப்பழுவேட்டரையர். 'தாங்கள் தானே மற்றவர்களையும் இவனோடு அனுப்பினீர்கள்?' என்றார். 'ஆமாம் அவன் காஞ்சியில் இருந்து என் தமையன் கொடுத்த ஓலையை கொண்டு வந்தவன். அவன் ஒற்றனில்லை கந்தமாறனின் முதுகில் குத்தியவனும் அவனல்ல! வைத்தியர் மகனை விடுதலை செய்யுங்கள் நான் சக்கரவர்த்தியிடம் கட்டளை பெற்று வருகிறேன்' என்றாள் குந்தவை. 'தாயே இளைய பிராட்டியின் விருப்பம் எதுவோ அதுவே சக்கரவர்த்தியின் வேதக் கட்டளை. இதோ பாதாளச் சிறைச் சாவி தாங்கள் சென்று கதவைத்திறந்து விடுதலை செய்யுங்கள். ராஜ்ஜியத்திற்கு பெரும் தீங்கு வந்தால் அது இந்த இரு பெண்களால் தான் வரும்' என்றபடி சாவியைக் கையில் கொடுத்தார் சின்னப்பழுவேட்டரையர்.

அதற்கு குந்தவை, 'சர்வாதிகார நந்தினியுடன் என்னை ஒப்பிடாதீர்கள்' என்றாள். பின்னர் குந்தவையும், வானதியும் தங்கச் சாலையின் வாசலுக்கு வந்தார்கள். காவலர்களும், பொற் கொல்லர்களும், இளைய பிராட்டி வாழ்க! என்று குரல் எழுப்ப, தங்கச்சாலைத் தலைவர் அவர்களை வரவேற்றார். பின்பு பொன்னைக் காய்ச்சும் அக்கினிக் குண்டம், நாணயவார்ப் பட்டம் செய்யும் அச்சுக்கள், தங்க நாணயங்கள் அவற்றை எல்லாம் பார்வைக்கு விட்டு புறப்பட்டார். இந்த பணம் புழக்கத்தில் வரும் முன்பு பண்டமாற்று முறை கையாளப்பட்டது. அவைக்காக உப்பு, சிப்பி, சோழிகள் பயன்பட்டன. கி மு 600, 650ல் உலோக நாணயங்கள் உருவாகியதாக அறிஞர்கள் கருதுகின்றனர். தங்கச் சாலையைக் கடந்து பாதாளச் சிறைக்கு செல்லும் வழியில் நடந்து சென்றனர் குந்தவையும் வானதியும். அங்கு புலி மண்டபம் காணப்பட்டது. சிறையில் இருந்து தப்பினால் இந்தப் புலி மண்டபத்தில் வந்து அகப்பட்டு விடுவார்கள். பின்னர் அவர்கள் கதி புலிக்கு இரைதான். இப்படித் தான் ராஜாங்க கருணையும் உண்டு, கடுமையும் உண்டு. சட்ட விதி ஒழுங்குகள் காக்கப்பட வேண்டும். தவறு செய்பவர் தண்டனை பெற வேண்டும். நாட்டின் அமைதி காக்கப்பட வேண்டும். குந்தவையும், வானதியும் பாதாளச் சிறையில் வைத்தியர் மகன் பினகபாணியை தேடிப் பார்த்தார்கள். அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால், 'பொன்னார் மேனியனே புலித் தோலை அரைக்கசைத்து' என்ற பாடல் இசை கேட்க, அங்கே நின்றார்கள். 'சிறையில் கூடவா உன் பாட்டு வருகிறது! சரி உன் உறவினர் யார் இருக்கிறார்கள்' என்றாள் குந்தவை. 'என் தாயார் அவள் பெயர் வாணி அவள் காது கேட்காது, பேசவும் முடியாது' என்றான் அந்த இளைஞன். 'உன் பெயர் சேந்தன் அமுதனா?' என்று வினவினாள் குந்தவை. 'ஆமாம் தேவி என் பெயர் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?' என்று வியப்புடன் கேட்டான் சேந்தன் அமுதன். 'என்ன குற்றம் செய்தாய்' என்று குந்தவை மேலும் கேட்க, 'ஒற்றன் ஒருவனுக்கு உதவியதாக என்னைச் சிறையில் வைத்துள்ளார்கள்' என்று கூறி, அவன் பெயர் வந்தியத்வேன் என்று நடந்தவை யாவற்றையும் சொன்னான் சேந்தன் அமுதன்.

மேலும், 'அவனைப் பாரத்தால் அவனிற்காக உயிரையும் கொடுக்கலாம் ஆனால் இன்று இந்தச் சிறையில் இருந்தவனைப் பார்த்தால் கொன்றுவிட வேண்டும் போல் தோன்றியது. நல்ல வேளையாக பழுவூர் இளையராணி இங்கு வந்து அவனை அழைத்துப் போய்விட்டார்கள். அவன் வைத்தியன் மகனாம்' இதைக் கேட்ட குந்தவைக்கு கோபம் பொங்கி எழுந்தது. 'ஏன் அவனைக் கொல்ல நினைத்தாய்' என்றாள். 'என் நண்பன் வந்தியத்தேவனுடன் இவன் கோடிக்கரை சென்றான். இவன் என் நண்பனுக்குத் துரோகம் செய்து, பிடித்துக் கொடுக்கப் பார்த்தான். ஆனால் என் மாமன் மகள் பூங்குழலி வந்தியத்தேவனை படகில் ஏற்றி இலங்கைக்கு அழைத்துச் சென்று விட்டாள்' என்றான். ஓற்றன் தப்பித்து விட்டானா? என்றனர் குந்தவையும் வானதியும். அவர்கள் முகம் மலர்ந்து பொலிந்தது. 'சரி நீ சிறையில் இருக்க தக்க காரணம் உண்டு' என்றனர் அதற்கு அமுதனும் 'அப்பொழுது உங்களையும் இங்குதான் பூட்ட வேண்டும்! என்னைச் சிறையில் வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு அடுத்த அறையில் ஒரு மனிதன் இருக்கிறான் அவனுக்கு பாண்டிய குலத்து மணிமகுடத்தையும், மாலையையும் ஒளித்து வைத்துள்ள இடம் தெரியுமாம்! அந்த ரகசியத்தை அறிந்த பின் என்னை மீட்டு எடுங்கள்' என்றான்.




'சரி' என்று குந்தவை புறப்பட்டாள். சில சேவகர்கள் வந்து, சேந்தன் அமுதனை விடுதலை செய்தனர்.

'அரசிளங் குமாரா!' தயங்கித் தயங்கி, பயந்து பயந்து இந்த நிருபத்தை எழுதத் துணிந்தேன். இராஜ்ஜியத்தின் நிலைமையைப் பற்றி பல விதமான செய்திகள் காதில் விழுகின்றன. தாங்கள் எதையும் கவனிப்பதில்லை நோயினால் மெலிந்து இருக்கும் தங்கள் தந்தை பல முறை சொல்லி அனுப்பியும், தாங்கள் தஞ்சைக்கு வரவில்லை. அதற்கு காரணம் நான் தானே என்ற எண்ணம் என்னை வதைக்கிறது. தங்களை ஒரு முறை சந்தித்தால் எல்லா சந்தேகங்களையும் போக்கிவிடுவேன் அதற்கு திருவுள்ளம் இரங்குவீர்களா? தஞ்சைக்கு வர விரும்பா விட்டால், கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் சந்திக்கலாம்! நான் இன்று உங்கள் பாட்டியின் ஸ்தானத்தில் இருக்கிறேன். நாம் சந்தித்துப் பேசுவதில் என்ன ஆட்சேபம் இருக்க முடியும்? இதைக் கொண்டு வரும் வீர இளைஞர், சம்புவரையர் குமாரனை தாங்கள் பூரணமாக நம்பி, அவரிடம் எந்த செய்தியையும் சொல்லி அனுப்பலாம். இங்ஙனம் துரதிஷ்டத்துடன் கூடப் பிறந்த அபாக்கியவதி நந்தினி. என்று அந்த நிருபத்தை எழுதி முடித்ததும் கந்தமாறனை அழைத்தாள் நந்தினி. அவனும் அங்கு வந்தான். 'தேவி உங்களிடம் அழகும், அறிவும் பொருந்தியிருக்கக் காண்கிறேன்' என்று பரவசமாகக் கூறினான். இதைக் கேட்ட நந்தினி, 'உங்கள் முகஸ்துதி எனக்கு வேண்டாம். என்னை பூரணமாக நம்பினால் எனக்கு ஒரு உதவி செய்வாயா?' என்று கேட்டாள். அதற்கு கந்தமாறன், 'என்னால் முடிகிற காரியம் எதுவானாலும் செய்கிறேன்' என்றான். 'எனக்காக காஞ்சிக்குப் போய், அங்கு ஆதித்தகரிகாலனிடம் இந்த நிருபத்தைக் கொடுத்து, அவரை கடம்பூர் மாளிகைக்கு விருந்தாளியாக அழைக்க வேண்டும்' என்றாள் நந்தினி. 'ஆகட்டும் தேவி தங்கள் கணவரும், என் தந்தையும், மற்றும் சோழ நாட்டு பிரமுகர்களும் ராஜ்ஜியத்தை பற்றி செய்து வரும் ஏற்பாடு தங்களுக்கு தெரியாதா? எங்கள் குடும்பங்கள் ஆபத்தில் நின்று வருகின்றன. இதற்கு யார் காரணம்?' என்று கந்தமாறன் கேட்க, நந்தினியோ, 'சுந்தரசோழ சக்கரவர்த்தியின் பின் மதுராந்தகதேவரோ, ஆதித்தகரிகாலரோ பட்டத்திற்கு வரலாகாது! இலங்கைக்குச் சென்ற அருள்மொழிவர்மர் தான் வரவேண்டும் என்று இந்தப் பாதகி குந்தவை சதி செய்கிறாள்! அப்படி அருள்மொழிவர்மர் வந்தால், சோழ ஆட்சி அவள் கையில் அல்லவா! தன் அக்காளின் சொல் மீறி யாதும் செய்யாதவன் அவன். குந்தவையின் சக்கரவர்த்தி யார் தெரியுமா? உங்கள் நண்பன் வந்தியத்தேவன்!' என்றாள். அதற்கு கந்தமாறன், 'அப்படியா இதை எப்படியாவது தடுத்தே ஆகவேண்டும் கட்டளையிடுங்கள் தேவி! நான் காஞ்சி போய் வருகிறேன்' என்றான். அந்தச் சமயம் திடீர் என்று பழுவேட்டரையர் அங்கு வந்தார். 'இந்தப் பிள்ளை இங்கு என்ன செய்கிறான்?' என்று வினவ, 'அவன் ஊர் திரும்பப் போகிறான் இவனிடம் ஆதித்தகரிகாலனுக்கு ஒரு நிருபம் கொடுத்து அனுப்புகிறேன். இளைய பிராட்டி தன் தம்பிக்கு இலங்கைக்கு ஓலை கொடுத்தாள் இதை அன்பின் அநிருத்தர் சொன்னாரா? மந்திரவாதி மூலம் நான் அறிந்தேன். உங்கள் தம்பியும் முத்திரை மோதிரம் பற்றி சொன்னார். ஆனால் இந்த ஓலை பற்றி யாரும் உங்களிற்கு சொல்லவில்லை நான் வைத்தியர் மகனை சிறையில் இருந்து அழைத்து வரச் சொல்லி, அவனிடம் விசாரித்து உறுதிப்படுத்தினேன்'. என்றாள் நந்தினி. கந்தமாறன் விடை பெற, 'எல்லோரும் உங்களை வஞ்சிக்கிறார்கள். இந்த தஞ்சை தங்க சிம்மாசனத்தில் தங்களை ஏற்றி வைக்க வேண்டும். இது என் இலட்சியம்!' என்றாள் நந்தினி.

வந்தியத்தேவன் நாகத ீவின் கடற்கரையில் இறங்கினான் அல்லவா? பூங்குழலி படகை திருப்பிக் கொண்டு போனாள். குந்தவையும் வானதியும் யானை மீது பயணம் செய்து தஞ்சை வந்தனர். குந்தவை தன் தந்தையை தரிசித்தாள். தஞ்சையில் ஆதுரசாலையை திறந்து வைத்தாள். நந்தினியை பார்த்தாள். கந்தமாறனுடன் உரையாடினாள். சின்னப்பழுவேட்டரையரிடம் வாக்கு வாதம் இட்டாள். பாதாளச் சிறை சென்று சேந்தன் அமுதனை விடுதலை செய்தாள். வந்தியத்தேவன் இலங்கை சென்றுவிட்டான். தன் தம்பி அருள்மொழிவர்மனை சந்திப்பான் என்ற மகிழ்ச்சியில் இருந்தாள். இலங்கைக் கரையில் நாகதீவில் இறங்கிய வந்தியத்தேவன், மாதோட்டம் நோக்கிச் சென்றான். இது ஒரு துறைமுகப் பட்டினம். இலங்கைத் தீவின் முக்கிய துறைமுகமாகவும், உலக-ளாவிய வணிகத்திலும் சிறப்புப் பெற்றது. இது இலங்கையின் வடமேற்கு கரையில், இன்றைய வடமாகாணத்தில் மன்னார் மாவட்டத்தில் அமைந்திருந்தது. இங்கு திருக்கேதீஸ்வரம் என்னும் சிவன் கோயில் உண்டு. சரித்திரச் சிறப்பு உள்ள மாதோட்டம் என்னும் மாநகரம் நூறு ஆண்டுகளிற்கு மேலாக யுத்த களமாகவே விளங்கியது. இந்த நகரம் இலங்கை மன்னராலும், பாண்டிய மன்னராலும் மாறி மாறி ஆளப்பட்டது. பின்னர் சோழர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. வந்தியத்தேவன் இந்த நகரின் கோட்டை மதில் வாசலில் நின்று, அங்கு இருந்த காவலர்களிடம் தான் சோழ சேனாதிபதியைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அப்பொழுது காவலர்கள் மறுக்கவே அவன் காவர்களைத் தள்ளி வீழ்த்திவிட்டு உள்ளே நுழைய எத்தனித்தான். அதனால் காவலர்கள் அவனை சிறையில் பூட்டினர். கொடும்பனார் பெரிய வேளாளர் பூரிவிக்கிரம கேசரி, இவர் இலங்கைப் படையின் சேனாதிபதியாக இருந்தார். இந்தச் சமயத்தில் அவர் முதல் மந்திரி அன்பின் அநிருத்தரிடம் பேசிக்கொண்டிருந்தார். அதனால் காவலர்களிடம் அவனைக் காவலில் வைக்க உத்தரவு போட்டார். அவன் தன்னுடன் வைத்திருந்த ஓலைச் சுருளையும், முத்திரை மோதிரத்தையும் எடுத்துக் கொண்டார்கள். காவலில் இருந்த வந்தியத்தேவன், மிகக் களைத்து இருந்ததால் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். குந்தவை அவன் கனவில் தோன்றி சுகம் கொடுத்தாள். அந்த சுக உணர்வில் தூங்கிக் கொண்டிருந்தான் வந்தியத்தேவன். அந்தத் தூக்கத்தைக் கெடுத்து விட்டான் ஆழ்வார்க்கடியான். வந்தியத்தேவன் சிறையில் இருப்பதை அறிந்து, சிறையில் பார்த்து, அவனருகே சென்று, 'தம்பி நீதானா?' என்றான்.

*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

---

# PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!

**Joy Square Towns**
Conebridge

**Copperhill South Barrie**
Deer Creek Fine Homes

**Alba Condos**
Edenshaw Developments Limited

**Arte Condos**
EMBLEM

**Vincent Condos**
Rosehaven Homes Limited and Townwood Homes Inc. and Guglietti B...

**Adagio Condos**
Menkes Developments Ltd.

**Kensington District Towns**
Lynbury Homes

**Minu Towns**
Stateview Homes

**Exchange District Condos 3**
Camrost Felcorp

**WestLine Condos**
CentreCourt Developments Inc.

**U.C. Tower 2**
Tribute Communities and Riocan Real Estate Investment Trust

**Verge Condos**
Riocan Real Estate Investment Trust

**Gemma Condos**
Pinnacle International



**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9





# கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

## NEW LIFE FRESH START

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

**55 Town Centre Court, Suite 700,**
**Scarborough, ON. M1P 4X4**

## வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

## Reduce your debts upto 80%



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

**Tel: 647-274-2832**
**Fax: 416-332-0914**
www.creditrecoverycanada.com

### ஜீவன் முக்தி (பகுதி ) 125

# அனுபவத்திராத அனுபவம்

சின்னப் பறவைக்கும் பெரிய பறவைக்கும் உள்ள ஈர்ப்பை போல எனக்கும் அருணகிரி யோகீஸ்வரருக்கும் இடையில் ஒரு ஈர்ப்பு இருந்தது. அது ஆழமான ஈர்ப்பு.

வீட்டில் என்ன செய்தாலும் அதைக் கட்டிக்கொண்டு வந்து அவருக்கம் கொடுப்பேன்.
அந்தச் சந்நியாசிகுக் கொடுப்பதற்காக வீட்டில் எனக்கு பொரரி பட்டமே உண்டு. வீட்டில் என்ன இருந்தாலும் சாமியார்களுக்குப் போய்விடும்.

என் கையில் எதுவுமிருக்காது. வீட்டிலும் எது இருந்தாலும் சரி, அது பணமாக இருந்தாலும் சரி, துணியாக இருந்தாலும் சரி, வீட்டுச் சாமான்கள் எதுவாக இருந்தாலும் சரி அனைத்தையும் எடுத்துக் கொண்டு போய் சாமியார்களிடம் கொடுத்துவிடுவேன்.

அதிலும் இவர் என் உயிருக்கே நெருக்கமானவர். அதனால் வீட்டில் என்ன இருந்தாலும் அதை எடுத்துக்கொண்டு போய்விடுவேன். அவர் மிக அன்போடு நடந்துகொள்வார். என்ன செய்வது? மகான்' என்ற வார்த்தையெல்லாம் அப்பொழுது எனக்குத் தெரியாது.

அவர் ஒரு சந்நியாசி.
ஒரு ஞானி.

அவ்வளவுதான். அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். இப்படியே ஒரு ஆறு மாதம் பழகிக்கொண்டு இருந்தோம். இந்த உறவு வலுப்பட வலுப்பட அவர் பல்வேறு விதமான விஷயங்களை சொல்வார்.

வாழ்க்கையைப் பற்றி, அதைப்பற்றி, இதைப்பற்றி என்று எல்லாவற்றையும் சொல்வார். அதை ஆழ்ந்து கேட்டுக்கொண்டிருப்பேன். ஒரு நாள் அவர் நான் இருக்கின்ற இடத்திற்கு வருகிறாயா? என்று அழைத்தார்.

நான் அவரிடம் 'அந்தக் குகைக்குள்ளதானே' என்று கேட்டேன். இந்தக் குகைதானே சாமி, வருகிறேனே .. போகலாம்' என்று சொன்னேன்.
அன்றைக்கு ஜனவரி 1ம் திகதி. எப்படி எனக்குத் திகதி ஞாபகம் இருக்கிறதென்றால் அந்தக் கோயிலைக் கழுவி விட்டார்கள் என்றால் தரையிலே தண்ணீராக தேங்கி இருக்கும்.

அன்று இரவெல்லாம் உட்கார்ந்து கழுவிவிட்டுக் கொண்டிருந்தோம். அந்த கோவில் காவல்காரருடன் நானும் சேர்ந்து கழுவி விட்டிருந்ததினாலே, இரவெல்லாம் ரொம்ப அலுப்பாக இருந்தது.

அதனால் சந்நியாசியின் இல்லத்திற்குள் சென்று கொஞ்ச நேரம் படுத்துக்கொள்ளலாம் என்று நினைத்தேன். அவர் என்னை அந்த குகைக்குள் அழைத்துக் கொண்டு சென்றால்.

அந்த குகையினுள் நுழைந்த உடனேயே, உடலினுள் ஏதோ ஒரு விதமாற்றம் தோன்றிய மாதிரி இருந்தது.
அதன்பிறக திடீரென்று ஒரு கதவு திறந்தது. திறந்தால் அதற்குள் ஒரு மலைமாதிரி தெரிந்தது.

அதில் தடதட வென நடந்து மலைக்குள்ளே போய்விடலாம் என்பது மாதிரி இருந்தது.

நான் ரொம்ப சின்ன பையன். இந்தக் குகைக்குள்ளே மலைக்கு போகிற வழி இருக்குமோ! என்று நினைத்தேன். ஏனென்றால் கோவிலுக்குள்ளே குகைக்குள் போகும் வழிகளும் நிறைய உண்டு.

என்னை அழைத்துக் கொண்டு குகைக்குள்ளே போனார். அங்கே போனால் பெரிய மலை இருந்தது. மலைக்கு மேலே ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. ஆலமரத்திற்குக்கீழே, சந்நியாசிகள் கூட்டமாக அமர்ந்திருந்தார்கள். இவர' நேரே சென்று அவருடைய இடத்தில் உட்கார்ந்திருந்தார். அவர்கள் மத்தியில் உட்காரந்த பிறகு தான் தெரிந்தது அவர்தான் குரு' என்று.

அவர் சென்று உட்கார்ந்த தோரணையிலேயே எனக்கு அவர்தான் குரு என்பது தெரிந்தது.

நன்கு புரிந்து கொள்ளுங்கள் இதே போன்ற அனுபவத்தை இரமண மகரிஷ 'யும் சொல்கிறார்.

அவரும் இந்த ஆலமரத்தையும், அந்த குருவையும் பார்த்திருக்கின்றார்.
அவர்தான் குரு என்று தெரிந்தவுடனேயே அவருடைய காலில் விழுந்து கும்பிட்டேன். அந்த ஆலமரத்தின்கீழ் அமர்ந்துதிருப்பவர்களைப் பார்த்தால் அங்கு எல்லோருமே காவி போட்டிருந்தார்கள்.

அதில்
நான் மட்டும்தான்
காவி இல்லாமல்
வெள்ளை ஆடையில் இருந்தேன்.

அப்போதெல்லாம் சிறுவர்கள் எல்லோரும் பள்ளிக்கு போகாவிட்டாலும், பெரும்பாலான நேரம் பள்ளிச்சீருடைதான் போட்டிருப்போம்.
பள்ளிக்குப் போகாத நாளில்கூட அதே உடைதான் அணிந்திருப்போம். வண்ண வண்ண நிறங்களில் எல்லாம் போடுவது கிடையாது.

அந்தச் சூழ்நியையிலே நான் மட்டும்தான் காவி உடை போடாமல் பளிச்சென்று வெள்ளைச் சீருடையிலேயே நின்றிருந்தேன். எனக்கு எப்போதும் நான் ஒரு சந்நியாசி என்ற உணர்வு இருந்துகொண்டே இருக்கும். காரணம் தெரியாது.

அருணகிரி யோகீஸ்வரர் என்னை அழைத்துச் சென்றிருந்தபோது நான் சாதாரண உடை அணிந்திருந்தேன்.

என்னைத் தவிர அங்கிருந்தவர்கள் எல்லோருமே காவியில் இருந்தார்கள்.

உயர்ந்த தியான உணர்வில் கருவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே இவர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல.' என்பது சந்தேகம் இல்லாமல் தெளிவாகப் புரிந்தது.

அங்கிருந்த சூழலும், சூழ் நிலையும்தான் அதுவரை பார்த்திராதது. அனுபவித்திராதது.



அப்போது அவர்கள் தங்களுக்குள, சந்யாசியல்லாத இந்த சின்ன பையன் யார்? என்று பேசிக் கொண்டார்கள்.

இதைக் கேட்டதும் சந்யாசிக்குக் குறைவாக அவர்கள் என்னை மதிப்பிடுவதாக எண்ணினேன்

சிறுவயதினருக்கே உரிய சிற்றத்தோடு ம்ஹூ ம்'
நான் சன்யாசிதான்
எனக்கு நீங்களே சன்யாசம் கொடுங்கள்' என்று அருணகிரி யோகீஸ்வரரிடம் கேட்டேன்.

அருணகிரி யோகீஸ்வரர், அப்பா நீ சன்யாசி இல்லை என்று அவர்கள் சொல்லவில்லை. உனக்குக் காவி இல்லையா என்றுதான் பேசிக்கொள்கிறார்கள்' என்று சொன்னார். சொல்லிவிட்டு அந்தச் சன்யாசிகளைப் பார்த்தார்.

என்னை அருகில் அழைத்தார். அருகில் சென்றேன்.

அங்கு புதிய காவி இல்லை. உடனே தன் தோளில் போட்டிருந்த காவியை அப்படியே எடுத்து எனக்குப் போர்த்தி விட்டார்.

அப்போது என்ன நிகழ்ந்ததோ அதை அப்படியே சொல்கிறேன்.
சிறுவயதுப் பிள்ளைக்கு மற்றவர்களுக்கு முன்னால் ஆடையில்லாமல் இருக்கவே முடியாது.

ஆனால், அருணகிரியோகீஸ்வரர் எனக்குக் காவியளித்தபோது அந்தக் காவியை அவர்கள் முன்னிலையிலேயே மாற்றிக் கொண்டேன். பிறகுதான் தெரிந்தது நமது பாரம்பரியத்தில் பூரண சன்யாச தீக்ஷை இவ்வாறுதான் நடக்கும் என்று.

நானும் பழைய துணியை கழற்றிவிட்டு, காவியை ஆனந்தமாய் அணிந்து கொண்டேன். ரொம்ப நேரம் ஆகிவிட்டது. மீண்டும் அழைத்துக் கொண்டு குகைக்கு வெளியே வந்து விட்டுவிட்டார்.

நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள்.
மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880 -8585

*(தொடரும்...)*

----

### *பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.
எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

**மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080**

## வீணாவின் கவிக்கணை

பிறையும் தேய்ந்து வளர்வதுண்டு,
நள்ளிரவும் விடியல் ஆவதுண்டு,
உழைக்க கைகளும் உனக்குண்டு,
நல்லறிவும் ஞானமும் உனக்குண்டு,
இவ்வனைத்தும் சேர்ந்த உருகொண்டு,
இனித்த சிரிப்பும் நீ கொண்டு,
மனித்த பிறவியாய் தன்நம்பிக்கை
கொண்டு, வாழ்ந்திடு வளமாய் இங்கு!!!

# ஈழத்துத் திருக்கோவில்கள் 965



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் உடுப்பிட்டி

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி வடிவினரான சிவபெருமானை, முழுமுதற் கடவுளாகக் கொண்டது சைவசமயம். பழம்பெரும் நாகரீகமாகக் கருதப்படும் சிந்துவெளிநாகரிகக் கண்டுபிடிப்புக்களின் மூலம் சைவத்தின் சின்னங்களையும், வழிபாட்டு முறைகளையும் அறியலாம். இதன்மூலம் சைவத்தின் தொன்மையையும், பெருமையையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அக்காலத்தில் இயற்கையோடிணைந்த வழிபாடாகக் காணப்பட்ட சைவம், காலப்போக்கில் முதிர்ச்சி பெற்ற மதமாக மாறியுள்ளது.

கோவில், கோபுரம், ஆகம, வைதீக கிரியைமுறைகள், திருவிழாக்கள், திருமுறை, சைவசித்தாந்தம், கலைகள், சைவத்தின் தத்துவவிளக்கவெளிப்பாடுகள் எனப் பல துறைகளிலும் தனித்துவமான தன்மைகளைக் கொண்டுள்ளதோடு, மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கேற்ற வாழ்வுநெறிகளையும், தன்னகத்தே கொண்ட நெறியாகவும் விளங்குகின்றது. ஆரம்பத்தில் சைவத்திற்குச் சனாதனதர்மம் என்ற பெயரே காணப்பட்டுள்ளது. இதற்கு நிலையான நீதிநெறிமுறை எனப் பொருள் கொள்வர். மக்களைச் செம்மையான முறையில், சமூக உணர்வோடு, வாழ்வாங்கு வாழ்வதற்கு உதவுகின்ற நெறியாகவும், படிப்படியாகப் பக்குவப்படுத்தி, மனித நிலையினின்றும் தெய்வீக நிலைக்கு உயர்த்த உதவும் உயர்ந்த நெறியாகவும் சைவம் விளங்குகின்றது.

ஆத்திக, நாத்திகக் கொள்கைகள் மனித மனதிலே காணப்பட்டபோதிலும், கடவுள் ஒருவர் உண்டென்பதை நாள்தோறும் நிகழும் செசயல்ள் எமக்கு உணர்த்துகின்றது. மனிதனின் எண்ணத்திற்கு அப்பாற்பட்ட நிலையில், இயற்கை நியதி செயற்பட்டு உலக நிகழ்வை ஒருங்குபடுத்தி வருவது கண்கூடு. நம்பிக்கையும், அன்பும் துன்பத்திலிருந்து விடுதலை பெற்று இயங்க ஆதாரமாயுள்ளது. இவற்றை நமக்கு அளிப்பனவாகக் காணப்படுபவை திருக்கோயில்கள்.

திருக்கோயில்களுக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள இறைவனை அகத்தாலும், புறத்தாலும் கண்டு, மனங்குளிர்ந்து துன்பங்களை மறந்து நலம் பெறுவதற்குத் திருக்கோயில்களும், வழிபாட்டு முறைகளும் ஆதாரமாயுள்ளன. இத்தகைய திருக்கோயில்கள் ஈழமெங்கும் காணப்படுகின்றன. தாம் விரும்பிய வடிவங்களிலே தெய்வங்களைக் கண்டு வழிபடும் மரபினைத் தமிழர்கள் பண்டு தொட்டு இன்றுவரை பேணி வருகின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகீழ்த்திசையில் உள்ள வடமராட்சிப்பகுதியில், சைவமுந் தமிழும் செழித்தோங்கும் ஊராகத் திகழ்வது உடுப்பிட்டி. இங்கு எழுந்தருளி அருளாட்சி புரிந்துவரும் சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் அறுநூறாண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மையுடையதாகத் திகழ்கின்றது. அறுவகைச் சமயங்களைத் தழுவிய வழிபாட்டு நெறி ஈழத்திலே பெரும்பான்மையாகப் பேணப்பட்டபோதிலும், சிவசக்தி அம்சமான பததிரகாளி சமேத வீரபத்திரக்கடவுளுடைய வழிபாடும் தமிழ்மக்களால் பின்பற்றப்படுகின்றது.

சிவனின் அறுபத்திநான்கு திருக்கோலங்களுள் இலிங்கம், இலிங்கோற்பவர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், வைரவர், வீரபத்திரர், நிருத்தமூர்த்தி, தட்சிணாமூர்த்தி, பிட்சாடனமூர்த்தி ஆகிய ஒன்பது மூர்த்திகளை வணங்குவதே மரபாகக் காணப்படுகின்றது. இவ்வடிவங்களுள் இலிங்க வடிவம் மட்டுமே கருவறைக்குள் நிறுவப்படுவது வழக்கம். எனினும் வீரபத்திரர், பைரவர் ஆகியோரின் உருவத்திருமேனிகளையும் கருவறைக்குள் நிறுவி வழிபடுவது, சைவ வழிபாட்டின் முதிர்ச்சி நிலையைக் காட்டுவதாகக் காணப்படுகின்றது. இந்தவகையிலே இலிங்கம், வீரபத்திரர், பைரவர் ஆகிய மூன்று சிவவடிவங்களும் தனிப்பெருஞ் சிறப்புப் பெற்றவையாக விளங்குகின்றன.

மும்மூர்த்திகளாகப் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகியோர் கருதப்படுகின்றனர். இவர்களுள் படைத்தல் தொழிலைப் புரிந்துவரும் பிரம்மதேவனுக்கு அவதாரம் கிடையாது காத்தற் கடவுளாகிய விஷ்ணுபகவானுக்கு மாத்திரமே அவதாரங்கள் உண்டு. சிவனுக்கு அவருடைய அம்சமாக அவதாரம் கிடையாது. ஆனால், அவருடைய சக்தியினால் சிவ அம்சமான வீரபத்திரர், காலபைரவர் போன்ற பல சொரூபங்கள் காணப்படுகின்றன. இவர்களை அவதாரங்களாகக் கருதாது, சிவகணங்களிலே, சிவமூர்த்தங்களிலே சேர்ப்பதே மரபாகக் காணப்படுகின்றது. இந்த வகையிலே சிவமூர்த்தமாகக் கருதப்படும் வீரபத்திரசுவாமி, சக்தி அம்சமான பத்திரகாளியோடு எழுந்தருளி அருள்பாலிக்கும் சிறப்பு, மிக மிக விசேடமானது. இத்தகைய பெருமை பெற்ற சைவத்தின் அறிவுமுதிர்ச்சியை எடுத்தியம்பும் வீரபத்திரமூர்த்தி வழிபாடு, உடுப்பிட்டியில் பல்லாண்டு காலமாகப் போற்றப்பட்டு வருகின்றது.

சிவன், சக்தி, கணபதி, முருகன், போன்ற தெய்வங்களைப்பற்றிச் சைவமக்கள் அறிந்தளவிற்கு, வீரபத்திர மூர்த்தியின் தோற்றம் பற்றிப் பெரிதாக அறியவில்லை. வீரபத்திரமூர்த்தியின் சிவாம்சத் தோற்றத்தினைப் புராணக் கதைகள் விளக்கியுள்ளன. புராணவரலாறு என்பது மிகப் பழமையான வரலாறு என்பதைக் குறிக்கும் சொல்லாட்சியாகவே விளங்குகின்றது. சிவபரத்துவத்தினையும், சிவவேள்வியின் சிறப்பினையும், வேள்வியில் வழங்க வேண்டிய அவிப்பாகத்தின் முக்கியத்துவத்தினையும் உலகிற்கு உணர்த்தி நிற்கும் சிவனின் உக்கிர வடிவமே வீரபத்திர மூர்த்தி என்பதைப் புராணக் கதைகள் வாயிலாக அறியலாம். சிவமகா புராணம், பிரமபுராணம், கூர்மபுராணம், இலிங்கபுராணம், வராகபுராணம் ஆகியவற்றிலே வீரபத்திரமூர்த்தியின் தெய்வீக வரலாற்றை விரிவாக அறியலாம்.

நியாய தர்மங்களை நிலைநாட்டித் தீயவற்றைச் சங்காரம் செய்யச் சக்தி கொண்ட பல்வேறு தோற்றங்கள் பற்றிய கதைகளைப் புராணங்கள் கூறியுள்ளன. இவற்றுள் தக்கனின் மகளாக அவதரித்து உயிர்களைக் காத்தருளிய தாட்சாயணியின் தோற்றம் சிறப்பானது. ஒரு சந்தர்ப்பத்திலே தாட்சாயணியின் தந்தையாகிய தக்கன், யாகம் ஒன்றை நிகழ்த்தினான். தீயோர் வசப்பட்ட தக்கன், சங்காரனாகிய சிவனுக்கு அவி பாகத்தைக் கொடாது அவமதிக்கும் முக்கிய நோக்குடனேயே இந்த யாகத்தை நிகழ்த்தினான். சிவனைத் தவிர ஏனைய தேவர்களை அழைத்து யாகம் நிகழ்த்தப்பட்டது. தந்தையாரால் நிகழ்த்தப்படும் யாகத்தைக் காண விரும்பிய தாட்சாயணிதேவி, சிவன் தடுத்ததையும் பொருட்படுத்தாது, யாகம் நடைபெற்ற இடத்திற்குச் சென்றார்.

வளரும்...


# கேரளா மூலிகை மருத்துவம்

## வைத்திரயர் - சஞ்சீவ ராஜூ

பரம்பரை மூலிகை வைத்தியசாலை
பதினொரு பரம்பரையாக நாடி பார்த்து உங்களது உடம்பிலிருக்கும் நோய்களைக் கண்டறிந்து அதற்கேற்ற மருந்துகளை தருகின்ற வைத்தியர் பரம்பரையைச் சேர்ந்த சஞ்சீவ ராஜூ இந்தியா முதல் மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று மருத்துவம் செய்த பின் தற்போது கனடா வந்துள்ளார்.

பல இடங்களில் மருத்துவம் செய்து நம்பிக்கை இழந்து விட்டீர்களா? கவலைப் பட வேண்டாம். பக்க விளைவுகளற்ற தகுந்த மருந்துகளைப் பெற்று உங்கள் வருத்தங்கள் குணமாக ஒரு முறை நம்மிடம் வாருங்கள். நல்ல தீர்வு பெற்றுச் செல்லுங்கள். இலவச ஆலோசனை வழங்கப்படும்.





வேர், பச்சை இலைகள், பட்டைகள், கிழங்குகளில் இருந்து பெறப்பட்டு பொடியாக, கசாயமாக, குளிசைகளாக, லேகியமாக இந்த இயற்கை மருந்துகள் தரப்படும்.
எந்தவித பக்க விளைவுகளும் கிடையாது! நம்பி வாருங்கள்!
நலமுடன் வாழுங்கள்!

ஆஸ்துமா, அலர்ஜி, மூச்சுத்திணறல், தும்மல், நெஞ்சுச்சளி, தோல் வியாதி சொறி யாஸிஸ், முடக்குவாதம், மூட்டு வலி, வயிற்றுவலி, இடுப்பு வலி, முதுகு வலி, கை-கால் வலி, கழுத்துவலி, ஒற்றைத் தலைவலி, பக்க வாதம், நரம்புத் தளர்ச்சி, நீரழிவு (சர்க்கரை வியாதி), சிறுநீரகக்கற்கள், வாய்வுத் தொல்லைகள், குடற் புண், இரத்த பலம் அபிவிருத்தி, ஆண்களுக்கான பிரச்சனைகள், ஆண்மைக் குறைவு, உடல் பருமன்-குறைக்க, கூட்டுவதற்கு, முடி உதிர்தல், ஞாபக மறதி, உள்மூலம், வெளிமூலம், பகந்திரி மூலம், கால் வெடிப்பு, மஞ்சட்காமாலை, வெண்குஷ்டம், பெண்களுக்கான மாதவிடாய்ப் பிரச்சனை, நெஞ்செரிதல், மலச்சிக்கல், செக்ஸ் பிரச்சினை, மன அழுத்தம், காக்கா வலிப்பு, ஞாபக மறதி, சரவாங்கி போன்ற நோய்களை மூலிகை வைத்தியம் மூலம் குணப்படுத்த முடியும். அத்துடன் கர்ப்பப்பை கோளாறுகள், குழந்தையின்மைக்கான மருத்துவத்துடன், சகல நோய்களுக்கும் சிகிச்சை செய்யப்படும். அத்துடன் போதைப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தை மறப்பதற்கான மருந்துகளும் தரப்படும்.

2900 MARKHAM ROAD, MajesticCity UNIT L 13 ,
OPP. VASANTHAM SUPER MARKET, MARKHAM RD,
SCARBOROUGH, ON, M1X 1E6

647-294-3189

# தமிழ்வழிக் கல்வி பயின்றோர்க்கு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை: முதல்வர் ஸ்டாலினிடம் தமிழ் அமைப்புகள் கோரிக்கை

தமிழ்வழிக் கல்வி பயின்றோர்க்கு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை தர வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முதல்வர் ஸ்டாலினிடன் தமிழ் அமைப்புகள் முன்வைத்தன. தமிழ்க் குயில் இலக்கியக் கழகம், தமிழ் எழுச்சிப் பேரவை, பம்பப் படையூர் இராசராசன் வரலாற்று மையம், குடந்தை இராசராசன் பண்பாட்டு மையம், சோழமண்டல வரலாற்றுத் தேடல் குழு, உத்ரா அறக்கட்டளை, தஞ்சைத் திருமூலர் தவமையம், குவைத், இலங்கை, கொரியா, பிரான்சு முதலிய நாடுகளின் தமிழ் அமைப்புகள், இலண்டன் பல்கலை தமிழ்த்துறை மீட்டுருவாக்கக் குழு ஆகியவற்றின் சார்பில் தமிழறிஞர்கள் தமிழக முதல்வர் ஸ்டாலினைச் சந்தித்தனர்.

இதில், தமிழ் எழுச்சிப் பேரவையின் செயலர், முனைவர் பா.இறையரசன் தலைமையில், ராசராசன் வரலாற்று ஆய்வு மையத் தலைவர் பம்பைப் படையூர் எஸ்.கே.சீதரன், தமிழாய்வு மன்றம் தமிழ்ப் பேராசிரியர் பாரதிதாசன், இராசு மாசிலாமணி, எழுத்தாளர் அறிவழகன், இராசராசன் பண்பாட்டு



மையம் கதிரவன், கார்த்திகேயன் முதலிய 7 பேர் பூம்புகார் அகழாய்வு, கீழடி அருங்காட்சியகம், அரசுப் பள்ளிகளில் பயின்றோர்க்கு முன்னுரிமை, தமிழில் கையொப்பம் முதலிய பல தமிழுக்கான நலம் தரும் அறிவிப்புகளுக்கு நன்றி கூறி, 20 கோரிக்கைகள் உள்ளடங்கிய மனுவும் முதல்வர் ஸ்டாலினிடம் வழங்கப்பட்டது.மனுவில் இடம்பெற்றுள்ள கோரிக்கைகள் விவரம்:1.தமிழ்வழிக் கல்வி பயின்றோர்க்கு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை தரவேண்டும்.2. பழையாறையில் மங்கையர்க்கரசியார் விழா மீண்டும் நடத்த வேண்டும், உடையாளூர் இராசராசன் புதையிடத்தில் (சமாதியில்) மணிமண்டபம் கட்ட வேண்டும், திருப்புறம்பயம் போர்க்களமும் நடுகற் கோயில்களும் முதலிய சோழர் கால வரலாற்றிடங்கள் பாதுகாக்கப் பெறவேண்டும்.

இராசராசன் வரலாற்றைக் குழந்தைகளிடம் கொண்டு சேர்க்கும் வகையில் பொன்னியின் செல்வன் பட காமிக்ஸ் பள்ளிகளில் பாடமாகப் பெறவேண்டும்.3, சென்னை விமான நிலையத்தின் எதிரில் பல்லாவரம் மலைமேல் உலகின் முதல் கற்கோடரித் தொழிற்சாலை எனப் பலகை வைத்து, அடிவாரத்தில் அருங்காட்சியகம் அமைக்க வேண்டும்.4. வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழ் கட்டாயம் இடம் பெற வேண்டும்.5. இலண்டன் பல்கலைக்கழக தமிழ்த்துறை மீண்டும் புத்துருவாக்கம் பெறத் தமிழக அரசு நிதி உதவி புரிய வேண்டும்.என்பன உள்ளிட்ட 20 கோரிக்கைகள் முதல்வரிடம் அளிக்கப் பெற்றன. ஆவன செய்வதாக முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

# ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு 3 ஆயிரம் கிலோ ஹெராயின் கடத்தல்: கைதான சென்னை தம்பதிக்கு தலிபான்களுடன் தொடர்பா என தீவிர விசாரணை



குஜராத்தில் 3 ஆயிரம் கிலோ ஹெராயின் போதைப் பொருள் சிக்கிய விவகாரத்தில் கைதாகியுள்ள சென்னை தம்பதிக்கு ஆப்கன் தலிபான் தீவிரவாதிகளுடன் தொடர்பு உள்ளதா என்ற கோணத்தில் தமிழக காவல் துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.கடந்த வாரத்தில் ஈரானின் பண்டார்அப்பாஸ் துறைமுகத்தில் இருந்துகுஜராத்தின் முந்த்ரா துறைமுகத்துக்கு வந்த 40 டன் எடையுள்ள கன்டெய்னர்களை அதிகாரிகள் ஆய்வுசெய்தனர். அப்போது, அதில் 3 ஆயிரம் கிலோ ஹெராயின் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதன் சர்வதேச மதிப்பு ரூ.21 ஆயிரம்கோடி ஆகும்.

ஹெராயின் போதைப் பொருள், ஆப்கானிஸ்தானில் இருந்து ஈரான்வழியாக இந்தியாவுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த கன்டெனர்கள் குஜராத் துறைமுகத்தில் இருந்துலாரிகள் மூலம் டெல்லிக்கு அனுப்பப்பட இருந்ததும் தெரியவந்தது. இதுதொடர்பாக மத்திய வருவாய் புலனாய்வுத் துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.ஹெராயின் இருந்த கன்டெய்னர்களை ஈரானில் இருந்து ஆந்திர மாநிலம் விஜயவாடாவை சேர்ந்த ஆஷிடிரேடர்ஸ் என்ற ஷிப்பிங் நிறுவனம் இறக்குமதி செய்துள்ளது.

விஜயவாடாவை சேர்ந்த தம்பதியரான சுதாகர் வைசாலிதான் அதன் உரிமையாளர்கள். இவர்கள் கடந்த 20 ஆண்டுகளாக சென்னை போரூர் அடுத்த கொளப்பாக்கத்தில் வசிக்கின்றனர் என்பதும் தெரியவந்தது.இதைத் தொடர்ந்து, கொளப்பாக்கம் வீட்டில் இருந்து சுதாகர், வைசாலியை மத்திய வருவாய் புலனாய்வு துறையினர் கைது செய்து குஜராத் அழைத்துச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.இந்த நிலையில், சென்னை தம்பதியர் குறித்து தமிழக கியூ பிரிவு போலீஸார், மாநகர போலீஸார், மத்திய உளவுத்துறை அதிகாரிகளும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆப்கனில் இருந்து ஹெராயின் வந்துள்ளதால், தம்பதிக்கு தலிபான் தீவிரவாதிகளுடன் தொடர்பு உள்ளதா என்றகோணத்திலும் விசாரணை நடக்கிறது. சென்னை ஈக்காட்டுதாங்கலிலும் ஆஷி டிரேடர்ஸ் அலுவலகம் உள்ளது. இந்த அலுவலகம் மற்றும் இவர்களுடன் தொடர்பில் இருந்த சென்னை, கோவையில் உள்ள பிற ஷிப்பிங் நிறுவனங்களிலும் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கொளப்பாக்கத்தில் உள்ள வைசாலி தந்தையிடமும் விசாரணை நடந்துள்ளது.இதற்கிடையில், சுதாகர் வைசாலியிடம் நடத்தப்பட்ட விசாரணையில், ''கரோனா பொது முடக்கத்தால் பணி வாய்ப்பு இல்லாததால், ஏற்றுமதி இறக்குமதி உரிமத்தை வேறொருவருக்கு வாடகைக்கு விட்டுள்ளோம். எங்களுக்கும், ஹெராயின் கடத்தலுக்கும் தொடர்பு இல்லை'' என்று தெரிவித்துள்ளனர்.இது உண்மையா, அப்படியானால், ஹெராயின் கடத்தியது யார் என்று விசாரணை நடந்து வருகிறது.

# தமிழகத்தில் ஏற்றுமதியை மேம்படுத்த தலைமைச் செயலர் தலைமையில் குழு: ஆண்டுக்கு இருமுறை கூடி விவாதிக்க நடவடிக்கை

தமிழகத்தில் ஏற்றுமதியை மேம்படுத்த தலைமைச் செயலர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு, ஆண்டுக்கு இருமுறை கூடி, ஏற்றுமதி நிலைப்பாடு தொடர்பாக ஆய்வு செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் நேற்று முன்தினம்நடந்த 'ஏற்றுமதியில் ஏற்றம் முன்னணியில் தமிழ்நாடு' என்ற தமிழ்நாடு ஏற்றுமதி மாநாட்டில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழகத்தில் ஏற்றுமதியை மேம்படுத்த தலைமைச் செயலர் தலைமையில் குழுஅமைக்கப்படும் என்று அறிவித்தார்.

இதுகுறித்து, முதல்வர் நேற்று வெளியிட்ட ஏற்றுமதிக்கான கொள்கையில் கூறியிருப்பதாவது:தலைமைச் செயலர் தலைமையில் மாநில ஏற்றுமதி மேம்பாட்டு குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது. இக்குழு, சரக்கு கையாளுதல், விவசாயம், ஏற்றுமதி சேவை, மத்திய, மாநில அளவில் வர்த்தகம் தொடர்பான அனைத்துவிதமான சிக்கல்களையும் தீர்க்கும் வகை யில் செயல்படும்.இந்தக் குழுவில், நிதித்துறை செயலர், தொழில்துறை செயலர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை செயலர், வேளாண்துறை செயலர், கால்நடை பராமரிப்பு, பால் மற்றும்மீன்வளத் துறை செயலர், குறு,சிறு, நடுத்தர தொழில்கள் துறைசெயலர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். தமிழக அரசின்தொழில் வழிகாட்டி பிரிவு மேலாண்இயக்குநர் ஒருங்கிணைப்பாள ராகவும், அயல்நாட்டு வர்த்தக கூடுதல் இயக்குநர் ஜெனரல் துணை ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுவர்.

இதுதவிர ஏற்றுமதி கவுன்சில், சங்கம் ஆகியவற்றின் சார்பில்தலா ஒரு உறுப்பினர் என 6 பேர் இடம் பெறுவார்கள்.குறைந்தபட்சம் ஆண்டுக்கு இருமுறை கூடி, ஏற்றுமதி நிலைப்பாடு தொடர்பானவற்றை ஆய்வு செய்யும். குழு கூட்டத்தில் வேறுஎந்த துறை சார்ந்த அதிகாரிகளையும் பங்கேற்க அழைக்கும் அதிகாரம் குழுவின் தலைவரான தலைமைச் செயலருக்கு வழங்கப்பட்டுள் ளது.இதுதவிர, தொழில்துறை செயலர் தலைமையில் செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது, மத்திய அரசுடன் ஏற்றுமதி தொடர்பான விஷயங்களில் ஒருங்கிணைப்புப் பணிகளைமேற்கொண்டு ஏற்றுமதியாளர்களின் பிரச்சினைகளை ஆய்வு செய்யும். இந்த குழு 2 மாதங்களுக்கு ஒருமுறை கூடி, எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மாநில ஏற்றுமதி மேலாண்மை குழுவுக்கு அறிக்கை அளிக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஒரு லட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டம்: முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்


ஒரு லட்சம் தமிழக விவசாயிகளுக்கு இலவசமாக மின் இணைப்பு வழங்கும் திட்டத்தைத் தமிழக முதல்வர் ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். தமிழகத்தில் சட்டப்பேரவையில் நடைபெற்று முடிந்த மானியக் கோரிக்கையில் வெளியான அறிவிப்புகளின் அடிப்படையில் ஒரே ஆண்டில் ஒரு லட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கக்கூடிய திட்டம் இன்று தொடங்கி வைக்கப்பட்டது.

4 லட்சத்துக்கும் அதிகமான விவசாயிகள் மின் இணைப்புக்காகப் பதிவு செய்துள்ள நிலையில், முதல் கட்டமாக ஒரு லட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தை இன்று தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.திட்டத்தைத் தொடங்கி வைத்து ஸ்டாலின் பேசியதாவது:"விவ சாயிகளுக்கான ஒரு லட்சம் மின் இணைப்புகள் திட்டம் மகத்தானது. விவசாயிகளின் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த மே மாதம் 7ஆம் தேதி நான் பதவி ஏற்கவில்லை. பொறுப்பை ஏற்றேன் என்றுதான் சொல்ல வேண்டும்.தமிழ்நாடு மின்வாரியத்தைக் கடந்த 10 ஆண்டுகளாக அதிமுக ஆட்சியில் சரியாகப் பராமரிக்கவில்லை. 19 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் 2 லட்சம் விவசாயிகளுக்குத்தான் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், நான்கு மாதத்திலேயே விவசாயிகளுக்கு மின் இணைப்பு தரும் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளோம். தற்போது தமிழகத்தில் நடந்துவரும் திமுக ஆட்சி உழவர்களுக்கானது. தற்போது திமுக ஆட்சியில் அமைச்சர்கள் போட்டிபோட்டுக் கொண்டு தங்கள் பணிகளைச் செய்து வருகின்றனர். இதைவிட வேகமான ஆட்சி தமிழகத்தில் எந்த மாநிலத்திலும் நடைபெறவில்லை''. இவ்வாறு ஸ்டாலின் பேசினார்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 - 06 - 1934



மறைவு
15 - 09 - 2021

**யாழ். நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா Stouffville, யாழ். நல்லூர் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட முத்துப்பிள்ளை கதிரவேலு அவர்கள் 15-09-2021 புதன்கிழமை அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.**

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகேந்திரர் நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமநாதர் பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகளும்,
காலஞ்சென்ற கதிரவேலு அவர்களின் அன்பு மனைவியும்,
நாகம்மா, காலஞ்சென்ற கந்தையா, காலஞ்சென்ற யோகம்மா மற்றும் கண்மணி, பசுபதிப்பிள்ளை, பேரம்பலம், காமாட்சி(சரசு), தனபாக்கியம், விஜயரட்ணம்(குமார்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,தங்கராணி(ராணி- கனடா), யோகநாதன்(யோகன்- நோர்வே), சத்தியராணி(கௌரி-கனடா), கிரிதரநாதன் (கண்ணன்- கனடா), குகநாதன்(குகன்- நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும்,
லிங்கம், மாரிட், ஜெயக்குமார், ஷாமினி, டலிதா ஆகியோரின் பிரியமுள்ள மாமியாரும், பரமேஸ்வரி, யோகம்மா ஆகியோரின் அருமை மாமியாரும்,
பிரசாத், பிரகாஷ், வைஷ்ணவி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும்,
பிரவீன், பிரசான், ஹன்சியா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும்,
காலஞ்சென்றவர்களான செல்லையா, அம்பலவாணர், கணபதிப்பிள்ளை, மேரி சபீனா மற்றும் இராஜேஸ்வரி, தனலட்சுமி, சண்முகரட்ணம், முத்துக்குமார், பேரின்பதேவி, காலஞ்சென்றவர்களான இராசரட்ணம், தர்மலிங்கம், ஆறுமுகம், செங்கமலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,
காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் முத்துப்பிள்ளை, காலஞ்சென்ற சோதிமணி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

## திருமதி முத்துப்பிள்ளை கதிரவேலு

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

**குடும்பத்தினர்**
வீடு : +19056426491
லிங்கம் - மருமகன் Mobile : +14166253635
ராணி - மகள் Mobile : +16472231027
யோகன் - மகன் Mobile : +4797069450
கௌரி - மகள் Mobile : +14163153887
கண்ணன் - மகன் Mobile : +16473008884
குகன் - மகன் Mobile : +4790217795
ஜெயக்குமார் - மருமகன் Mobile : +16479722167

**அன்னாரின் பூதவுடல்** (8911 Woodbine Ave Markham, ON L3R 5G1, Canada) இல் அமைந்துள்ள **Chapel Ridge Funeral Home & Cremation Centre** இல் 25.09. 2021அன்று சனிக்கிழமை மாலை 6:00 மணிமுதல் 9:00 வரையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 26.09. 2021 மதியம் 1:00 மணிமுதல் 1:30 வரையும் **பார்வைக்கு வைக்கப்பட்டு, மாலை** 1:30 மணிமுதல் 3:00 **வரையும் கிரியைகள் நடைபெற்று, பிற்பகல் 3.30 மணிக்கு** 12492 Woodbine Avenue, Gormley,Ontario, L0H 1G0, Canadaல் அமைந்துள்ள **Highland Hills Crematorium** இல் **தகனம் செய்யப்படும்.**

# மரண அறிவித்தல்

**பிறப்பு:** **28-12-1948**
**இறப்பு:** **18-09-2021**



## Dr. செல்வத்துரை குருபாதம்

Multipotentialite, Paralegal, எழுத்தாளர், ஆய்வாளர், யாழ் ஈழநாடு பத்திரிகையின் உதவி ஆசிரியர், நூலகர்

**மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மலேசியா Kuala Lumpur, யாழ்ப்பாணம், கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வத்துரை குருபாதம் அவர்கள் 18-09-2021 சனிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.**

அன்னார் காலஞ்சென்ற மு. செல்வத்துரை (Superintendent of Railways, Malaysia) - பொற்கொடி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற பரம்சோதி (ஆசிரியர்) - செல்வரத்தினம் தம்பதிகளின் அன்புமிகு மருமகனும்,
ஜெயஜோதி குருபாதம் (ஆசிரியர் Toronto கனடா, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு கணவரும்,
சிவானந்தன், பரஞ்சோதி, கமலாசினி, சேதுபதி, ஜெயசோதி, செல்வசோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,
காலஞ்சென்ற கோசலாதேவி, மகாராணி, இராஜகுலேந்திரன், சந்திராதேவி, முகுந்தாதேவி, சுதர்சினி ஆகியோரின் மைத்துனரும்,
இரத்தினஜோதி, பத்மஜோதி சுந்தரேசன், உருத்திரஜோதி விமலதேவன், குணஜோதி சுகன்யா, பிறேமஜோதி சுசீலா ஆகியோரின் மைத்துனரும்,
ஜீவகன், இரட்சகன், காலஞ்சென்ற வாசுகன், சுபாசகன், சங்கீதா லக்சன், சங்கவி ஷியாமி ஆகியோரின் மாமனாரும்,
சோபனா, கோகுலன், அகிலன், விமலன், இராகுலன் ஆகியோரின் சித்தப்பாவும்,
தர்ஷன், தர்ஷனி, ஆதித்தன், அபிஜித்தன் துளசி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1 இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home & Cremation Centre இல் *22-09-2021* புதன்கிழமை மாலை *6:00* மணிமுதல் *9:00* மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு, *23-09-2021* வியாழக்கிழமை காலை *8:00* மணிமுதல் *10:00* மணிவரை 12492 Woodbine Avenue, Gormley, ON L0H 1G0 இல் அமைந்துள்ள Highland Hills Crematorium இல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**தொடர்புகளுக்கு:**
ஜெயா (மனைவி): (416) 398-7241
செல்வசோதி செல்வத்துரை (சகோதரன்): (647) 297-8385
குணே பரம்சோதி (மைத்துனர்): (519) 635-3938
பிறேம் பரம்சோதி (மைத்துனர்): (647) 646-4212

# அன்பின் தொனி - 624

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள் -** Be Holy

### பரிசுத்தம் என்றால் என்ன?

பரிசுத்ததைக் குறித்து மேலே பார்த்த விடயங்களை நோக்குமிடத்து, "பரிசுத்தம்" என்றால் என்ன என்ற கேள்வி எழும்புகிறது. பரிசுத்த நிலையில் இருப்பதை பரிசுத்தம் என்கிறோம், அது ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையின் நிலையை வெளிப்படுத்துகிறது. அது ஒரு ஆலயத்தையோ, சபையையோ, ஒரு சமயப் பிரிவையோ சார்ந்தவர்களைக் கருதுவதல்ல. அல்லது ஒரு ஆலயமோ, சபையோ, அவற்றின் பெயர்களிலே "பரிசுத்தம்" என்ற சொல்லை வைப்பதனால் அதைச் சேந்தவர்கள் பரிசுத்தமாகிவிட முடியாது. அதேவேளை சில சந்தற்பங்களில் அப்படிப் பெயரையுடைய ஆலயத்தில் அல்லது சபையயில் உள்ளவர்கள் உண்மையாகவே பரிசுத்தர்களாய் இருக்கலாம். இப்படியாக பரிசுத்தம் என்றால் என்னவென்பதை தெளிவுபட அறிந்து செயற்படவேண்டும்.

அடுத்து வரக்கூடிய கேள்வி "எப்படி பரிசுத்தமில்லாத ஒரு பாவி, பரிசுத்தம் அடையலாம்?". மேலும், "அவன் பரிசுத்தம் அடைந்தபின் எப்படி பாவமான சூழ்நிலையிலும், பாவச்சோதனைகளிலும் தன் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்வான்?". இக்கேள்விகளுக்குப் பதிலாக நாம் அறிந்துகொள்ளவேண்டியது: முதலாவது தேவனால் ஒரு அற்புதம் நடவாமல் ஒரு பாவி பரிசுத்தமாக்கப்படவோ, தொடர்ந்து அதில் நிலைத்திருக்கவோ முடியாது. "தேவனால் சகலதும் கூடும்" மேலும் வேதத்தில் சொல்லப்பட்ட பிரகாரம் தேவனுடைய கட்டளைகளின்படி நடக்கவேண்டும்.

ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். நீங்கள் முன்னே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படியே இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து, உங்களை அழைத்தவர் பரிசுத்தராகியிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லா வற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. அன்றியும் பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுது கொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள். உங்கள் முன் னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்துவந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளி யினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. **- 1 பேதுரு 1: 13-19**

### அற்புதத்தின் முதற்பகுதி

அற்புத்தின் முதற்பகுதியாக ஒரு பாவி, தான் பாவி என்பதை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதற்காக மனஸ்தாபப் பட்டு, விசுவாசத்தோடும் ஜெபத்தோடும் இயேசுவிடம் வரவேண்டும். அப்பொழுது அவன் தேவனுடைய கிருபை வரமாக இலவசமான இரட்சிப்பையும், நித்திய ஜீவனின் நிச்சயத்தையும், ஆவியின் வழி நடத்துதலையும் கிறிஸ்து இயேசு மூல மாக பெற்றுக்கொள்கிறான்.

பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். **- ரோமர் 6: 23**

இப்படியாக ஒரு பாவி ஒரு புதுப்பிறவியாக, பழயன ஒழிந்து சகலதும் புதியனதாக, வாஞ்சையோடு தனது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உணவாக வேத வசனத்தைப் படிப்பதிலும், ஜெபிப்பதிலும், ஆவிக்குரிய வல்லமையோடு பாவச் சோத னையை எதிர்த்து நிற்கவும் முற்படுகிறான். அப்பொழுது தேவன் அவனுக்குக் கொடுத்த பரிசுத்த ஆவியினால் அவனை ஒரு புதுப்பிறவியாக்குகிறார்.

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது, அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். **- 2 கொரி. 5: 17-18**

### அற்புதத்தின் இரண்டாம் பகுதி

அற்புதத்தின் இரண்டாவது பகுதியாக இரட்சிக்கப்பட்ட மனிதனுக்குள் தேவன் நற் கிரிகைகளை நடப்பிற்கிறார். ரோமர் ஆறாம் அதிகாரத்தில் எழுதியிருக்கிற பிரகாரமாக:

ஆகையால் என்னசொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமோ? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த் தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே. ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித் தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம், மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற் கென்று ஒரேதரம் மரித்தார், அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். **- ரோமர் 6: 1-10**

தொடரும்...


# 9ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். குணசிங்கம் கந்தசாமி



உடுப்பிட்டி சன்னிதி வீதியை பிறப்பிடமாகவும், கனடா - ஸ்காபுறோவை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர். குணசிங்கம் கந்தசாமி அவர்களின்

**ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி**

எம் இதயங்களில் ஒளி வீசிய பூரண நிலவே!
எம் கண்களில் நீர் வரவழைத்தே மறைந்ததேனோ
எம் அருமை தந்தையே!
வாழ்வே மாயமென்று எமக்கு உணர்த்திவிட்டு சென்றனையோ!
பூரண வாழ்வை வாழ்ந்து களித்து விட்டேன் என்று
பூரண நிம்மதியுடன் எம்மைத் தவிக்க விட்டுச் சென்றனையோ!
நல்ல கணவராய் பாசமிகு தந்தையாய்! ஆசை மாமனாய்!
பிரியமிகு தாத்தாவாய்! அன்புச் சகோதரராய்!
குடும்ப ஒளிவிளக்காய்! பண்பிற்கோர் இலக்கணமாய்!
ஊர் போற்ற வாழ்ந்த உத்தமரே!
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த எம் அருமை தெய்வத்திற்கு
எமது அஞ்சலிகள்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05-02-1936 | 07-10-2012 |

என்றும் உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**தகவல்**
**குடும்பத்தினர் 416-432-5499**

# மரண அறிவித்தல்



**மலர்வு:**
**09 - 09 - 1933**

**உதிர்வு:**
**16 - 09 - 2021**

# டாக்டர் அன்னபூரணம் ஞானசம்பந்தர்

**யாழ். கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வதிவிடமாகவும், கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அன்னபூரணம் ஞானசம்பந்தர் அவர்கள் 16-09-2021 வியாழக்கிழமை அன்று கனடாவில் சிவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா (ஆசிரியர்) - இலட்சுமிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான Dr. சரவணமுத்து - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற Dr. எஸ். எஸ். ஞானசம்பந்தர் அவர்களின் பாசமிகு மனைவியும்,

சாந்தி (ஜேர்மனி), சந்திரகுமார் (கனடா), மாலதி (பிரித்தானியா), சுமதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லியனாராச்சி, முரளீதரன், சுரேந்தினி, ஆனந்தசீலன், அருள்ராஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,

காலஞ்சென்றவர்களான தனலட்சுமி, பிறைசூடி, அரியமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம், பரமேஸ்வரி மற்றும் வேலாயுதம் (ஐக்கிய அமெரிக்கா), காலஞ்சென்றவர்களான எஸ். ஆர். ரட்ணராசா, Dr. சோமசுந்தரம், சாவுச்சியம் தம்பிஜயா, Dr. பாலசந்திரன், தில்லைராஜேஷ்வரி ராமலிங்கம், தில்லைநாயகி துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

கௌசலா, பத்மினி, விக்னராஜ், நிர்மலா, வசந்தலா, குகராஜ் ஆகியோரின் பாசமிகு சிறியதாயும், சத்தியவாணி, சத்தியானந்தன், சத்தியசீலன், சத்தியதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுபேந்திரன் (ஐக்கிய அமெரிக்கா) அவர்களின் பாசமிகு பெரியம்மாவும்,

பூர்ணிமா, டினித்தி, அஞ்சலி, ஜனகன், சாதனா, பிரகாஷ், ஜனன், ஹஷ்வீன், ஹஷ்வீனா, சயந்தன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், லியோன், வின்சன், பவுலா, மக்சிமிலியான், லெனி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 4164 Sheppard Avenue East, Scarborough, ON M1S 1T3 இல் அமைந்துள்ள Ogden Funeral Homes இல் *24-09-2021* வெள்ளிக்கிழமையும், *25-09-2021* சனிக்கிழமையும் மாலை *5:00* மணிமுதல் *8:00* மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு, *26-09-2021* ஞாயிற்றுக்கிழமை காலை *10:30* மணிமுதல் பி.ப. *12:30* மணிவரை கிரியைகள் செய்யப்பட்டு, பி.ப. *1:00* மணிமுதல் *1:30* மணிவரை Highland Hils இல் குடும்பத்தினரால் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

***நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் அசாதாரண சூழ்நிலை காரணமாக அன்னாரின் இறுதி நிகழ்வில் 40 பேர் மட்டுமே கலந்து கொள்ளமுடியும். கலந்து கொள்ள விரும்புபவர்கள் சந்திரகுமார் (613) 266-0411 என்ற தொடர்பு இலக்கத்தை தொடர்பு கொண்டு முன் பதிவு செய்யுமாரு கேட்டுக்கொள்கின்றோம்.***

***26-09-2021 ஞாயிற்றுக்கிழமை காலை 10:15 மணிக்கு நேரடி ஒளிபரப்பு:***

***https://event.forgetmenotceremonies.com/ceremony/?c=14f0e0c9-677f-4e60-9fd3-7cbcf8668f3c***

**தகவல்: குடும்பத்தினர்**

**<u>தொடர்புகளுக்கு:</u>**

**சந்திரகுமார் - மகன் (கனடா): (613) 266-0411 / சுமதி - மகள் (கனடா): (416) 627-7202**

**மாலதி - மகள் (பிரித்தானியா): 44 7908 020084 / சாந்தி - மகள் (ஜெர்மனி): 49 176 47885393**

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

25 வது வெள்ளி விழா 2021
UTHAYAN உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE
TRANSMISSION
RUSTPROOFING
OILCHANGE
TYRES
AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5
Scarborough, ON M1P 2S3

உதயம் 1329 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 24, 2021

# ‘இந்த தேர்தல் வெற்றியானது எனக்குரியது மட்டுமல்ல. அதற்காக உழைத்த எம் இளையோர் சமூகத்திற்கும் சொந்தமானதாகும்’

## கனடா பொதுத் தேர்தல் வெற்றிவிழாவில் ஸ்காபுறோ பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி உணர்ச்சி பொங்க அறிவிப்பு



*( ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)*

““கனடாவில் நடைபெற்று முடிந்த இந்த பொதுத் தேர்தலில் எனக்கு கிடைத்த வெற்றியானது எனக்குரியது மட்டுமல்ல. அதற்காக உழைத்த எம் இளையோர் சமூகத்திற்கும் சொந்தமானதாகும். அவர்கள் எதிர்காலத்தில் கனடாவிற்குத் தேவையான அரசியல் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் ஆர்வத்துடன் உழைத்து வருகின்றார்கள். *(தொடர்ச்சி 7ம் பக்கத்தில்)*

# SUPER SMASH-2021- Cricket Tournament in Canada






**SRILANKAN SCHOOLS CRICKET TEAMS IN CANADA ARE GETTING READY TO FIGHT ON 2nd and 3rd of October from 8.00 AM, both days.**
**VENUE;- Maple Leaf Cricket Grounds in King City.**
**An inauguration meeting took place yesterday at the Markham Convention Centre, in Scarborough, in order to make an announcement about this 'SUPER SMASH-2021'. The Sponsors for this Exciting Cricket Tournament were called upon to the Head Table and honoured by the executive committee of the 'The Unions Sport Federation of Canada'.**

# மார்க்கம் யுனியன்வில் தொகுதியில் போட்டியிட்டு மீண்டும் வெற்றியைத் தட்டிக் கொண்ட முன்னாள் அமைச்சர் Mary Ng




கடந்த திங்கட்கிழமையன்று நடந்து முடிந்த கனடிய பொதுத் தேர்தலில் மார்க்கம் யுனியன்வில் தொகுதியில் போட்டியிட்டு மீண்டும் வெற்றியைத் தட்டிக் கொண்ட முன்னாள் அமைச்சர் **Mary Ng** அவர்கள் நடத்திய வெற்றிக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் மகளிர் அமைப்புக்களை பிரதிநிதித்துவம் செய்த திருமதிகள் இந்திராணி நாகேந்திரம். சசிகலா நரேன் மற்றும் காஞ்சனா ஆகியோர் அவரைப் பாராட்டுவதை படத்தில் காணலாம்.

# இலங்கையின் பிரபல எழுத்தாளர் மு. சிவலிங்கத்தின் கைகளில் ‘உதயன்‘ வெள்ளிவிழாச் சிறப்பிதழ்



கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டு 2021 ஆகும். இதையொட்டிய சிறப்பிதழ் கடந்த ஆகஸ்ட் மாதம் கனடாவில் 104 பக்ககங்களுடன் வெளியிடப்பெற்றது.
அதன் பிரதியொன்று இலங்கையின் பிரபல எழுத்தாளர் மு. சிவலிங்கம் அவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.
இங்கு காணப்படும் படத்தில் திரு சிவலிங்கம் மற்றும் திருமதி சிவலிங்கம் ஆகியோர்களின் கைகளில் எமது “உதயன்“ வெள்ளிவிழாச் சிறப்பிதழ் தவழ்வதை காணலாம்.
செய்தி - சத்தியன்

# கனடா வாழ் தமிழ்ச் சமூகச் செயற்பாட்டாளர்கள் நால்வருக்கு ‘உதயன்‘ வெள்ளிவிழாச் சிறப்பிதழ் பிரதிகள் வழங்கப்பெற்றன









கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டு 2021 ஆகும். இதையொட்டிய சிறப்பிதழ் கடந்த ஆகஸ்ட் மாதம் கனடாவில் 104 பக்ககங்களுடன் வெளியிடப்பெற்றது அதன் பிரதிகள் அண்மையில் கனடா வாழ் தமிழ்ச் சமூகச் செயற்பாட்டாளர்கள் நால்வருக்கு வழங்கப்பெற்றன.
ஸ்காபுறோவில் இயங்கிவரும் **FRONTLINE COMMUNITY CENTRE** அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் சமூக சேவகியுமான திருமதி விஜயா குலா மற்றும் சமூக ஆர்வலரும் வர்த்தகத் துறை வெற்றியாளருமான ரஜீவ் செபராசா **(CAMSONICS SECURITY SYSTEMS INC )** ஆகியோருக்கும், “கலாபம்“ தொலைக் காட்சி நிறுவனர் சுப்பிரமணியம் ஸ்ரீநிவாசன் மற்றும் வர்த்தகப் பிரமுகரும் பொறியியலாளருமான சின்னத்துரை ஜெயக்குமார் ஆகியோருக்கும் “உதயன்“ வெள்ளிவிழாச் சிறப்பிதழை பிரதம ஆசிரியர் வழங்குவதைக் காணலாம்.
*செய்தியும் படங்களும் - சத்தியன்.*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan
Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H-Selvanayagam
Broker